கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

KARKATHAR OPPURAVU

மலர்–14, இதழ் – 9
Volume - 14, Issue - 9

ஆவணித் திங்கள்
August 2023

விலை ரூ. 25/–
Price Rs. 25/-

ஆண்டு சந்தா ரூ. 300/–
Annual Subscription Rs. 300/-


தமிழ் மாத இதழ்
Tamil Monthly

கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழா
புதுச்சேரி சிறப்பிதழ்











"Delivered by India Post"

www.indiapost.gov.in

PARVATHY
MULTISPECIALITY HOSPITAL



PICS
Parvathy Institute of Cardiac Sciences

Complete Cardiac Care In The Heart of Chromepet.

Chromepet : 241, GST Road, Chromepet, Chennai 44.

Website: www.parvathyhospital.com

Call: 044 2238 2248

10% OFFER

மகிழ்ச்சியான செய்தி

RIDE INN TRAVELITE

RIDE INN TRAVELITE

No. 10, Deivanayagam Street, Nungambakkam, Chennai -34

மிக விரைவில் மீண்டும் ஆம்னி பஸ் **RIDE INN TRAVELITE** என்ற நிறுவனம்

RIDE INN KKR

என்ற பெயரில் பஸ் இயக்க உள்ளோம் அனைவரும் தொடர்ந்து
ஆதரவு தந்து எங்கள் பஸ்ஸில் பயணம் செய்ய அன்புடன் வேண்டுகிறோம்.

NON A/C SEAT CUM SLEEPER COACH

2+1. LUXURY SEAT | LOWER SINGLE BERTH
UPPER SINGLE BERTH | UPPER DOUBLE BERTH

கூத்தாநல்லூர் TO சென்னை
சென்னை TO கூத்தாநல்லூர்

வழி-ECR, சிதம்பரம், சீர்காழி, வைத்தீஸ்வரன்கோவில், மயிலாடுதுறை, திருவாரூர்

Website: www.rideinnkkr.in
Contact No. and WhatsApp
Mohan- 93456 37456 Sindhu (KKR SURESH)- 98845 30910 Manimaran-78457 45187
Customer care mail id: assist.rideinntravellite@gmail.com

எங்கள் website **(www.rideinnkkr.in)** மூலம் அல்லது
நேரடியாக மேலே கொடுக்கப்பட்டுள்ள அலைபேசி எண்கள் மூலம்
டிக்கெட் புக்கிங் செய்பவர்களுக்கு 10% தள்ளுபடி வழங்கப்படும்

N.M.P அறக்கட்டளை

கல்வி உதவித்தொகை வழங்கும் விழா

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.



என்றும் உங்கள் ஆதரவுடன்

கஸ்தூரிபாய்®
கம்பெனி – NMP ரெடிமேட்ஸ்

Since 1943, Chidambaram.

32,33,34 மேல ரத வீதி, சிதம்பரம்.
போன்: 04144 – 222 228 | cc@kasthuribaicompany.com









சிதம்பரத்தின் அடையாளம் கஸ்தூரிபாய் கம்பெனி மற்றும் பலகாரம் .காம், பட்சனம்.காம், N.M.P அறக்கட்டளை இணைந்து பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவி தொகை காசோலையை சிதம்பரம், நகர உதவி காவல் கண்காணிப்பாளர் திரு B.**ரகுபதி** I.P.S.,அவர்களால் அறக்கட்டளை நிறுவனர் திரு **வி.முத்துக்குமார்** மற்றும் திருமதி **ஸ்ரீவித்யா முத்துக்குமார்** அவர்களின் முன்னிலையில் 58 மாணவர்களின் குடும்பங்களுக்கு ஜீலை 19, 2023 அன்று வழங்கப்பட்டது. மேலும் நமது நிறுவனத்தின் சார்பில் மாதம் இரு முறை முதியோர் இல்லத்திற்கு உணவு மற்றும் வேட்டி, சேலைகள் வழங்கப்படுகின்றன. மற்றும் நமது ஊழியர்களுக்கு மருத்துவ முகாம்கள் , இரத்ததான முகாம்கள் நடத்தப்பட்டன.

NMP CHARITABLE TRUST giving is living

KASTHURIBAI Company - NMP Readymades
Since 1943. Chidambaram.

Palagaram.com HIGH CLASS PURE VEG RESTAURANT
156, West car Street, Chidambaram.

PAKSHANAM.com sweets & savouries
The taste of tradition

சென்னை கார்காத்தார் சங்கம், புதுச்சேரி கார்காத்தார் சங்கம்
இணைந்து நடத்தும் கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழா சிறக்க வாழ்த்துகள்

Dr R NARMATHA
MODERN DENTISTRY & COSMETOLOGY
DIGITAL DENTAL CLINIC & INVISALIGN CENTER






» CLEAR ALIGNERS
» SMILE DESIGNING
» IMPLANTS
» ZIRCONIA CROWNS AND BRIDGES
» ZOOM WHITENING
» AESTHETIC RESTORATION
» SCALING & POLISHING
» VENEERS
» KIDS DENTISTRY
» MINIMAL INVASIVE DENTISTRY





More information call us
+91 88707 60249
DR_R_NARMATHA
drnarmathar@gmail.com

161, Kamatchi Amman Koil Street
(Next to Professional Courier)
Heritage Town, PONDICHERRY-01

சென்னை கார்காத்தார் சங்கம், புதுச்சேரி கார்காத்தார் சங்கம் இணைந்து நடத்தும் கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழா சிறக்க வாழ்த்துகள்

With Best Compliments From :

திருமண அழைப்பிதழ்களின் சங்கமம்



B.M.B printers

B.M. BARANI

PRINTERS ✣ STATIONERY ✣ WEDDING CARDS

All kinds of Stationery at Cost Price

- Offset Printing
- Multicolor Printing
- Stickers
- Screen Printing
- Digital Print
- Binding Works

Showroom :
No.13, Lenin Street, Kosapalayam, Pondicherry - 605 013.

Printing Unit :
No.70, 1st Main Road, Thatchinamurthy Nagar,
Sokkanathanpet, Pondicherry - 9.

☎ 0413 - 4304575 Cell : 98423 24575
E-mail : baraniprinters@gmail.com
www.bmbaraniprinters.com



சென்னை கார்காத்தார் சங்கம், புதுச்சேரி கார்காத்தார் சங்கம் இணைந்து நடத்தும் கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழா சிறக்க வாழ்த்துகள்

மகிழ் ON

MAGIZHON
Heal Assistant

Saishanaa Healthcare

Modular Operation Theatre & Equipments
Medical Devices - Rental & Sales

- ✓ Oxygen Concentrator
- ✓ BIPAP
- ✓ CPAP
- ✓ Sleep Study - Type 3

No. 66 & 67, Sri Shanmugasamy Nagar,
Thirukanchi Road, Uruvaiyar, Puducherry - 605 110.

saishanaahealthcare@gmail.com

87546 78999

Nursing Care & Caretaker at Home & Hospital

CHIDAMBARAM SPIRITUAL STAY

146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM







தில்லை நடராஜர் திருவருளாலும், சிதம்பரம் கனகசபை நகரில் ஆன்மீக சுற்றுலா பயணிகள் மற்றும் சஷ்டியப்த பூர்த்தி, பீமரதசாந்தி, சதாபிஷேகம் போன்ற சுப நிகழ்ச்சிகளுக்கு வரும் உறவினர்கள் 40 நபர் வரை தங்க ஏதுவாக A/c. வசதியுடன் கூடிய ரூம்கள் உள்ளன. மேலும் குழுவாக தங்குவதற்கு A/c. வசதி இல்லாத கூடமும் உள்ளது.

மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.

9790292444, 9790215833

இதழின் உள்ளே....

எண்: 20, ஈசுவரன் கோயில் வீதி..... 12

தமிழனின் சாதனை பட்டியல்கள்.....22

நட்சத்திங்களும் மரங்களும் 25

உடல் தானம்.....27

வெளிநாட்டு மோகம்..... 30

மணமகன் / மணமகள் தேவை..... 50–54

உடற்பயிற்சியுடன் இணையும் மனவள கிளர்ச்சி..55

சிறுவர் பகுதி..... 58–61

சங்க நிகழ்வுகள்.....62

கார்காத்தார் ஒப்புரவு
கார்காத்தார் சங்கம் (சென்னை)
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882

ஆயுள் சந்தா ரூ. 2000/-
ஆண்டு சந்தா ரூ. 300/-

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
மீ. நடராஜன்
மயூர் பிரிண்டர்ஸ்
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533

கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.

ஏடு இட்டோர் இயல்

ஜப்பான் அன்றும் இன்றும்



ஆகஸ்ட் மாதம் என்றதும் நம் நினைவுக்கு வருவது 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி நம் நாடு பெற்ற சுதந்திரம் தினம் தான் நம்மோடு சுதந்திரம் பெற்ற அண்டை நாட்டில் சுதந்திரம் படும் பாட்டைப் பார்க்கையில் நம் நாடு சுதந்திரம் அடைந்து கடந்த 76 ஆண்டுகளாக நாம் வெற்றிகரமாக சுதந்திர தினத்தைக் கொண்டாடி வருவது நமக்குப் பெருமை தரக் கூடிய விஷயம் தான்

இதே ஆகஸ்ட் மாதம் 1945 ஆம் ஆண்டு ஜப்பானில் என்ன நடந்தது என்று நினைவு கூறுவோம் அமெரிக்கா இரண்டாம் உலகப் போரின் போது "சிறு பையன்" என்று பெயரிடப்பட்ட அணுகுண்டைஜப்பானின் ஹிரோஷிமா நகர்மீது 1945, ஆகஸ்ட் 6 ஆம் நாளும், "பருத்த மனிதன்" (Fat Man) என்று பெயரிடப்பட்ட அணுகுண்டை நாகசாக்கி நகர்மீது மூன்று நாட்களுக்குப் பிறகு அதாவது ஆகஸ்ட் 9 ஆம் நாளும் வீசின. நினைத்துப் பார்க்கவும் முடியாத பேரழிவு களை ஜப்பான் சந்திக்க நேர்ந்தது.

உலக நாடுகளை நலிந்த நாடுகள் என்றும், வளர்ந்த நாடுகள் என்றும் வளரும் நாடுகள் என்றும் மூன்றாக வகைப்படுத்தலாம். இந்தியா போன்றவை வளரும் நாடுகள், அமெரிக்கா போன்ற மிகச் சில நாடுகள் வளர்ந்த நாடுகள். வளர்ந்த நாடுகளினுடைய எண்ணிக்கை மிகக் குறைந்த எண்ணிக்கைதான். ஆனால் அந்த குறைந்த எண்ணிக்கையிலே ஜப்பானும் இடம் பெற்றிருக்கிறது என்பது ஒரு பெரிய வியப்பைத் தருகிற செய்தி.

மற்ற நாடுகளெல்லாம் வளர்ந்த நாடுகளாக இருப்பதிலே இல்லாத ஒரு வியப்பு ஜப்பானுக்கு மட்டும் ஏன் என்று நினைக்கலாம் ஜப்பானுடைய நிலவியல் அமைப்பை, ஜப்பான் எதிர்கொள்கிற துன்பங்கள் நாம் கணக்கிட்டுப் பார்த்தால் வளர்ந்த நாடாக ஜப்பான் வந்திருப்பது எவ்வளவு பெரிய செயல் என்று நம்மால் உணர முடியும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் இயற்கையே ஜப்பானுக்கு எதிராகத்தான் இருக்கிறது. உலகத்தில் வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு ஆண்டுக்குச் சராசரியாக 1500 முறை நிலநடுக்கம் ஓர் ஆண்டுக்கு வருகிறது என்று சொன்னால் அதை எப்படி நம்புவது என்றும் புரியவில்லை. அந்த அளவுக்கு ஏதாவது ஒரு பகுதியில் நிலநடுக்கம் வந்துகொண்டே இருக்கிறது.

எரிமலைகளும் ஜப்பானில்தான் மிகுதி. ஏறத்தாழ 145 எரிமலைகள் ஜப்பானில் இருப்பதாகக் கணக்கிட்டு இருக்கிறார்கள். அதிலும் பாதி எரிமலைகள் இன்னமும் உயிரோடு இருக்கின்றன. எந்த நேரத்திலும் வெடித்துச் சிதறுகிற நிலையிலே இருக்கின்றன. அவர்களுடைய வாழ்க்கை என்பதே நிலையற்றதாக இருக்கிறது. ஜப்பானுக்குப் போய்வந்த நண்பர்கள் சொல்லுவார்கள், "அவர்கள் பெரும்பாலும் நிலையாக வீடுகளைக் கட்டிக்கொள்வதில்லை. எந்த நேரத்திலும் அங்கிருந்து இடம் பெயர்ந்து விடுவதற்கு ஏதுவாகத்தான் அவர்களுடைய வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் நாம் இன்னும் குறித்துக் கொள்ளவேண்டிய செய்தி என்னவென்றால், எரிமலைகளை நினைத்தாலே நாம் அஞ்சுகிறோம். அவர்கள் அதைக் கண்டும்கூட அஞ்சுவதில்லை. எரிமலைகள் வெடிக்கும் என்று தெரியும். வெடித்ததற்குப் பிறகு சில இடங்களிலே அதுவும் கியூஸ் என்கிற இடத்திலே எரிமலைகள் வெடித்துச் சிதறி அடங்கிவிட்டன. அணைந்து விட்டன. அதற்குப் பிறகு இப்போது அந்த நிலத்தைப் பண்படுத்தி அவர்கள் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் நம்மால் நம்ப முடியவில்லை.

ஒருபக்கம் எரிமலை, இன்னொரு பக்கம் நிலநடுக்கம் என்கிற எதிர்ப்புகளுக்கு இடையிலே ஜப்பான் வளர்ந்தது. எல்லாவற்றையும் தாண்டி உலகில் எந்த நாடும் சந்திக்காத ஒரு மிகப்பெரிய பேரழிவையும் 1945 ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போரில் அமெரிக்கா அணு குண்டு வீசிய போது ஜப்பான் சந்தித்து.

அதுமட்டுமல்ல கணிப்பொறித்துறையில் உலகத்திலே அமெரிக்காவுக்கு அடுத்ததாக இரண்டாவது இடத்திலே இருக்கிறவர்கள் ஜப்பானியர்கள்தான் அமெரிக்காவினுடைய டாலரையும், ஐரோப்பாவினுடைய யூரோவையும்விட ஜப்பான் போட்டிக்கு அழைத்துக் கொண்டிருக்கிறது. அவர்களாலே தாக்குப் பிடிக்க முடியாத அளவுக்கு ஜப்பானியருடைய நாணயத்தினுடைய மதிப்பு கூடிக் கொண்டிருக்கிறது.

ஜப்பானுக்கு வந்த சோதனைகளைச் சாதனைகளாக்கியது எது என்று ஒரு சொல்லில் சொல்வதானால் உழைப்பு என்பதுதான். தொடர்ந்த உழைப்பு, நம்பிக்கை, விடா முயற்சி தனக்கு வந்த அழிவுகளையும், பேரழிவுகளையும் எதிர்கொண்டு அவைகளையெல்லாம் பற்றிக் கவலைப்படாமல் உழைத்துக் கொண்டிருந்த ஒரே காரணம். இன்று ஜப்பானை நலிந்த நாடுகளிலிருந்து வளர்ந்த நாடாக ஆக்கியிருக்கிறது.

நன்றி – பாசறை முரசு

ஓர் அறிவிப்பு

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள் ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25ஆம் தேதிக்குள் அனுப்பபடவேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் கீழே சங்கத்தின் தலைவர் / செயலரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையுடனும் அனுப்பப்படவேண்டும்.

- செய்திகள், கட்டுரைகளை கூட்டவோ, குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
- சங்க விழாக்கள் பற்றிய செய்திகள் சுருக்கமாகவும், தெளிவாகவும், முக்கிய கருத்துக்களை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்கள் கையொப்பத்துடன் அனுப்பப்படவேண்டும்.
- E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.
- **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பப வேண்டும்.**

Online fund Transfer Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்

தொகை செலுத்தியபின் Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு" Whatsapp No. 8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள் update செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

- செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

அனைத்து தபால்களையும் கார்காத்தார் ஒப்புரவு,
எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை – 600 094.
என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.
– கார்காத்தார் ஒப்புரவு

சென்னை கார்காத்தார் சங்கம்

64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை–600094.

அன்புடையீர் வணக்கம்.

சென்னை கார்காத்தார் சங்கத்தின் கார்காத்தார் ஒப்புரவு பத்திரிகையின் முதல் எழுச்சி விழா வருகின்ற 13–08–2023 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி அளவில் புதுச்சேரி கார்காத்தார் சங்கத்தின் சார்பில் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி திருமண மண்டபம், 100 அடி சாலை, ECR ரோடு, பாக்குமுடையான்பட்டு, அண்ணாமலை நகர், புதுச்சேரி–605008–ல் வெகு விமரிசையாக கொண்டாட ஏற்பாடு செய்யபட்டுள்ளது.

புதுச்சேரி கார்காத்தார் சங்கத்தின் கார்குல சொந்தங்கள் சந்திப்பு நிகழ்ச்சியும் அதனை தொடர்ந்து கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழாவும் சிறப்புற நடைபெற அனைத்து ஏற்பாடுகளையும், புதுச்சேரி கார்காத்தார் சங்கத்தின் கௌரவத்தலைவர் திரு. கேப்டன் மு. பிரதாபன் அவர்களது சீரிய தலைமையில் தலைவர் திரு. J. ராஜன்பாபு பிள்ளை, செயலாளர் திரு. சு. வெங்கடேசன் பிள்ளை, பொருளாளர் திரு. இராஜேந்திரன் பிள்ளை, நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் கார்குல முன்னோடிகள், தன்னார்வலர்கள், மகளீர் அணியினர் என அனைவரும் ஒருங்கிணைந்து சிறப்பான ஏற்பாடுகளை செய்துள்ளனர். விழாவை எழுச்சியுடன் நடத்த அனைவரும் சிறப்பாக பணியாற்றி வருகின்றனர்.

கார்காத்தார் ஒப்புரவு ஆகஸ்டு மாத இதழை புதுச்சேரி சிறப்பிதழாக வெளியிட தீர்மானிக்கப்பட்டு சிறப்பு கட்டுரைகள், வாழ்த்துரைகள், புகைப்படங்கள் இடம் பெறும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாநில அளவில் தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு தலைவர், செயலாளர், பொருளாளர், புதுச்சேரி, மாநில துணைதலைவர், மண்டல செயலாளர் கலந்து கொண்டு விழாவை சிறப்பிக்கிறார்கள். சென்னை கார்காத்தார் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர், துணைத்தலைவர், நிர்வாககுழு உறுப்பினர்கள் மற்றும் கார்காத்தார் ஒப்புரவு ஆசிரியர், பதிப்பாசிரியர் மற்றும் இணையாசிரியர் கலந்து கொண்டு விழாவை சிறப்பிக்கிறார்கள். மேலும் ஒப்புரவு எழுச்சி விழாவில் சிதம்பரம் & புதுச்சேரி சாரதாராம் குழுமத்தின் இயக்குநர் திரு. M. சுவேதகுமார் கலந்து கொண்டு விழா பேருரை ஆற்றவுள்ளார்கள். இவ்விழாவிற்கு தமிழகம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களின் நிர்வாகிகள், மாநில துணைதலைவர்கள், மண்டல செயலாளர்கள் மற்றும் புதுச்சேரி அருகிலுள்ள கார்காத்தார் சங்க நிர்வாகிகள் என எல்லோருக்கும் விழா அழைப்பிதழ் அனுப்பப்பட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கார்குல சமுதாயத்தின் பண்புகளையும், பெருமைகளையும் பறைசாற்றி வரும் நமது குடும்ப பத்திரிகை கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழாவில் கார்குல சொந்தங்கள் பெருமளவில் கலந்து கொண்டு கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழாவை வெற்றி பெற செய்ய வேண்டுமாய் அன்புடன் வேண்டுகிறோம். கார்குலமே அணி திரண்டு வாரீர்! கார்காத்தார் ஒப்புரவு மேலும் சிறப்புடன் நடைபெற ஆதரவு தாரீர் என அன்புடன் வரவேற்கிறோம்.

கைலை. சண்முகம்,

செயலாளர்.

வாழ்த்துரை

Dr.K. ராஜசுந்தரம் பிள்ளை @ KKR K சுரேஷ்

தலைவர், தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு,
KK நகர், சென்னை–78.

சென்னை கார்காத்தார் சங்கம், பாண்டிச்சேரி கார்காத்தார் சங்கம் இணைந்து கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழாவும் சொந்தங்கள் சந்திப்பு நிகழ்வும் பாண்டிச்சேரி ராஜேஸ்வரி திருமணமண்டபத்தில் 13–08–2023 ஞாயிறு அன்று காலை 9–00 மணிக்கு மிக சிறப்பாக நடைபெற உள்ளது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துக்கொள்வதற்கும் வாழ்த்துரை வழங்க வாய்ப்பு கிடைத்திருப்பதும் மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது இவ்விழா சிறப்பாக நடைபெற சென்னை மற்றும் பாண்டிச்சேரி சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும், பல ஆண்டுகளாக ஒப்புரவு இதழில் கார்குல அனைத்து செய்திகளையும் சிறப்பாக அமைத்து கார்காத்தார் ஒப்புரவு தமிழகம் முழுவதும் சரியான நேரத்தில் சென்றடைய அரும்பாடுபடும் ஆசிரியர், வெளியீட்டாளர் அச்சிடுவோர், கார்காத்தார் ஒப்புரவு பொறுப்பாளர்கள் அதற்கு உதவிடும் சொந்தங்கள் அனைவருக்கும் KKR மற்றும் தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு சார்பில் வாழ்த்துக்களையும் பராட்டுகளையும் தெரிவித்து மகிழ்கிறோம்.

எண்: 20, ஈசுவரன் கோயில் வீதி, புதுச்சேரி-1.

புதுச்சேரி நகரத்தின் மையப்பகுதியில் கிழக்கு மேற்காக அமைந்துள்ள நேரான வீதிகளுள் ஒன்று ஈசுவரன் கோயில் வீதி ஆகும். இந்த வீதி "நேரு வீதி" எனப்படும். முக்கியக் கடைவீதியிலிருந்து வடபுறத்தில் ஆறாவது வீதியாக உள்ளது. இவ்வீதி "ஈசுவரன் தர்மராஜா கோயில் வீதி" என்று முன்னர் வழங்கப்பட்டு, தற்போது ஈசுவரன் கோயில் வீதி எனச் சுருங்கிவிட்டது. இவ்வீதியில் கடற்கரைக்குச் சில நூறு அடிகள் முன்பாக உள்ளது. ஒரு பழமை மாறாத வீடு. நூறாண்டுகளுக்கும் மேலான வயதுடையது அந்த வீடு. அவ்வப்போது ஏற்படும் பழுதுகளைச் செப்பனிட்டுச் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. அவ்வீடு, புதுவை அரசின் கலை பண்பாட்டுத்துறையின் கட்டுப்பாட்டில் அந்த வீடு உள்ளது. அதனை வீடென்று கூறுவதைவிட ஆலயம் என்று சொல்லலாம். அமைதி, ஆனந்தம், அறிவு மூன்றையும் ஒரு சேர வழங்கும் கலைக்கூடம் அது. அவ்வில்லம் ஒரு நினைவு அருங்காட்சியகமாகவும் நூலகமாகவும் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு திங்கள்கிழமையிலும், அரசு விடுமுறை நாள்களிலும் அவ்வீடு பூட்டப்பட்டிருக்கும் மற்ற நாள்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை அங்கே வருவோரை வரவேற்கும் வகையில் அந்த வீட்டின் கதவுகள் திறந்தபடி இருக்கும்.

அந்த வீட்டில் அப்படி என்ன இருக்கிறது? அது யாருடைய வீடு என்ற கேள்விகள் இந்நேரம் தோன்றியிருக்குமே? அதற்கு விடை காணும் முன் சற்றுப் பின்னோக்கிப் பயணப்படுவோம்.

இந்திய தேசிய விடுதலை இயக்கம் 1905–ஆம் ஆண்டிற்குப் பிறகு வலிமை பெறத் தொடங்கியது. 1907–ஆம் ஆண்டு (இன்றைய குஜராத் மாநிலத்தில் உள்ள) சூரத் நகரில் காங்கிரஸ் பேரியக்கத்தின் மாநாடு நடைபெற்றது. அதில் நடந்த கருத்து மோதல் காரணமாக காங்கிரசுக்குள் மிதவாதம் (Moderate). தீவிரவாதம் (Extremist) என்னும் இருபிரிவுகள் ஏற்பட்டன. மிதவாதம் என்பது இந்திய விடுதலையை ஆங்கிலேயரிடம் மன்றாடிக் கேட்டுப் பெறுவதே நல்லது என்னும் கருத்தை வலியுறுத்துவது, தீவிரவாதம் என்பது மக்கள் சக்தியை ஒன்றுதிரட்டி ஆங்கிலேயருக்கு எதிராகக் களத்தில் இறங்கிப் போராட்டங்கள் நடத்துவதே உகந்தது என்னும் கருத்தை வலியுறுத்துவது. மராட்டிய சிங்கமாகிய பாலகங்காதர திலகர் தீவிரவாதப் பிரிவை ஆதரித்தார். கோபால கிருஷ்ண கோகலே போன்றோர் மிதவாதப் பிரிவை ஆதரித்தனர். "சுதந்திரம் நமது பிறப்புரிமை; அதனை யாரும் நமக்குத் தரவேண்டியதில்லை. நாமே எடுத்துக் கொள்வோம்" என முழங்கினார் திலகர். அவரது முழக்கம் இந்தியா முழுவதும் ஒலிக்கத் தொடங்கியது. அம்முழக்கத்தில் தன் குரலையும் ஓங்கி ஒலிக்கச் செய்த தமிழ்நாட்டுத் தவப்புதல்வர்களுள் ஒருவர் குறிப்பிடத்தக்கவர்.

அம்மனிதர், சுதந்திரமாகச் செயல்படத் தடைகூடாது என்னும் கருத்துரையவர்; தேசத்தைத் தெய்வமாகக் கருதிப் போற்றியவர், பன்மொழிப் புலமையுடையவர்; பத்திரிகைத்துறையில் தனக்கெனத் தனி முத்திரை பதித்தவர்; நல்ல எழுத்தாளர்; நாடறிந்த நல்லதமிழ்க் கவிஞர்; 1906–ஆம் ஆண்டில் "இந்தியா" என்னும் பத்திரிகையை ஆசிரியராக இருந்து நடத்தியவர்; எண்ணம், பேச்சு, எழுத்து, செயல் என்ற நான்கிலும் வேறுபாடு காணமுடியாதபடி உண்மையாக வாழ்ந்த உத்தமர் அவர். அவரது 'இந்தியா' பத்திரிகை எழுச்சி பெற்று வளர்ந்தது; மக்களிடையே விடுதலை

உணர்வை வீறுபெறச் செய்தது. ஆங்கிலேயருக்கு அந்தப் பத்திரிக்கை பேரச்சத்தை உண்டாக்கியது. எனவே ஆங்கிலேய அரசு அவரை இயங்கவிடாமல் முடக்க நினைத்தது. ஆங்கிலேயரிடம் அகப்பட்டால் இந்தியா இதழ் நின்றுவிடுமே ? தேசத் தொண்டிற்கும், விடுதலை உணர்வுக்கும் தடை ஏற்பட்டுவிடுமே ? என்று அவர் எண்ணினார். உடனிருந்த அருமை நண்பர்களின் ஆலோசனைப்படி பிரஞ்சியர்களின் ஆட்சிப்பரப்புக்கு உட்பட்ட புதுச்சேரிக்கு அவர் வந்தார். புதுவைக்கு அவர் வந்தது 1908–ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஒரு நாள்.

எவ்வளவோ இன்னல்களுக்கு இடையில் பத்திரிக்கைப் பணியையும் எழுத்துப் பணியையும் இடைவிடாது தொடர்ந்தார் அம்மனிதருள் புனிதர். அவர் புதுவையில் வாழ்ந்த காலம் 1908 முதல் 1918 வரை பத்து ஆண்டுகளே. அவரது மொத்த வாழ்நாள் 39 ஆண்டுகள் மட்டுமே. இந்த 39 ஆண்டுகளில், அவர் எந்த ஒரு ஊரிலும் தொடர்ச்சியாகப் பத்து ஆண்டுகள் வாழ்ந்தது இல்லை புதுச்சேரியைத் தவிர. ஒரே ஊரில் தொடர்ந்து அவர் பத்து ஆண்டுகள் வாழ்ந்தார் என்னும் பெருமையைப் பெற்றது புதுச்சேரி. அவரது புகழுக்குக் காரணமான உயரிய இலக்கியப் படைப்புகளில் பிறப்பிடம் அவர் வாழ்ந்த அந்த இல்லம். அவர் தன் மனைவி, மக்களுடன் அந்த வீட்டில் தான் வாழ்ந்தார். அங்கே அவர் பயன்படுத்திய நீண்ட மரபெஞ்சு ஒன்று இன்றும் காட்சி தந்தபடி இருக்கிறது.

அம்மனிதர் யாரென அறிந்திருப்பீர்கள் தானே ? ஆம் உங்கள் ஊகம் சரிதான் அந்த மனிதர் ''மகாகவி சுப்பிரமணிய பாரதியார்'',

அவனோர் பைந்தமிழ்த் தேர்ப்பாகன்
செந்தமிழ்த் தேனி; சிந்துக்குத் தந்தை
நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா
காடு கமழும் கற்பூரச்சொற்கோ
மண்டும் மாதங்கள் அண்டா நெருப்பவன்...

என்று பாவேந்தர் பாரதிதாசனின் கவிதை வரிகளில் மங்காப்புகழுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் அக்கவிஞர் வாழ்ந்த இல்லம்தான் 20, என எண்ணிடப்பட்டு ஈசுவரன் கோயில் வீதியில் உள்ள வீடு.

அங்கே பாரதியாரின் நூல்கள், கையெழுத்துப்படிகள், அரிய புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. புதுவைக்கு வருவோர் அவசியம் காணவேண்டிய அருங்காட்சியகம் அது. ''வையகத்தில் அன்பிற் சிறந்த தவமில்லை'' என உரைத்த அக்கவிஞரை அன்போடு நேசிக்கவும், வாசிக்கவும் முற்படுவோம்.

இவண்

'மாதவம்' செய்த பாரதி அன்பர்களுள் ஒருவன்.

வேண்டுவது

கலைமாமணி டாக்டர் காரை. மு. வேணு.

சித்தம் கலங்காது சிந்தைத் தெளிவுடன்
நான் இறக்க வேண்டும்.
சிந்தைத் தெளிவுடன் சிந்தனைச் செழிக்க
நான் எழுதிய நூல்கள் தமிழ்ப்பரப்ப வேண்டும்.

பந்தம் பாசம் பற்று அனைத்தும் கானல் நீரென
அறிந்தபின்னும் பற்றற்றான் அருளுடன்
நான் பணி செய்து கிடக்க வேண்டும்.
மலையென நிமிர்ந்து நிற்க வேண்டும்.

கடலென சூழ்ந்து அறிய வேண்டும்.
மரமென செழித்து வளர வேண்டும்.
விண்ணென பார்வை விரிதல் வேண்டும்.
காற்றெனக் கலந்து வாழ வேண்டும்.

மண்ணென பொறுமை காத்தல் வேண்டும்.
வேள்வியில் வெளிப்படும் தீயென புனிதம்
நான் பெறல் வேண்டும்.
நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும்.
வள்ளலார் வரிகள் என்றும்
என்னை வாழ்விக்க வேண்டும்.
எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும்.

படித்ததில் பிடித்தது, படிக்க, படிக்க பிடித்தது.

Do all the good you can
In all the ways you can
To all the people you can
At all the time you can
By all means you can
As Long As you can

''கொம்புக்கு ஐந்து முழம்,
குதிரைக்கு பத்து முழம்,
லெம்புகரிக்கு ஆயிரம்தான் வேண்டுமே,
வஞ்சியர் தம் கண்ணில் தெரியாத
தூரத்து நீங்குவதே நல்ல நெறி''

விளக்கம் :

மாடுகளை கண்டால் ஐந்து முழ தூரமும்,
குதிரையை கண்டால் பத்து முழ தூரமும்,
யானையை கண்டால் ஆயிரம் முழ தூரமும்,
வஞ்சகம் செய்பவருக்கு கண்ணில்
தெரியாத அளவுக்கு தூரம்
செல்வதே நலம் என்பதாகும்.

உமா சிவசண்முகம் புதுச்சேரி
9677686406

வள்ளுவர் வகுத்த வாழ்வியல் அறம்

– முனைவர் சிவ. மாதவன், புதுச்சேரி.

வள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும் மனித வாழ்வோடு இயைபுபடுத்தி, வாழ்வியல் நெறிகளை வகுத்த அறிஞர். மனிதர்கள் அனைவரும் இன்பவாழ்வு வாழவே விரும்புகின்றனர். இன்பமாய் வாழ்தலே வாழ்வு எனவும் எண்ணுகின்றனர். இன்பமாக வாழ்வு நடத்துதலை வள்ளுவரும் வழிமொழிகிறார். அதுவே நல்லதும் உயர்ந்ததுமாகும் என்று அவர் கருதுகிறார். இன்பம் எப்படிக் கிடைக்கும் ? ஐம்புலன்களால் நுகரப்படும் இன்பநுகர்ச்சிக்கு இன்றியமையாது தேவைப்படுவது பொருள். பொருள் என்பது செல்வமாக இருக்கலாம்; உடைமையாக இருக்கலாம்; உணவாக, உடுப்பாக இருக்கலாம். அது எதுவாக இருப்பினும் இன்ப வாழ்வுக்குப் பொருள் தேவை; பொருளே அடிப்படை; பொருள் இல்லையேல் இன்ப நுகர்வு இல்லை.

பொருள் எப்படிக் கிடைக்கும் ? என்பது அடுத்து எழுகின்ற வினா ! இதற்கு விடைதேடப் பெருமுயற்சி தேவையில்லை. உழைப்பே பொருள் ஈட்டலுக்கு உதவும் சாதனம். உழைப்பின்றேல் பொருள் இல்லை; பொருள் இல்லையேல் இன்பத்தை அனுபவித்தலும் சாத்தியமில்லை; தன்னாலின்றிப் பிறரால் ஈட்டப்பட்ட பொருளாயினும் அவசியம் பொருள் தேவை. இவ்வாறு வாழ்க்கையின் உள்ளீடாக இன்பமும் பொருளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக விளங்குகின்றன என வள்ளுவர் உணர்த்தியுள்ளார்.

தம்உழைப்பினால்ஈட்டியபொருளைக்கொண்டு இன்பமாய்வாழும்எவர்ஒருவரும்,பொருளீட்டுவதற்குத் தாம் மேற்கொண்ட வழிமுறையைக் கட்டாயம் நினைத்துப் பார்க்க வேண்டும். தாம் சம்பாதித்த பொருள் நல்லவழியிலே செய்த முயற்சியால் கிடைத்ததா எனத் தம் மனசாட்சியிடம் கேட்டுப் பார்க்க வேண்டும். பொருளீட்டுதல் பெரிய காரியமாயினும் சரியான, நேர்மையான வழியில் அதனை ஈட்டியிருக்கிறோமா என்று சுயசோதனை செய்து பார்த்தல் மிக அவசியமானது. எப்படியும் பொருள் ஈட்டலாம்; எப்படி வேண்டுமானாலும் இன்பம் நுகரலாம் என்பதில் வள்ளுவருக்கு உடன்பாடில்லை. பொருளும; இன்பமும் அறவழியினதாக அமைய வேண்டும் என வள்ளுவர் வலியுறுத்தியுள்ளார். வாழ்வுக்காக மனிதர்கள் மேற்கொள்ளும் எல்லாச் செயலும்தூய்மையானதாக,ஒழுங்குடையதாக இருக்க வேண்டும் என்பது வள்ளுவரின் உள்ளக்கிடக்கை. இக் கருத்தை வலியுறுத்தும் பொருட்டு அவர் 'வினைத் தூய்மை' என்னும் அதிகாரம் ஒன்றைப் படைத்துள்ளார். புகழுக்குரிய செயல்களைச் செய்தல், பழிவரக்காரணமாகும் செயல்களை நீக்குதல் ஆகிய இரண்டும் அந்த அதிகாரத்தின் மையக் கருத்துகளாக உள்ளன.

செயல் தூய்மை தொடர்பாக வடமொழியிலுள்ள அறநூல்கள் கூறுகின்ற நீதியைவிடவும் வள்ளுவர் கூறுகின்ற நீதி சற்று வன்மையாக உள்ளது என்று அறிஞர்கள் கருதுகின்றனர். செய்யும் செயலில் தூய்மை வேண்டும்; நன்மை விளையக் கூடியதாயினும் அந்நன்மை நல்வழி வந்ததாக, நல்வழியில் வருவதாக இருக்க வேண்டும்; பழிச்செயல் ஒன்றைச் செய்து நன்மை பெறுதல் கூடாது; அப்படிப்பட்ட நன்மை உண்மையில் நன்மையன்று. எனவே பழிக்குரிய செயலைச் செய்ய வேண்டாம் என்று திருவள்ளுவர் உணர்த்தியுள்ளார். தன்னைப் பெற்ற தாயின் பசித்துன்பத்தைப் போக்க வேண்டியது மகனின்/மகளின் கடமையாகும். எனினும் தாயின் பசியை நல்வழியில் ஈட்டிய பொருளின் துணையால் போக்க வேண்டும்.

தாயின் பசியை எப்படியாவது போக்க வேண்டும்; அதற்காகப் பொய் கூறலாம்; புறம் பேசலாம்; பிச்சை ஏற்கலாம்; பிறர் ஒருவர் பொருளை அவர் அறியாதபடி கவர்ந்து கொள்ளலாம்; அடுத்தவரிடமிருந்து அச்சுறுத்தல், துன்புறுத்தல் மூலமாகப் பொருளைப் பிடுங்கிக் கொள்ளலாம், இப்படிப்பட்ட செயல்கள் எதைச் செய்தாவது தாயின் பசியைப் போக்க வேண்டியது பிள்ளைகளின் கடமை; 'ஆபத்திற்குப் பாவமில்லை' என்று தவற்றை நியாயப்படுத்த முயலும் நீதிநூல்கள் உள்ளன. அவற்றிற்கு மத்தியில் திருக்குறள் மட்டுமே மாறுபட்ட கோணத்தில் அறத்தை மிக மிக அழுத்தமாகச் சுட்டுகிறது.

ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. குறள் : 656

என்னும் குறளின் மூலம், பசித்துன்பத்தைக் கண்டு வருத்தமுறுகின்ற சூழல் ஏற்படும்போதும் மகனானவன், சான்றோர்கள் பழித்துரைக்கின்ற செயல்களைச் செய்துவிடக் கூடாது என வினைத்தூய்மையை வள்ளுவர் மொழிந்துள்ளார்.

வாழ்விற்கு இன்பம் அடிப்படை; இன்பத்திற்குப் பொருள் அடிப்படை; இவ்விரண்டிற்கும் 'அறம்' அடிப்படை; இதுவே வள்ளுவர் வகுத்த அறம். இது உயரிய குறிக்கோள் சார்ந்தது; இது கசப்பான மருந்து போன்றது; ஆனால் சமுதாயக் கொடுமை என்னும் நோய்க்கு இது சரியான மருந்து என உணர்வோம். அறத்தின் வழி நடப்போம்.

சுவாமி விவேகானந்தரின் அறிவுரை

மா. உமாபார்வதி,
நேருவில் நகர், புதுச்சேரி–8.

பரந்து விரிந்திருந்த பாரத நிலப்பகுதியை ஒன்றுபடுத்தி 'இந்தியா' என்னும் ஒரு பெரிய நாடாக உருவாகிட அடித்தளமிட்டவர் விவேகானந்தர். அவருடைய பேச்சும் எழுத்தும் தேசத்தலைவர்களை ஒருங்கிணைத்தன; விடுதலைப் போரை விவேகமுடன் ஆற்றிட அறைகூவல் விடுத்தன. ஆன்மிகத் துறையின் ஆழ, அகல, நுட்பங்களை விளக்குவதில் விவேகானந்தர் வல்லவர். அதை வைத்து அவரை வெற்றுரை பேசும் வேதாந்த வித்தகர் என நினைப்பது தவறு. 'வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவோம்' என்று வாழ்வை வெறுக்கின்ற போக்கினை அவரிடம் காண முடியாது. அத்தகு போக்கினை அவர் வலியுறுத்தியவரும் அல்லர். மேலும், வாழ்வை வெறுத்துத்துறவை மேற்கொண்ட ஆன்மிகவாதி அவர் என்றும் எண்ணிடக் கூடாது. அப்படி எண்ணவும் முடியாது. காரணம், அவர் ''ஆன்மிகத் துறையில்'' கால் பதித்து தேசபக்தி என்னும் உயர்நிலையை எட்டியவர். கடவுளுக்கு ஈடானது நமது தேசம் என்பது அவருடைய அசைக்க முடியாத நம்பிக்கை. அவருடைய சீடராகத் திகழ்ந்த சகோதரி நிவேதிதா தேவி என்னும் பெண்மணி. ''அவர் (விவேகானந்தர்) நம் பாரத மாதாவையே தெய்வமாகத் தொழுதவர்'' என்று எழுதினார். நிவேதிதா தேவியின் "Master As I Saw Him" என்னும் நூல் விவேகானந்தர் பற்றிய பல செய்திகளை இன்றைய இளைஞர்கள் அறிந்து கொள்ளப் பெரிதும் உதவும்.



விவேகானந்தர் ''உழைப்பின் வாரா உறுதியகள் உளவோ'' என்னும் முதுமொழியில் பொருளை நன்குணர்ந்தவர்; உழைப்பே உயர்வுக்கு வழி எனப் போதித்தவர்; தாமும் அயரா உழைப்பினை அருந்தவமென மேற்கொண்டவர். அந்த மகான் மதுரை நகருக்கு வந்தபோது நிகழ்த்திய சொற்பொழிவில் உழைப்பின் உயர்வை வலியுறுத்தினார்.

''சமுதாயம் என்றாவது நிறைநிலையை அடையுமா என்பது சந்தேகம்தான். அது வருகிறதோ இல்லையோ ஆனால் நாம் ஒவ்வொருவரும் அது நாளைக்கே வரப்போகிறது, அது நம் உழைப்பால் மட்டுமே வர முடியும்'' என்ற எண்ணத்தோடு உழைக்க வேண்டும். 'எல்லோரும் தங்கள் பங்கைச் செய்து முடித்துவிட்டார்கள். உலகம் நிறைநிலையை அடைவதற்கு நான் ஒருவன் செய்ய வேண்டிய வேலை மட்டும்தான் பாக்கியிருக்கிறது' என்று நாம் ஒவ்வொருவரும் நம்ப வேண்டும். இந்தப் பொறுப்பினை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்பது விவேகானந்தர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி ஆகும்.

உழைப்பை மறந்துவிட்டு அல்லது புறக்கணித்துவிட்டு கடவுளை வழிபடச்சொன்ன சமயத்தலைவன் அல்ல அவர். உடல் வலிமை, உள்ள வலிமை படைத்த மக்களால்தான் வலிமை வாய்ந்த நாட்டை உருவாக்கிக் காப்பாற்ற முடியும்; நாம் நம் நாட்டைக் காக்க நம்மை வலிமையானவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும்; நம் பிறப்பின் நோக்கமும் அதுவாகவே இருக்க வேண்டும் என்று அவர் போதித்தார்.

''உலகம் என்பது ஓர் உடற்பயிற்சிக் கூடம். அதில் நம்மை நாம் வலிமைபடைத்தவர்களாக்கிக் கொள்வதற்காக வந்திருக்கிறோம்'' என்று தமது மதுரை நகரச் சொற்பொழிவில் அவர் அறிவுரை கூறினார்.

வலிமையுடன் கூடவே அவர் வலியுறுத்திய இன்னுமொரு சீரிய மனிதப்பண்பு தன்னம்பிக்கை ஆகும். ''கடவுள் நம்பிக்கை இல்லாதவனை 'நாத்திகன்' என்று பழைய மதங்கள் கூறின. தன்னம்பிக்கை இல்லாதவனைன நாத்திகன் என்று இன்றைய புதிய மதம் கூறிகிறது'' என விவேகானந்தர் கூறுவதில் மனிதப்பண்பை முன்னிலைப்படுத்தும் அவரது உயரிய சிந்தனை – மனிதம் சார்ந்த சிந்தனை வெளிப்படக் காணலாம். இவ்வாறு உழைப்பும், வலிமையும், தன்னம்பிக்கையும் நாட்டின் நலத்திற்கும் வளர்ச்சிக்கும் விடுதலைக்கும் பயன்பட வேண்டுமென்று உழைத்த ஞானி விவேகானந்தர். உழைப்பு, வலிமை, தன்னம்பிக்கை என்னும் மூவகைப் பண்புகளும் ஒருங்கே பெற்றிட வழிகாட்டிய அவரைப் போற்றுவோம். அவர் வலியுறுத்திய அப்பண்புகளைத் தொடர்ந்து வளர்த்தெடுப்போம்; அவர் காட்டிய வழியில் நடப்போம் என்னும் உறுதிமொழியை ஏற்போம்.



காரைக்காலம்மையார் இயற்றிய அற்புதத்திருவந்தாதி

முனைவர் க. இராஜேஸ்வரன்,
காரைக்கால்.

இறைவனை இடைவிடாது நினைந்து அப்பெருமானது பேரறிவே தம்பால் விளங்கப் பெற்றுத் நம் உணர்வு என்பது சிறிதும் இன்றி இறைவனது பேரறிவினுள் அடங்கி நின்ற சிவஞானிகளாக விளங்கியவர்கள் திருமுறை ஆசிரியர்கள் ஆவர். இத்திருமுறைகள் பாடுவோரையும் பாடக்கேட்போரையும் இறையுணர்வில் ஈடுபடச் செய்யும் ஆற்றல் மிக்கன. இத்திருமுறைகள் பன்னிரண்டாகப் பகுக்கப்பெற்றுள்ளன. இவற்றை அருளிச் செய்தவர்கள் திருஞானசம்பந்தர் முதல் சேக்கிழார் பெருமான் முடிய 27 அருளாசிரியர்கள் ஆவர்.

பதினொன்றாம் திருமுறையில் காரைக்காலம்மையார் அருளிய

1. திருவாலங்காட்டு மூத்தபதிகம் 2.22 பாடல்கள் – 88 வரிகள்

2.திரு இரட்டை மணிமாலை – 20 பாடல்கள் – 80 வரிகள்

3.அற்புதத் திருவந்தாதி 101 பாடல்கள் – 404 வரிகள் ஆகும். ஈண்டு அம்மையார் இயற்றிய அற்புதத் திருவந்தாதி தரும் கருத்துக்களை நோக்குவோம்.

சூரிய சந்திரர்களாக விளங்கியவர்கள் ஆண்கள் மட்டுமல்லர். பெண்களில் தலைசிறந்து தொண்டு சிறக்க பெருமைமிக்க விளங்குகின்றவர் காரைக்காலம்மையார், உருவமோ பேயுருவம் உள்ளமோ இறைவனுடைய ஞானத்தினால் ஒளி பெற்ற ஞானியருள்ளம், அத்தகைய உள்ளம் இறைவனை நினைந்து நினைந்து கசிந்து உருகியது. உருகிய உள்ளத்தினின்றும் பாடல்கள் வெளிப்பட்டன. தங்கு தடையின்றிப் பொங்கி வழியும் உணர்ச்சியின் வெளிப்பாடுதான் பாடல்கள்.

பிரானருளால் பேயுருவம் பெற்ற அம்மையார் இறைவனைப்பாமாலை சூட்டிப்பரவலானார். அவருடை கவிதைகளில் பொருளற்ற சொல்லடுக்குகள், இல்லை சொல்லழகும், பொருளழகும் நிரம்பப்பெற்று அவைகேட்பாரைப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் கேட்கும் திறம் கொண்டிலங்குவன.

இறைவனுடைய திருமேனியின் பல்வேறு பாகங்களை நாளின் பல கூறுகளாகக் கண்டு போற்றித்துதித்த அற்புதத்திருவந்தாதிப் பாடல் ஒன்று அம்மையாரின் புலமைக்குச் சான்றுபகரும், காலையே போன்றிலங்கும் திருமேனி, கடும் பகலின் வேளையே போன்றிலங்கும் வெண்ணீறு, மாலையின் தாங்குருவேபோலுந் சடைக்கற்றை, வீங்கிருளேபோலும் மிடறு.

விடியற்காலையில் இருக்கின்ற வெளிச்சம் கண் கூசுமளவுக்கு மிகையிராமல் பார்ப்பதற்கு இதமாக இருப்பது போன்று இறைவன் திருமேனி விளங்குகின்றன. ஆனால் வெண்ணீறே எனின் நடுப்பகல் வெளிச்சம்போல் தக தக எனச் சுடர் விடுகின்றது. அவனுடைய சடைக்கற்றை மாலையைப்போல் பொன்னிறமாய் இலங்குகிறது. அவனுடைய கழுத்தோ இருள் எனக் கரியதாய் இருக்கிறது. இறைவன் திருவுருவை இதனினும் சிறப்பாக உவமித்தல் இயலுமோ ?

“காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலில்
வேளையே போன்றிலங்கும் வெண்ணீறு – மாலையின்
தாங்குருவே போலுஞ்சடைக்கற்றை மற்றவற்கு
வீங்கிருளே போலும் மிடறு
எனத் தெளிவுறுத்துகிறது இப்பாடல்

விடமுண்ட கண்டனுக்கு முப்புரம் எரித்த முக்கண்ணனுக்கு அம்மையார் ஏன் ஆளாவேண்டும் ? எந்தப்பயனை எதிர்பார்த்து அவர் ஆளானார் ? அம்மையார் இறைவன் பாற்கொண்ட அன்பு அதன் மூலமாக வேறெதையும் பெறலாம் என்ற நோக்கத்தோடு ஏற்பட்டதன்று. தாம் அவன் பாலுற்ற காதலால் நமக்கு நன்மை கிடைக்கவில்லை என்றாலும் அதனால் அந்த அன்பு அற்று விடாது.

இடர்களை யாரேனும் எமக்கு இரங்காரேனும்
படரும் நெறி பணியாரேனும் – சுடர் உருவில்
என்பறாக் கோலத்து எரியாடும் எம்மானார்க்கு
அன்பறாது என்நெஞ்சு அவர்க்கு
என்கிறார்.

அரன்பால் அன்பற்றிருந்தால் அண்டருலகம் கிடைக்கும் என்றாலும் அதை நான் விரும்பமாட்டேன் அவனுக்கு ஆளாயிருப்பதே ஆசையுற்றேன்.

"பிறையும் புனலும் அனல் அரவம் சூடும்
எமக்கும் இரங்காரேனும் – கறைமிடற்ற
எந்தையார்க்கு ஆட்பட்டோம் என்றென்றிருக்குமே
எந்தையா உள்ளம் இது" என்று
கருத்தை வலியுறுத்துகிறார்.

எம் இறைவனையே! உன்னை வணங்கி – உன்னுடைய திருத்தொண்டை அடியேன் செய்யாமல் இருப்பனோயின் அண்டத்தைப் பெற்றாலும் அந்தப் பதவியை அடியேன் வேண்டேன் இது அடியேனுடைய கருத்து என்று விளக்குகிறார்.

இங்ஙனம் அம்மையார் பாடல்கள் மூலம் இறைவன் அருள்பெற்றோம். இனி நமக்கு இடர் இல்லை என்று நெஞ்சத் திண்மை, மன உறுதி, நம்பிக்கை அம்மையாரிடம் இருப்பதை உணர்கின்றோம். இறைவனுடைய அடியர் எந்தக் கோலத்தில் எந்த உருவில் அவன் தோன்ற வேண்டும் என்று தவமிருக்கிறார்களோ அந்தக்கோலத்தில் அவர்கள் முன் தோன்றவல்லவன் இறைவன் என்பதனை தவமிருக்கிறார்களோ அந்தக்கோலத்தில் அவர்கள் முன் தோன்றவல்லவன் இறைவன் என்பதனை

எக்கோலத்து எவ்வுருவாய் எத் தவங்கள்
செய்வார்க்கும்
அக்கோலத்து அவ்வுருவே ஆம்

என்கிறார் பிறருக்கெல்லாம் சிறந்த அருளை நல்கி உலகங்களை ஆள்விப்பது இறைவன் அருளே அந்த அருளே பிறப்பை அறுத்து முத்தி தருவது ஆனால் அவன் அருளாலே உண்மையான பொருளைக் காணும் நியமத்தை உடையவன் இறைவன் அருளே எல்லாக் காலத்தும் எல்லாப் பொருளும் ஆவது என அம்மையார் உணர்த்துகின்றார். இவ்வாறு அம்மையாருடைய இறையனுபவம் மிக்க அற்புதத் திருவந்தாதிப் பாடல்கள் அடியாரை அறவழிநடத்தும் அணையா விளக்காய், வழித்துணையாய் – நம்பிக்கையற்ற உள்ளங்களிலே நம்பிக்கையூட்டும் ஒரு விடிவெள்ளியாய்த் திகழ்கின்றன.

குரும்பகரம்

என் பிறந்த அழகிய கிராமம் நெடுங்காடு கொம்யூரில் உள்ள இந்த கிராமம் என் மூதாதையர் வாழ்ந்த இடம். 1944–ல் நான் பிறந்தேன். என்னுடன் பிறந்த மற்ற மூத்த இளைய சகோதரர்கள் 10 அந்த இளம் பிராய வாழ்க்கை எங்கள் தாத்தா பொன்னுசாமி பிள்ளை அவர்களின் சிறந்த வேளாண் முறையினால் வளமாக அடைந்தது.

தெரு மண் தெரு தான். ஆனாலும் சுத்தமாக இருக்கும். மாடுகள் நிறைய இருந்தாலும் சாணங்களை அவ்வப்போது அப்புறப்படுத்துவதில் தாத்தா கவனமாக இருப்பார்.

வீட்டின் எதிர்ப்புறம் அழகிய, பெரிய நீர் நிறைந்த குளம். அல்லி மலர் பூ அனைவரையும் கவரும். பள்ளியின் மத்திய இடைவேளை சமயம் முழுவதும் குளத்தில் கும்மாளம்.

வெளியூர் செல்வதற்கு கூண்டுடன் கூடிய அழகிய மாட்டுவண்டி தான். நெல் மூட்டைகளை ஏற்றி காரைக்கால் செல்ல பாரவண்டிகள். அவைகள் தெருவில் வரிசையாக செல்வதைப் பார்க்க அற்புதமாக இருக்கும்.

திருவிழா காலங்களில் ஊர் மாரியம்மன் கோயில் கோலாகலமாக காட்சி அளிக்கும். எல்லா வித மதத்தினரும் அமைதியாக வாழ்ந்த ஊர் என்ற பெருமை உண்டு.

வேளாண் பொருட்கள் அவ்வளவும் அவரவர் நிலங்களில் பயிரிடப்பட்டு மலிவாக கிடைக்கப்பெற்றது. நெல், எள், துவரை, மிளகாய், காய்கறி வகைகள், பயிறு, கடலை, உளுந்து, தேங்காய் முதலிய யாவையும் கிடைக்கப்பெற்றது.

(Ecole control de courumbegaram) பள்ளியின் பெயர் (hospital) / மருத்துவமனை பெயர். பிரெஞ்சு காலனியக இருந்ததைக் குறிக்கும். தந்தை முத்தையா பிள்ளையும் (Maire) மேயராக இருந்ததும் இந்த ஊருக்கு பெருமையாக இருந்தது.

இந்த நினைவுகள் மனதில் செழுமையான எண்ணங்களை உருவாக்கி உங்களிடம் பகிர்ந்ததில் பெரு மகிழ்ச்சி கொள்கிறேன்.

மு. சுந்தரேசன்,
திருச்சி.
(BHEL Retd)

நெட்டைக் கனவு

(கர்னல் மு. குமார் (ஓய்வு) குரும்பகரம்
– நெடுங்காடு. 9448307862)

அழகுமிக்க நந்தவனம் அவன்படைத்த இவ்வுலகம்
முழுதுமிதை அனுபவிக்க முடிந்திடுமோ எவராலும்
தென்றலைப்போல் சொர்க்கமுண்டு தீயினைப்போல் நரகமுண்டு
என்றாலும் இவ்வுலகில் இருப்பதிலோர் சுகமுமுண்டு

எத்தனைதான் முயன்றாலும் எள்ளளவும் புரியவில்லை
பித்தனவன் படைப்பினுள்ளே புதைத்துவைத்த ரகசியங்கள்
முற்றுமவன் மறைக்கவில்லை மூடிஎதையும் வைக்கவில்லை
உற்றுநோக்கிப் பார்த்திட்டால் உதவும்சில தடயங்கள்

அன்றாடம் தூக்கத்தில் அனைவருக்கும் கனவுவரும்
சென்றுவிட்ட நிகழ்வுவரும் சிதறடிக்கும் காட்சிவரும்
குட்டைக் கனவிதனைக் கூர்ந்துநாம் கவனித்தால்
நெட்டைக் கனவென்றே நம்வாழ்க்கைத் தெரியவரும்

நித்திரையில் வரும்கனவு நிஜம்போல தெரிவதனால்
இத்தரையில் உள்ளதெல்லாம் இன்னுமோர் பெருங்கனவோ
கனவுலகில் நமதுமனம் காட்சிகளாய் விரிவதுபோல்
நனவுலகில் எந்தவொன்று நமதுலகாய் விரிகிறதோ

கனவினிலே கண்டவற்றை காலையிலே மறப்பதேன்
கனவுற்ற உறக்கத்தைக் களிப்பெனவே எண்ணுவதேன்
கனவில்வரும் துயரெல்லாம் கண்விழித்தால் கரைவதுபோல்
நனவுலகில் படும்துயரம் நீங்கிடவோர் வழியுமுண்டோ

உடலல்ல மனதல்ல உள்ளிருக்கும் உணர்வுநாம்
கடவுளென்றே அதனைநம் கருத்தினிலே வைக்கலாம்
உலகமாக அவ்வுணர்வே உருவெடுத்து விரிந்ததாம்
உள்ளேயும் வெளியேயும் ஒருணர்வே இருக்குதாம்

கனவுற்ற உறக்கமது களிப்பாக தெரிவதற்கு
மனம்ஆழ்ந்த உறக்கத்தில் மறைவதும் ஓர்காரணம்
பிறவிகளை மறப்பதுபோல் பலகனவு மறக்கின்றோம்
உறக்கத்தில் உள்ளிருக்கும் உணர்வோடு லயிக்கின்றோம்

நெஞ்சமதை பிளப்பதுபோல் நேரிடும் ஓர்ஆபத்து
அஞ்சியலறி கண்விழித்தால் அறிந்திடுவோம் அதுகனவு
ஏனிந்த வாழ்க்கையென்று எண்ணங்கள் வரும்போது
ஆன்மீகக் கண்விழித்தால்
அத்தனையும் நெடுங்கனவு

பணம்வேண்டும் புகழ்வேண்டும் பதவிபல வேண்டுமென்று
கணம்தோறும் காண்பதெல்லாம் குட்டைக் கனவு
மனிதனாக பிறந்தநான் மகானாக வேண்டுமென்ற
நினைவோடு காண்பதொன்றே நெட்டைக் கனவு

கடவுளவன் கைவண்ணம் கனவுயெனும் ஓர்உலகம்
தடயமென்று அதைப்பார்த்தால் தன்னையுணர வைத்துவிடும்
காணுகின்ற உலகெல்லாம் கடவுளவன் கனவுதான்
ஞானமென்னும் கண்விழித்தால்
நாமெல்லாம் கடவுள்தான்

கார்குல சொந்தங்களுக்கு!

வணக்கம். நம் விவசாய தொழிலுக்கு அழுத்தமான குரல் கொடுத்து பெருமை சேர்த்தவர் அமரர் 'நம்மாழ்வார்' அவர்கள்.

நம் நாட்டு மக்களின் உடல் நலத்தில் அக்கறை கொண்டு; இரசாயண இடு பொருள் பயன்படுத்தாத உணவு பொருள்கள், பழங்கள் அதன் சத்துக்கள் பற்றி நம்மிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி கொண்டிருப்பவர் திரு. Dr. சிவராமன் அவர்கள்.

அவருடைய அயராத முயற்சியினால்தான் தற்போது; குதிரைவாலி, மாப்பிள்ளைசம்பா, சீரகசம்பா, கருப்புகவுனி மற்றும் பல அரிசி வகைகள் மக்களுக்கு தெரிய வந்தன. அதனால் அதை பயன் பற்றி அறிந்து வருகின்றனர், சுவைத்து வருகின்றனர்.

மாடுகள் / ஆடுகளைக் கொண்டு 'கிடை' கட்டுதல் மூலம் நிலத்திற்கு அதிக சத்து கிடைக்கும், நிலத்தின் தரம் கெடாமல் இருக்கும். இந்த முறையை வருடத்திற்கு ஒரு முறை அவசியம் தொடர்ந்து செய்து வருவது நிலத்திற்கு மிகவும் நல்லது. மேலும் மரத்தில் இருந்து கழித்த தழைகள் இவைகள் மிகவும் நல்லது. இந்த முறையில் கிடைத்த உணவு பொருள்களை சாப்பிட்டு வளர்ந்த என் தாத்தா / பாட்டி – 85/90 வயது வரை எந்தவித நோய் இன்றி நடமாட்டத்துடன் வசித்து இறந்தார்கள்.

தற்போது குழந்தைகளுக்கே கிட்னி பிராப்ளம், கேன்சர், கண் பிரச்சனைகளுக்கு ஆளாகி பாதிக்கபடுகின்றனர். இவைகளுக்கு ஒரே தீர்வு: இயற்கை வளத்தை ஆதரித்து, இயற்கை முறையில் தயார்க்கப்பட்ட உணவுகளை சாப்பிட்டு நோயின்றி வாழ வழி வகுக்கும்.

S. சிவசண்முகம்,
இராசேந்திரப்பட்டினம்,
9994687379



மகாகணபதி சுயம்புவாக தோன்றி அருள்பாலிக்கும் திருத்தலங்கள்.

1. காணிபாக்கம் ஆந்திர தமிழக எல்லையில் அமைந்துள்ள தலம்.
2. ஆனந்த தாண்டவபுரம் பஞ்சவடீஸ்வரர் கோயிலில் அமைந்துள்ள விநாயகர்.
3. நவசித்தி விநாயகர் பொன்னை ஓட்டனேரி வேலூர் மாவட்டம்.
4. பெங்களூர் பசவங்குடியிலிருக்கும் பல பிரசித்திப்பெற்ற கோயில்களுள் தொட்ட கணபதி மிகப்பெரிய உருவம் உடையவர் 18 அடி உயரம் 14 அடி அகலம்.
5. பாதாள குகையில் சுயம்பு விநாயகர் கர்நாடக மாநிலம்.
6. காஞ்சனகிரி, வேலூர் மாவட்டம், ராணிப்பேட்டை அருகே லாலாப்பேட்டையருகில் 1500 அடி உயரத்தில் அமைந்துள்ளது. சுயம்பு விநாயகர் கோயில் கொண்டுள்ளார்.
7. நாகை மாவட்டம் நன்னிலம் வட்டம், பூந்தோட்டம் அருகில் உள்ள கூத்தனூரில் விநாயகர், சுயம்பு நர்த்தன விநாயகராவார்.
8. பாலாற்றின் வடக்கரையில் ஆர்க்காடு ராணிப்பேட்டையில் அழகிய விநாயகர் திருக்கோயில்.
9. மருதமலை கோயில் அடிவாரத்தில் ஒரு அடி நீளம் ½அடி உயரம் உள்ள விநாயகர்.
10. நாகை மாவட்டம் கீவளூர் பகுதியில் மோகனூர் அருகில் செண்பகபுரத்தில் அருள்பாலிக்கும் ஆதிகும்பேஸ்வர விநாயகர்.
11. வேலூர் மாவட்ட, கேணிபாக்கத்தில் திருமணத்தடை நீக்கும் செல்வ விநாயகர் கோயில் கொண்டுள்ளார். செண்பக காடாக இருந்ததால் செண்பக வனம் எனப்பெயர். பின்னர் மருவி சேண்பாக்கம் ஆயிற்று இங்கு ஆதிசங்கரர் வழிப்பட்ட சுயம்பு விநாயகர் உள்ளது. 1. பால விநாயகர், 2. நடன விநாயகர், 3. ஓம்கார விநாயகர், 4. கற்பக விநாயகர், 5. சிந்தாமணி விநாயகர், 6. செல்வ விநாயகர், 7. மயூர விநாயகர், 8. மூஷிக விநாயகர், 9. வல்லபவிநாயகர், 10. சித்திபுத்தி விநாயகர், 11. பஞ்ச முகவிநாயகர், பாலவிநாயகர் நீரில் மூழ்கியபடி காட்சி தருகிறார். செல்வ விநாயகருக்குத்தான் அபிஷேக ஆராதனை நடக்கிறது. விநாயகசபை என்ற பெயரும் உண்டு.
12. பொல்லாப்பிள்ளையார் திருநாரையூர் காட்டுமன்னார் கோயில் வட்டம், கடலூர் மாவட்டம்.
13. சேரன்மாதேவி திருநெல்வேலி மாவட்டம், சுயம்பு விநாயகர் மிளகு அரைத்துப் பூசினால் மழைவரும்.
14. சக்தி விநாயகர், போரூர், சென்னை.
15. அரசமர பிள்ளையார் கர்நாடக மாநிலம்.
16. விநாயகர் – டேக்கடி கணேஷ்மந்திர், நாகபுரி.
17. கற்பக விநாயகர், கற்பரக்ஷாம்பிகை கோவில், பாபநாசம் வட்டம்.

வித்தியாச விநாயகர் :

1. இராமேஸ்வரம் சங்கர மடத்தில் ஒரே தூணில் 18 வகையான விநாயகரை தரிசிக்கலாம்.
2. கொல்லூர் மூகாம்பிகை கோவில் பிரகாரத்தில் 10 கைகளுடன் விநாயகர் வித்யாசமாக காட்சியளிக்கிறார்.
3. கர்நாடக மாநிலம் தோதாணம் கோவிலில் தும்பிகை இல்லா விநாயகரைப் பார்க்கலாம்.
4. தென்னகத்தி பிள்ளையாருக்கென்று தனித்தலம் உள்ள இடம் பிள்ளையார்பட்டி.
5. வடநாட்டில் விநாயகருக்கு உள்ள தனித்தலம் கணேஷ்கிண்டர்.

6. கணபதி அக்ரஹாரம் என்ற ஊர் விநாயகருக்கு சிறப்பு சேர்க்கும் ஊராகும். விநாயகர் கோவில் கொண்டுள்ள தலம்.

7. தேன் உறிஞ்சும் விநாயகர் – கும்பகோணம் அருகே திரும்புறம்பயம் சாட்சிநாதர் கோயில். அபிஷேஹம் செய்யப்படும் தேன் முழுவதும் உறிஞ்சப்படுகிறது.

8. தும்பிக்கை இல்லாத விநாகர் – கண்டரமாணிக்கம், திருப்பத்தூர் அருகில் சிவகங்கை மாவட்டம்.

9. விநாயகர் அறுபடை ஸ்தலங்கள் :

அல்லல் தீர்த்த விநாயகர் – திருவண்ணாமலை.

ஆழத்துப் பிள்ளையார் – விருத்தாசலம்.

கள்ளவாரணம் பிள்ளையார் – திருக்கடையூர்.

சித்தி விநாயகர் – மதுரை.

பொல்லாப் பிள்ளையார் – திருநாரையூர்

1. குரு – விநாயகர் தலை பகுதி
2. சூரியன் – நெற்றி பகுதி
3. சந்திரன் – நெற்றி
4. சனி – முன்னங்கால்
5. புதன் – வலது பின்னங்கை
6. செவ்வாய் – வலது கால்
7. ராகு – இடது முன்னங்கை
8. சுக்ரன் – இடது பின்னங்கை
9. கேது – இடது கால் (பிள்ளையாரின் பின் பகுதியில் யோக நரசிம்மர்)

11. கிரீடம் இல்லாத குழந்தை விநாயகர், காவேரிபட்டினம் அருகே பெண்ணேசுரமடம், தர்மபுர மாவட்டம்.

12. யானை தலைக்கு பதிலாக மனித தலை உருவில் அபூர்வமாக விநாயகர், நரமுக விநாயகர் – பூந்தோட்டம் கூத்தனூர் திலதர்ப்பனாபுரி மற்றும் சிதம்பரம் ரத வீதி.

13. பாதிரி மலரேந்திய விநாயகர் – பாடலீஸ்வரர் கோயில், திருப்பாதிரிபுலியூர், கடலூர்.

– சௌமியா குமார்,
புதுச்சேரி.

வெள்ளாழர் விளக்கம்

கடையில் விற்கும் எந்தப் பொருளையும் அதன் தன்மையறிந்து விளக்கம் கேட்டு ஆய்ந்த முடிவுக்குப் பின் அதை வாங்கி மகிழ்கிறோம் அனுபவிக்கிறோம் எதிரில் இருக்கும் பொருளை ஆய்வு செய்யத் தெரிந்த நாம் நம்மைப்பற்றி ஆய்வு செய்வதில்லை. இடர்பாடு வரும்போது தாய் தந்தையரிடம் கேட்டுத்தெளிகிறோம்.

அம்மா நாம என்ன சாதிம்மா என் நண்பன் கேட்டான். தெரியாது ஆனால் நாங்க சைவம் அதான் தெரியும் என்றேன் சைவமா? முட்டையெல்லாம் சாப்பிடற அது சைவமாடா முட்டை அது மட்டும் சாப்பிடுவோம் என்று கூறுகிறான். மருத்துவர் ஆலோசனைப்படி அவளுக்கு விட்டமின் குறைவா இருக்கு அதனால் முட்டை கொடுங்கன்னு சொல்லியிருப்பாரு அது கூட அவனுக்குத் தெரியாது சரி நாம வெள்ளாழர் விளக்கத்திற்கு வருவோம்.

1. வெள்ளாமை – விவசாயம்

நிலத்தை ஆடி உழுபவர் – ஆழ

வெள்ளாமைக்காக ஆழ – வெள்ளாழர்.

2. வேளாண் – விவசாயம்

வேளாண்மை செய்பவர் – வேளாளர்.

3. வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான் பாடல் வரிகளில் வரும்.

4. விவசாயத்தை ஆண்மை செய்பவன்

(ஆள்பவன்) வேளாளன் என்பதாகும்.

5. வேளாண் – காராளனாக மாறியது எப்படி?

6. வேளாண்மை செய்வதற்கு நீர் அவசியம் நீருக்கு – மழை தேவை.

கார்மேகம் கண்திறந்தால் மழைநீர் சுரக்கும் நெற்றி மீது கை வைத்து வானத்தைப் பார்ப்பார் வேளாளர் இன்றாவது மேகம் கண் திறக்குமோ?

கார் – மழை – மழை மேகம் பொழியுமா? என்றெல்லாம் பேசுவர். கார்மேகத்தை எதிர்பார்த்து காருக்குகாக காத்திருப்பவர் கார்காத்தார் – கார்காத்தார் என்றெல்லாம் மருவி வந்தது.

கார்காத்து வேளாண்மை செய்தலால்

கார்காத்த வேளாளர் என்று சொல்லும் பழக்கம் வந்தது.

புலவர் மா. பாலசுந்தரம்,
இந்திரா காந்தி நகர், புதுச்சேரி – 1.
9994622086

தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு
புதுச்சேரி கிளை
கார்குல சொந்தங்கள் சந்திப்பு
மற்றும்
"கார்காத்தார் ஒப்புரவு" எழுச்சி விழா வெற்றி பெற நன்கொடை அளித்த நல்இதயங்களுக்கு நன்றி

கார்குல "கர்ணன்" வள்ளல்

உயர்திரு. **S. வெங்கடேசன் பிள்ளை**

திரு. M. கேப்டன் பிரதாபன்
Dr. C. வைத்திலிங்கம்
திரு. M.A.J. ராஜேந்திரன்
திருமதி. பிரேமா ராஜேந்திரன்
திரு. J. ராஜன்பாபு
திரு. S. வெங்கடேசன்
திரு. K. ராஜேந்திரன்
திரு. சிவ. மாதவன்
திரு. G. பத்மநாபன்
திரு. J. ரவீந்திரன்
திருமதி. வானதி ரவிந்திரன்
திரு. N. இளஞ்செழியன்
திரு. G. ஞானசேகரன்
திரு. T. பாலதண்டாயுதம்
திரு. M. தமிழ்செல்வன் சுந்தரி
திரு. S. சிவசண்முகம்
திரு. V. சந்திரமோகன்
திரு. S. மருதவாணன்
திரு. U. ஆனந்தன்
திரு. M. மணிகண்டன்
திரு. A. சீனிவாசன்
திரு. M. கமலக்கண்ணன்
திரு. R. கார்த்திகேயன்
திரு. N. சுப்ரமணியன்
திரு. S. ராமலிங்கம்
திரு. S. ராமதாஸ்
திரு. M. கார்த்திகேயன்
திரு. G. பாலமுருகன்
திரு. T. பாலகிருஷ்ணன்
திரு. M. ஜெயக்குமார்
திரு. M. சிவகுருநாதன்
திரு. P.S. தமிழ்செல்வன்
திரு. A. ராஜசேகரன்
திரு. V. முருகேசன்
திரு. மதிவாணன்
திரு. T. சிவக்குமார்
திரு. K. சேகர்
திரு. S. செந்தில் வடிவேலன்
திருமதி. G. விஜயகுமாரி பாரிவள்ளல்
திருமதி. கண்ணகி செல்வகுமார்
திருமதி. சூர்யா பிரபா
செல்வி. சரண்யா குமார்

தொடர்ச்சி செப்டம்பர் மாத இதழில் ...

தமிழனின் சாதனை பட்டியல்கள்

தமிழன் என்ன கண்டுபிடிச்சான் என்று பலரும் கேட்டு கொண்டிருக்கும் நேரத்தில் தமிழனின் சாதனை பட்டியல்கள் .....

நமது வரலாறு நமக்கு அவசியம் தெரிந்திருக்க வேண்டும்...

பதாகைக்கு வரலாறு தேட வேண்டிய நிலைமை பிறர்க்கு, வரலாற்றுக்கு புத்தகமே போடும் நிலைமை தமிழர்களுக்கு!

கல்லணை :

உலகிலுள்ள அணைகளுக்கு முன்னோடியான கல்லணை கட்டப்பட்டு ஈராயிரம் ஆண்டுகள் முடியப் போகும் நிலையிலும், நொடிக்கு இரண்டு இலக்கம் கன அடி நீர் செல்லும் காவிரியை, கரைபுரண்டோடும் காட்டாற்றைதடுத்துகரிகாலன்அணைகட்டியதொழில் நுட்பத்தை, இன்றைய ஆங்கில அறிவியலாளர்களால் கண்டறிய இயலவில்லை. கரிகாலன் என்ன ஆங்கில அறிவை பெற்றா கல்லணையை கட்டினான் ?

மாமல்லபுரம் :

கடற்சீற்றத்திற்குஇடையே,கடற்கரையோரமாக 1400 ஆண்டுகளுக்கு முன் பெரும் பாறை ஒன்றின் முகப்பை மட்டும் பட்டையாகச் செதுக்கி, அதன் பின் உள்நோக்கி குடைந்த வகையில் உருவாக்கப்பட்டவையே மாமல்லபுரம் குடைவரைக் கோயில்கள். மாமல்லபுரத்தின் உச்சி கோபுரம் மட்டும் 60 அடி. கோபுரத்தை தாங்கும் வகையில் முதலில் தூண்கள் செதுக்கப்பட்டன. மாமல்லபுரத்தை உலக வழி தோன்றல் சின்னமாக யுனேசுகோ அறிவித்துள்ளது. நரசிம்ம பல்லவன் என்ன ஆங்கிலம் பயின்றானா ?

அங்கோர்வாட் கோயில் :

உலகின் மிகப் பெரிய கோயிலை இரண்டாம் சூரிய வர்மன் என்ற தமிழ் மன்னன் கம்போடியாவை கைப்பற்றிய போது அங்கு உள்ள அங்கோர்வாட் என்ற இடத்தில் இக்கோயிலை கட்டியுள்ளான். இன்று வரை உலகில் கட்டப்பட்ட வழிபாட்டுத் தலங்களிலேயே இது தான் மிகப் பெரியது.

திரும்பிய திசை எல்லாம் சிற்பங்கள், இந்த கோயிலின் நான்கு பக்க சுற்று சுவர்களும் முறையே 3.6 கிலோ மீட்டர் நீளமுடையவை. 40 ஆண்டுகளில் இது கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இன்றைக்கு இருக்கக்கூடிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி கட்டினால் கூட 300 ஆண்டுகள் ஆகும். இக்கோயிலின் முழு உருவத்தை காண வானத்தில் 1000 அடிக்கு மேல் சென்று அங்கிருந்து பார்த்தால் மட்டும் தான் இதை முழுமையாக காண முடியும். இதை முழுமையாக ஒளிப்படம் எடுக்க முடியும். இதன் முழு கட்டிடமும் அப்போது தான் பதிவாகும்.

திருநள்ளாறு காரி ஈசன் கோயில் :

எந்த ஒரு செயற்கைகோளும் தமிழ்நாடு அருகில் உள்ள புதுச்சேரி திருநள்ளாறு காரி ஈசன் கோவிலுக்கு மேல் நேர் உள்ள வான்பகுதியை கடக்கும் போது 3 வினாடிகள் செயலிழந்து விடுகிறது. அதே நேரத்தில் செயற்கை கோள்களுக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படுவதில்லை. இதை பற்றி நாசா அறிவியலாளர்கள் ஆராய்ந்தனர். முடிவு வியப்பை தந்தது.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வினாடியும் கண்ணுக்கு தெரியாத கருநீல கதிர்கள் அந்த கோவிலின் மீது விழுந்து கொண்டே இருக்கிறது. இரண்டரை வருடங்களுக்கு ஒரு முறை நடக்கும் சனி பெயர்ச்சியின் போது இந்த கருநீல கதிர்களின் அடர்த்தி மிகவும் அதிகமாக இருக்கும். விண்வெளியில் சுற்றி கொண்டிருக்கும் செயற்கைகோள்கள் இந்த கருநீலகதிர்கள் பாயும் பகுதிக்குள் நுழையும் போது செயலிழந்து விடுகிறது. அதே நேரத்தில் செயற்கை கோள்களுக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படுவதில்லை.

இன்றைய ஆங்கில அறிவியல் தொழில் நுட்ப செயற்கை கோள்களால் கண்டறியப்படும் காரியின் கதிர்வீச்சை, கதிர்வீச்சு விழும் பகுதியை கண்டுபிடித்து அதற்கென ஒரு கோயிலையும் கட்டி, கதிர்வீச்சுகள் மிகுதியாக விழும் நாட்களையும் கணக்கிட்டு அதற்கான நாளை சனி பெயர்ச்சி என்று அறிவிக்கும் தமிழர்களின் அறிவியல் திறமையை, என்னவென்று சொல்வது. தமிழ் வழி கல்வி பயின்ற தமிழர்கள் செய்த செயலை ஆங்கில அறிவியல் தொழில் நுட்பத்தால் இன்றளவும் செய்யவும் முடியவில்லை, கண்டறியவும் இயலவில்லை.

கடல் நடுவே ராமேசுவரம் :

கடலுக்கு நடுவே உள்ள ராமேசுவரம் தீவில் மலைகளோ பாறைகளோ கிடையாது. ராமேசுவரம் கோயில் 1500 ஆண்டுகள் பழமையானது. 1212 மிகப் பெரிய தூண்கள், 590 அடி நீளம் 435 அடி அகலம் கொண்ட உலகின் மிகப் பெரிய நடை மண்டபம், மற்றும் கற்கோயிலை எவ்வாறு உருவாகியிருக்க முடியும். பெரும் பாறைகளை பாம்பனிலிருந்து கடற் கடந்து எவ்வாறு ராமேசுவரம் கொண்டு சென்றிருக்க முடியும் என்பதை ஆங்கிலம் பயின்ற அறிவாளிகள் கண்டறிந்து சொல்லட்டும்.

தஞ்சாவூர் பெருவுடையார் கற்கோயில் :

கற்களே கிடைக்காத காவிரி சமவெளி பகுதியில் 66 மீட்டர் உயரம், 15 தளங்கள் கொண்ட தஞ்சாவூர் பெருவுடையார் கற்கோயிலை இராஜ இராஜ சோழன் எவ்வாறு கட்டினான் என்பது புரியாத புதிர். கோயிலின் கடை கால் வெறும் 5 அடி ஆழத்தில் அமைக்கப்பட்டுள்ளது. புவி ஈர்ப்பு மையத்தை கண்டறிந்து அதற்கேற்ப வெற்றிட அமைப்பில் கட்டப்பட்ட அறிவியல் நுட்பம் கொண்டது. சுமார் 80 ஆயிரம் கிலோ எடை கொண்ட ஒற்றை கல்லை எவ்வாறு கோயிலின் உச்சியில் நிறுவியிருக்க முடியும். பாறையின் மேல் வரும் அழுத்தம் குறித்த சோதனைகளை ஆயிரம் ஆண்டுக்கும் முன்பே தமிழர்கள் கண்டறிந்துள்ளனர். அதன் அடிப்படையிலேயே ஒற்றை கல்லை உச்சியில் நிறுவி சிற்பிகள் கோயிலை உருவாக்கி உள்ளனர். கோயில் முழுவதும் ஒரே தன்மையான செந்நிறக் கற்களால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதை இந்திய வழி தோன்றல் சின்னமாக யுனேசுகோ அறிவித்துள்ளது. ஆங்கில வழியில் பயின்றவர்களாலும், அவர்களது அறிவியல் தொழில் நுட்பத்தாலும் இன்றளவும் கண்டறிய இயலவில்லை. இராஜ இராஜ சோழன் என்ன ஆங்கிலம் கற்றவனா ?

தொல்காப்பியமும் திருக்குறளும் :

5000 ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட தொல்காப்பியமே, உலகில் உள்ள மொழிகளின் இலக்கண நூல்களுக்கு முன்னோடியாக விளங்குகிறது. தமிழ்நாட்டின் எல்லைகளை வரையறைத்து கூறியுள்ளது. ஒருயிர் முதல் ஆறறிவு உயிர் வரை பகுத்து கூறியுள்ளது. பன்னெடுங்காலத்திற்கு முன் இயற்றப்பட்ட இலக்கண நூல் அகத்தியம் என்று குறிப்பிடுவதன் மூலமாக தமிழில் தொன்மைக்கு சான்றாக இருக்கிறது.

2000 ஆண்டுக்கு முன் இயற்றப்பட்ட உலக பொது மறையான திருக்குறள் உலகின் 26 மொழிகளில் வெளிவந்துள்ளது. ஆங்கிலத்தில் 40 பேர் மொழி பெயர்த்துள்ளனர். தமிழ் மொழியின் சிறப்பை அறிந்த ஆங்கில மொழி அறிவு பெற்றவர்கள் தமிழ் மொழியை போற்றி கை கூப்பி வணங்குகின்றனர். இது போன்ற சொற்செழுமை வாய்ந்த நூல்களை ஆங்கிலத்தில் இயற்ற முடியுமா ? எல்லா உறவு முறைகளுக்கும் ஆண்டி, அங்கிள் என்று விளிக்கும் ஆங்கிலத்தில் இது சாத்தியமா ? தமிழர்கள் சிந்திக்க வேண்டும்.

அணு :

"அணுவின் அணுவினை ஆயிரங் கூறிட்டு
அணுவின் அணுவினை... அணுகவல்லார்க்கு
அணுவின் அணுவினை அணுகலுமாமே"

– ஆசான் திருமூலர்.

சித்தர்களின் அறிவியலின்படி எண்ணிலடங்கா கோடி அண்டங்கள், பேரண்டங்கள், தோன்றுவதற்கு மூல காரணமாக விளங்கி எல்லாப் படைப்புக்கும் அடிப்படையாக இருப்பது ஒரு அணு ஆற்றல். ஓரணுவை ஆயிரங் கூறாக்கினால் கிடைக்கும் அளவற்ற ஆற்றலையே சித்தர்களும் ஞானிகளும் பரமாணு என்று சொல்கிறார்கள். பரமாணு என்பது பிரிக்க முடியாத அணு என்பது பொருள். அந்தப் பரமணுவே பரந்து விரிந்து கிடக்கின்ற அண்ட பேரண்டங்களை இயக்கிக் கொண்டிருக்கின்றது என்பதை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கண்டறிந்து கூறியவர்கள் சித்தர்கள். அணுவை சுற்றி மின் காந்தம் அமைந்திருப்பதை கண்டறிந்து கூறியவர்கள் சித்தர்கள். அவ்வை பாட்டியும் அணுவைத் துளைத்து ..... என்று பாடி உள்ளார்.

சித்தர்கள் :

சித்தர்கள் என்பவர்கள் மருத்துவர்கள், அறிவியலாளர்கள், மக்களை நல்வழிப்படுத்தும் சான்றோர்கள். நூறு ஆண்டுகள் கடந்து வாழும் சூத்திரத்தை கண்டறிந்தவர்கள். அவர்கள் கண்டறிந்த சித்த மருத்துவ முறையை நாம் மதிக்கத் தவறி விட்டோம். தீராத நோய்களுக்கெல்லாம் சித்த மருத்துவத்தில் தீர்வு உண்டு. கடந்த ஆண்டு டெங்கு காய்ச்சலுக்கு சிறந்த மருந்து சித்த மருத்துவ முறையே என தமிழக அரசு அறிவித்த பொழுதே தமிழர்கள் அதன் பயனை சிறப்பை முழுமையாக உணர்ந்தனர். இத்தகைய சித்த மருத்துவ முறையை சித்தர்கள் ஓலை சுவடிகளில் தங்களது தாய்மொழியான தமிழிலேயே எழுதி வைத்துள்ளனர்.

வானியல் அறிஞர்கள் :

பூமி உருண்டை என்றும், சூரியனை சுற்றியே ஒன்பது கோள்கள் வலம் வருகின்றன என்றும், அதைத் தொடர்ந்து நிகழும் கும்மிருட்டு, முழுநிலவு மற்றும் பருவ மாற்றங்கள் என அனைத்தையும் அன்றே கணித்த வானியல் வல்லுனர்கள் தமிழர்களே ! சிவன் கோவிலுக்கு சென்றால் அங்கே ஒன்பது கிரகங்களை நன்றாக கவனியுங்கள். அந்த சிலைகளின் மேல் கட்டப்பட்டுள்ள துணிகளின் நிறம் கோள்களின் நிறத்தை அடிப்படையாக கொண்டே இருக்கும்.

தமிழர்கள் என்றோ கண்டுபிடித்ததை ஆங்கில அறிவு பெற்றவர்கள் இன்று கண்டறிந்து கூறுவதை நாம் உயர்வாக மதிக்கிறோம்.

பூம்புகார்.... உலகின் தொன்மையான நகரம் :

9500 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட கடற்கோளில் மூழ்கிய நகரம் பூம்புகார் ஆகும். கிறிஸ்து பிறப்பதற்கு 7500 ஆண்டு முந்தைய நகரம் இதுவாகும். அதாவது 9500 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட கடல் கோளில் மூழ்கின. பூம்புகாரும் குசராத்தின் காம்பேவும் அரப்பா, மொகஞ்சதரோ நாகரிகங்களை விடப் பழமையானவை ஆகும். பூம்புகார் நகர் கடலில் மூழ்கியுள்ளதை ஆங்கிலேயே அறிஞர் கிரகாம் குக் என்பவர் காணொளி, ஒளிபடச் சான்றுகளுடன் உலக நாடுகளுக்கு நிரூபித்தார். அதில் மண் கல்லான கருவிகள், மனித எலும்புகள், வீட்டுச் சுவர்கள், பாத்திரங்கள், ஆபரணங்கள், வீட்டு முற்றங்கள் ஆகியவை காணப்படுகின்றன.

உலகை கட்டி ஆண்ட தமிழன் :

கடற் வழியே படை எடுத்து சென்று உலகை கட்டி ஆண்ட அருள்மொழித் தேவன் அறிமுகப்படுத்தியதே உலகம் முழுவதும் ஜனநாயகம் என்று போற்றி புகழும், மக்கள் வாக்களித்து தலைவனை தேர்ந்தெடுக்கும் குடவோலை முறையே அறிமுகப்படுத்தியவன் பேரரசன் அருள்மொழித்தேவனே.... வெற்றி பெற்ற நாடுகளில் எல்லாம் அம்மக்களை அடிமைப்படுத்தாது சிறப்பான ஆட்சி புரிந்து, அம்மக்களை விடுதலையோடு வாழ வைத்தவன் தமிழனே.

அத்தகைய உயரிய பண்பாடு ஒழுக்க நெறிகளோடு வாழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பது நிரூபனமாகிறது. இவ்வளவும் நமது பாட்டன், முப்பாட்டனின் பெருமைகள். நாம் இவற்றை பாதுகாத்து அழியாமல் காப்பாற்றினாலே போதும். இவையணைத்தும் நான் படித்து ரசித்தவையே. உங்களது மேலான பார்வைக்கும் பதிந்திருக்கிறேன். நமது வரலாற்றை நமக்கு அடுத்து வரும் தலைமுறையினர் தெரிந்து கொள்ளவும் நமது முன்னோர்கள் எவ்வளவு சிறப்பான வாழ்க்கையினை வாழ்ந்துள்ளார்கள் என்பதை அறிய இது உதவும்.

– அர்ச்சனா சுவேதாரண்யம்,
சென்னை–90.
செல் : 9943702054

பெண்மை போற்றுதும்!
பெண்மை போற்றுதும்!

"ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காண்
என பாரதி கண்ட
புதுமைப் பெண்களாய்
கார்குலப் பெண்டிர்!

கல்வியில் முந்தும்
கலை வாணிகளாய்
கார்குல மகளிரர்!

பொறியியல், மருத்துவமென
அனைத்துத் துறைகளிலும்
கோலோச்சி வரும்
மங்கல மங்கையர்!

விவசாயத்தால் உயர்ந்த
"பண்ணை வாழ்வு"
வீழ்ச்சியுறும் தருணத்தில்
அறிவெனும் ஆயுதத்தால்
மீட்டெடுக்கும் மாதரசிகள்!

பொருளாதாரத்தில்
புரட்சி படைக்கும்
புதுமைப் பெண்டிர்!

ஈரெட்டு வயதில்
விளக்கேற்றி வைக்கும்
எழில் குல மகளிர்!

புகுந்த வீட்டோடு
பிறந்த வீட்டிற்கும்
ஒளிவிளக்காய் ஒளிரும்
பொன் மணி தீபங்கள்!

மணம் முடிக்கும்
காலம் வரை
தாய் தந்தையர்
நலம் காக்க
அன்போடு ஈட்டித்தரும்

இந்த இளைய மகளிரின்
நாணயத்தின் முன்
அந்த உலக நாடுகளின்
டாலரும் பவுண்டும்
தோற்றுத்தானே போகும்!

"நம் மக்கள் சிறு கை
அளாவிய கூழ் – அமிழ்தினும்
ஆற்ற இனிதே" என
வள்ளுவன் குறளாய்
வனிதையர் வாழ்வியல்!

குடும்பப் பாசத்தை
கோபுரமாய் உயர்த்தும்
கண்ணியர் வாழ்க!
கார்குலம் உயர்க!

– மெய்யாத்தூர் சொ. வேல்முருகன்.
9578286891

நட்சத்திங்களும் மரங்களும் (தொடர்ச்சி)

அக்ரி. கு. சேதுசுப்பிரமணியன் – சிதம்பரம்.
அலைபேசி : 9443665642

16. விசாகம்

விசாக நட்சத்திரம் இந்திய வானியலிலும், சோதிடத்திலும் இராசிச்சக்கரத்தின் 16–வது பிரிவாக வருவதாகும். இந்த நட்சத்திரத்தின் முதல் மூன்று பாதங்கள் துலாம் இராசியிலும் 4–வது பாதம் விருச்சிக இராசியிலும் இடம் பெறுகின்றன. முருகப் பெருமானின் அவதார நட்சத்திரமாக விசாகம் விளங்குகின்றது. வைகாசியில் சந்திரன் முழுநிலாவாக விசாக நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும். அதனால் தான் இந்த மாதத்துக்கு வைசாகம் என்ற பெயர் நிலவி வைகாசி என்றாயிற்று. வைகாசி முழு நிலவின் விசாக நட்சத்திரத்தில் தான் முருகப் பெருமானின் அவதாரம் நிகழ்ந்தது. முருகப் பெருமானுக்கு விசாகன் என்ற பெயரும் உண்டு. "வி" என்றால் பறவை (மயில்) , "சாகன்" என்றால் சஞ்சரிப்பவன் என்பது பொருள். அதாவது மயில் வாகனன், மயில் மீது வலம் வருபவன் என்பதாகும். முருகப் பெருமான், பகைவனுக்கும் அருள் செய்யும் கருணையுள்ளத்துடன் அசுரன் சூரபத்மனையே தன்னுடைய வாகனமாக மயிலாய் இருக்கும் படி அருள் புரிந்தார்.

விசாக நட்சத்திரத்தின் கிரகாதிபதி குரு பகவான் ஆவார். இதன் அதிதெய்வம் தேவர்களின் புரோகிதரான இந்திராக்னி, கணம் இராட்சசம், மிருகம் பெண்புலி, குணம் சாத்வீகம், விருட்சம் விளா, பறவை செவ்வாய்க் குருவி என்பவையாம்.

விசாக நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் நீதிக்கும், நேர்மைக்கும் தலை வணங்குபவர்கள். சிறிது முன் கோபம் உடையவர்களாக இருப்பார்கள். கலையார்வம், தெய்வபக்தி, ஞானமார்க்க ஈடுபாடு போன்ற குணங்களைக் கொண்டிருப்பார்கள். தனம் சேர்க்கக் கூடியவர்கள். உறவினர்கள், நண்பர்களுக்கு உதவும் மனப்பான்மை உடையவர்கள். கர்வமும், தற்புகழ்ச்சியும் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். விசாக நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் முருகனை இஷ்ட தெய்வமாக வழிபடலாம்.

விசாக நட்சத்திரத்துக்குரிய விளா மரத்தை தல விருட்சமாகக் கொண்ட, சோழ நாட்டின் வடகரைத் தலங்களில் 19–வது சிவத்தலமாக விளங்கும் திருநின்றியூர் என்னும் தலம் பரிகாரத் தலமாக அமைகிறது. தேவார மூவரின் பாடல் பெற்ற தலமாகவும், தருமை ஆதீனத்தின் ஆளுமைக்கு உட்பட்ட தலமாகவும் உள்ளது. இறைவன் பெயர் இலட்சுமிபுரீசுவரர், இறைவியின் பெயர் உலகநாயகி, தீர்த்தம் லட்சுமி தீர்த்தம்.

தலவரலாறு

மகரிஷியான ஜமதக்னி முனிவர், தன் மனைவி ரேணுகாதேவி, கந்தர்வன் ஒருவனின் அழகை நீரில் கண்டு மயங்கியதால் அவனது தலையை வெட்டும்படி தன் மகன் பரசுராமரிடம் கூறினார். தந்தை சொல் மீற முடியாத பரசுராமரும் தன் தாயின் தலையை வெட்டினார். தன் தாயின் உயிரை மீண்டும் உயிர்ப்பிக்க முனிவரிடம் வரம் பெற்று, உயிர்ப்பித்து, தாயைக்கொன்ற தோஷம் நீங்க இத்தலத்தில் சுயம்புவாக விளங்கிய சிவனை வழிபட்டு மன அமைதி பெற்றார். ஜமதக்னியும் தான் அவசரப்பட்டு செய்த பாவம் விலக, இறைவனை வேண்டி நிற்க சிவபெருமானும் காட்சி தந்து அருள் புரிந்தார்.

மகாலட்சுமியும் இத்தலத்து இறைவனை வழிபட்டு திருமாலின் திருமார்பில் நீங்காமல் இருக்கும் வரம் பெற்றதாக தல புராணம் கூறுகிறது. அதனால் தான் மகாலட்சுமீசுவரர் என்ற திருநாமம் கொண்டு இறைவன் அருள் புரிகிறார்.

சோழ மன்னன் ஒருவன், தினமும் சிதம்பரம் ஸ்ரீநடராஜர் கோயிலுக்குச் சென்று, பூஜையில் கலந்து கொண்டு அரண்மனை திரும்பும் போது, காடாக இருந்த திருநின்றியூர் பகுதியில் காவலர்களின் தீவட்டி அனைந்து போவது வழக்கமாக இருந்தது. ஒரு நாள் பகல் பொழுதில் அந்தப் பகுதியில் பசு ஒன்று வானிலிருந்து இறங்கி பின்னர் மீண்டும் வான் வழி. ஏகியதைக் கண்ட மன்னன் அந்தப் பகுதியைச் சுத்தம் செய்ய ஆனையிட்டான். ஒரு இடத்தில் பாறையால் குத்தும் போது இரத்தம் பீறிட்டு எழுந்தது. அங்கு சுயம்பு லிங்கம் இருப்பதைக்கண்ட மன்னன், அவ்விடத்தில் ஆலயம் எழுப்பினான். இன்றும் சிவலிங்கத்தின் பாணத்தில் வெட்டிய பகுதி குழியாய் இருப்பதைக் காணலாம்.

தல விருட்சம்

திருநின்றியூர் திருத்தலத்தின் தல விருட்சம் விளா மரமாகும். ஆங்கிலத்தில் wood apple என்று அழைக்கப்படும். இம்மரத்தின் தாவரவியல் பெயர், Feronia limonia (L) Syn Feronia elephantum என்பதாகும். Rutacea என்ற தாவரக் குடும்பத்தைச் சேர்ந்தது. விளா மரம் நம் இந்தியநாட்டைத் தாயகமாகக் கொண்டது. சமவெளி முதல் 1000 மீட்டர் உயரம் உள்ள மலைப்பகுதிகளிலும் வளரும் தன்மை உடையது. ஆழமாக ஊடுருவிச் செல்லும் வேர் அமைப்பினைக் கொண்டுள்ளதால், வறண்ட பிரதேசங்களிலும் வளரும் தன்மை கொண்டது. 15 மீட்டர் முதல் 20 மீட்டர் உயரம் வரை வளரக்கூடிய இம்மரம் கருப்பு நிறப்பட்டையுடன் காணப்படும். இலைகள் சிறகுக் கூட்டிலையாகக் காம்பற்று எதிரடுக்கில் இருப்பவை. ஜனவரி, மார்ச்சு மாதங்களில் பூத்து அக்டோபர் நவம்பர் மாதங்களில் கனிகளைத் தரும். கனிகள் கடினமான ஓடு கொண்டிருக்கும். விதைகள் சதைப்பற்றில் பொதிந்திருப்பவையாகும்.

மருத்துவப் பயன்கள்.

இலைக் கொழுந்தைக் குடிநீர் செய்து குடித்தால் வாயு நீங்கி பசுயுண்டாகும். கோடையில் வேர்க்குருவின் மேல் கொழுந்து இலைச்சாற்றைப் பூசிட மறைந்துவிடும். கொழுந்து இலையின் சாறுடன் பால் அல்லது தயிருடன் சர்க்கரை சேர்த்துக் கொடுக்க பித்தம் மற்றும் வயிற்று உபாதைகள் நீங்கும்.

காயைப் பச்சடி செய்து சாப்பிட்டால் வாய்ப்புண் மற்றும் உள் அழலை நீங்கும். வயிற்றுப் போக்குக்கும் நல்லது.

நன்கு பழுத்த பழத்தின் சதைப்பற்றில் பனை வெல்லம் அல்லது சர்க்கரை, தேங்காய்ப் பால் சேர்த்துக் கொடுக்க தொண்டைப்புண், வாய்ப்புண், ஈறு உபாதை நீங்கும். உடலுக்குக் குளிர்ச்சி உண்டாக்கி பித்தத்தைப் போக்கும். வைட்டமின் 'சி' பற்றாக்குறையைப் போக்கும். கனியில் இரும்புச்சத்து, புரதம், கால்சியம், பாஸ்பரஸ் முதலிய முக்கியமான சத்துக்கள் உள்ளதால், இது நல்ல ஊட்டச்சத்து உள்ள பழமாகும்.

100 கிராம் பழச்சதையில் உள்ள சத்துக்கள் பின்வருமாறு :-

நீர்ச்சத்து	=	69.5%
புரதம்	=	7.3%
கொழுப்பு	=	0.6%
நார்ச்சத்து	=	5.2%
மாவுப்பொருள்	=	15.5%
உலோக உப்புக்கள்	=	1.9%
இதில் கால்சியம்	=	0.13%
பாஸ்பரஸ்	=	0.11%
இரும்பு	=	0.6%
ரிபோஃபிளேவின்	=	160 மை.கி.
வைட்டமின் சி	=	20 மி. கிராம்

பிற பயன்கள் :

மரத்தின் இலை, பட்டை, வேர், பூ, பழச்சதை கொண்டு தயாரிக்கப்படும் மருந்துக்கு "பஞ்சக பிதா" என்று பெயர். பாம்புக் கடிக்கும், நச்சுப் பூச்சிகளின் கடிகளுக்கும் நிவாரணமளிக்கக் கூடியது.

வில்வம், மாவிலங்கம், நொச்சி, கிளுவை, விளா ஆகிய மரங்களின் இலைகள் "பஞ்ச வில்வம்" எனப்படுகின்றன. பஞ்சவில்வ இலைகள் கொண்டு இறைவனுக்கு அருச்சனை செய்ய இம்மை, மறுமைப் பயன்களைப் பெறலாம் என்று புட்ப விதி நூலில் கூறப்பட்டுள்ளது.

விசாக நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் திருநின்றியூர் இறைவனை வழிபடுவதும், முருகப் பெருமான் திருத்தலங்களை வழிபடுவதும் சிறந்த பரிகாரமாகும். விளாமரக்கன்றுகளை கோயில் நந்தவனங்களிலும், பெருங்கட்டட வளாகங்களிலும் நடுவதும், நீர் ஊற்றி பராமரிப்பதும், வலம் வந்து வணங்குவதும் மிகச் சிறந்த பலன்களை நல்கும்.

(பயணிப்போம்)

SRI ANJANYAR THUNAI

GSTIN : 33AAKFC0941L1ZI
TAN No. : CMBC05827D

C. CHITRA, B.Sc., (M.D.)
Cell : 93645 65546

Office : **CS TEXTILE PROCESS**
NO. 208, PUTHUNAGAR 7TH STREET,
NALLUR, KANGEYAM ROAD,
TIRUPUR - 641 606.

Website : www.cstextiles.in
Email : chitra@cstextiles.in
Factory : KVR Nagar, Mangalam Road (Unit - II)
Our Buyers : 1. FILA (UK)
2. RELIANCE (INDIA)
3. ADIDAS (GERMANY)
4. TATA ZUDIO (INDIA)



"QUALITY IS OUR LIFE"

உடல் தானம் – பகுதி 1

BODY DONATION - Part 1

மேலையூர் ச.அன்பழகன் 98413 73184

ஒரு மனிதன் உயிருடன் இருக்கும்போதோ அல்லது இறந்தபிறகோ அவரது உட லின் ஒரு உறுப்பை மற்றவர்களுக்குப் பயன் படுவதற்காக " மனித உடல் உறுப்பு மாற்றுச் சட்டம் 1994 TRANSPLANTATION OF HUMAN ORGAN ACT 1994 தின் கீழ் தானமாகக் கொடுப்பது பற்றி உறுப்பு தானம் என்ற கட்டுரையில் பார்த்தோம் அதன் தலைப்பில் கூறிய படி அது உடலின் ஒரு உறுப்பை தானமாகக் கொடுப்பது பற்றிய கட்டுரை அதில் சொல்லியுள்ள படி அது உயிருடன் இருக்கும்போதோ அல்லது இறந்த பிறகோ கொடுக்கலாம்.

இந்தக் கட்டுரையில் முழு உடலையும் தானமாகக் கொடுப்பதைப் பற்றிப் பார்க்கலாம் உறுப்பு தானத்தைப் போல் இல்லாமல் முழு உடலையும் தானமாகக் கொடுப்பது என்பது ஒருவர் இறந்தபிறகுதான் கொடுக்க முடியும்.

உடல் கூறு இயல் சட்டம் 1949

ANATOMY ACT 1949

1948 ல் அனாடமி சட்டம் என்னும் உடற்கூறியல் சட்டம் அநேகமாக அனைத்து இந்திய மாநிலங்களிலும் இயற்றப்பட்டு விட்டது இச் சட்டம் தானம் கொடுப்பவர் களால்மனிதசடலங்கள் தானமாகக்கொடுக்கப்படவும், ஒருவர் இறந்து 48 மணி நேரம் வரை இறந்தவரின் சடலத்துக்கு உரிமை கோரி யாரும் வராவிட்டால் அச் சடலத்தை மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி காரணங் களுக்குப் பயன் படுத்தவும் அனுமதிக்கிறது அமெரிக்காவைப் போல் இந்தியாவிலும் சடலங்களை தானமாகப் பெறுவதற்கு குறிப்பிட்ட வழிகாட்டுதல்கள் உள்ளன தோல் வியாதி மற்றும் இரத்தத்தில் பாலியல் நோய் உள்ள உடல்கள் தானத்துக்கு ஏற்றவை அல்ல கம்யூனிஸ் கட்சித் தலைவர் ஜோதி பாசு மற்றும் ஜன சங்கத்தலைவர் நானஜி தேஷ்முக போன்ற அரசியல் தலைவர்களும் மருத்துவ ஆராய்ச்சிக்காகத் தங்கள் உடலைதானமாகக்கொடுத்துள்ளனர்.தற்காலங்களில் இந்தியாவில் பல மக்கள் இரண்டு சாட்சிகளுடன் கூடிய உறுதி மொழிப் பத்திரத்தில் தாங்கள் கையெழுத் திட்டுக் கொடுத்து இறந்த பிறகு அவர்களது உடலை தானமாகக் கொடுக்கின்றார்கள்.

இறந்த பிறகு ஏன் உடல் தானம் செய்ய வேண்டும்.

உடல் உறுப்புதானம் என்பது ஒரு நன்றாக அறியப்பட்ட வழக்கம் ஆகி விட்டது . நிறைய குடும்பங்கள் தங்களைச் சேர்ந்த ஒருவரின் உடல் உறுப்பு ஒன்று உயிரோடு வாழும் வேறு ஒரு மனிதருக்கு உதவியாக உள்ளது குறித்து திருப்தி அடைகிறார்கள் உடல் உறுப்பு தானம் பலராலும் அறியப்பட்டிருப்பது போல் இறந்த பிறகு கொடுக்கப்படும் முழு உடல் தானம் அந்த அளவிற்கு அறியப்படவில்லை உடல் உறுப்பு தானம் பெற்ற தனி நபருக்குப் பலன் கொடுக்கும் ஆனால் முழு உடல் தானம் தனி நபருக்குக் கொடுக்கப்படுவதில்லை மருத்துவ மனை அல்லது ஆராய்ச்சி கூடம் போன்றவற்றுக்குக் கொடுக்கப்படும் கொடுப்பதால் விஞ்ஞான மற்றும் மருத்துவ உயிர் காக்கும் ஆராய்ச்சிகளுக்குப் பெரிதும் உதவி கரமாக உள்ளது.

வசதியற்ற குடும்பத்தாருக்கு இறந்தவரின் இறுதிச் சடங்கு களுக்கு ஆகும் செலவு தவிர்க்கப்படும் . ஒரு சில நேரங்களில் வாரிசு இல்லாதவர்களும் ஆண் வாரிசு இல்லாமல் ஒன்றுக்கு மேற்பட்ட பெண் வாரிசுகளை உடையவர்களும் யார் இறுதிச் சடங்குகளைச் செய்வது என்ற பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க இவ்வாறு உடலை தானமாகக் கொடுப்பதும் வெகு அபூர்வமாக நடப்பதுண்டு.

எவ்வாறு பயன் படுகிறது

ஒருவர் இறந்த பிறகு தானமாகக் கொடுக்கப்படும் மனித உடல் மனித சமுதாயத் துக்கு பல விதங்களில் பயன் படுகிறது மேலே சொன்னவாறு உயிர்காக்கும் ஆராய்ச்சிக்குப் பயன்படுகிறது மேலும் சடலம் என்னும் இறந்த மனிதனின் உடல் மருத்துவம் படிக்கும் மாணவ / மாணவியருக்கு அனாடமி என்னும் உடற் கூறியல் சொல்லிக் கொடுக்க அதாவது மனித உடல் அமைப்பு , உறுப்புகள் எவ்வாறு வேலை செய்கின்றன போன்ற வற்றைச் சொல்லிக் கொடுக்கவும் பயன் படுகிறது மருத்துவக் கல்லூரிகள் / மருத்துவ மனைகள் இத்தகைய காரியங்களுக்கு பொது மக்களிட மிருந்து தாமாகவே தானமாகக் கிடைக்கும் சடலங்களைப் பெறுவதுடன் காவல் துறையிடமிருந்து யாரும் உரிமை கோராத அனாதைச் சடலங்களையும் பெறுகின்றன மருத்துவ மாணவர்களும் அந்த மருத்துவ மனைகளில் பணியாற்றுபவர்களும் இத் தகைய உடல் தானத்தை மிக மதிப்பு மிக்கதாகக் கருதுகின்றனர்

யார் தங்களுடைய உடலைத் தானமாகக் கொடுக்கலாம்.

ஜாதி, மதம், சமுதாய அந்தஸ்து ஆண் / பெண் பேதம் எந்த வித்தியாசமும் இல்லாமல் யார் வேண்டுமானாலும் உடல் தானம் இறந்த பிறகு செய்யலாம் தாமாகவே வந்து உடல் தானம் செய்வதற்கு வயது உச்ச வரம்பு ஏதும் கிடையாது மக்கள் தங்களது தற்போதுள்ள உடல் ஆரோக்கிய நிலையிலேயே ஏதேனும் வியாதியால் பாதிக்கப்பட்டிருந்தாலும் உடல் தானம் செய்யலாம்.

பெரும்பாலான மருத்துவ மனைகளில் அநேகமாக அனைத்து உடல் தானம் கொடுப்பவர்களின் உடலை புற்று நோய், இதய நோய் லூபஸ் என்னும் முகப்புற்று மூட்டு வாதம் பக்க வாதம் மற்றும் சர்க்கரை வியாதி போன்ற நோய்களுடன் இருந்தாலும் ஏற்றுக் கொள்வார்கள் அந்த உடலில் இருந்து எந்த உறுப்பும் வேரு நபருக்கு மாற்றப்படாது. இருந்த போதிலும் கீழ்க்கண்ட சந்தர்ப்பங்களில் உடல் தானம் ஏற்றுக் கொள்ளப்படாது.

" இறந்தவரின் மரணம் இயற்கையானதாக இல்லாமல் கொலை தற் கொலை போன்றவை இருந்து அடாப்சி என்னும் பிரேதப் பரிசோதனை தேவைப் படு மானால்.

" அந்த மருத்துவக் கல்லூரி , ஒரு நபர் இறந்து மூன்று நாட்களுக்குள் அந்த உடலை மீட்டெடுக்க முடியாவிட்டால்.

" முழு உடல் உறுப்புகளும் தானம் கொடுக்கப்பட்டிருந்தால். கண் தானம் மட்டும் விதி விலக்கு அதாவது ஒரு நபர் தன் கண்களை தானமாகக் கொடுத்திருந்தாலும் உடல் தானம் கொடுக்கலாம்.

" மிக அதிகமான எடை கொண்டவராக இருந்தாலும் மிகவும் மெலியவராக இருந்தாலும்.

" பரவக் கூடிய தொற்று நோய் இருந்தால்.

உடல் தானம் கொடுப்பது எப்படி

உடல் தானம் கொடுப்பது என்பது இரண்டு கட்டங்களைக் கொண்டது ஒவ் வொரு கட்டத்திலும் பல படி அல்லது நிலைகள் உண்டு முதல் கட்டம் இறப்பதற்கு முன்பு உடலைத் தானம் கொடுக்க இருப்பவர் செய்ய வேண்டியது இரண்டாவது கட்டம் அவர் இறந்த பிறகு அவரது நெருங்கிய உறவினர்கள் செய்ய வேண்டியது. அவற்றைப் பற்றி சற்று விரிவாகப் பார்ப்போம்.

முதல் கட்டம் – இறப்பதற்கு முன்பு

இந்த முதற் கட்டத்தில் உடல் தானம் கொடுப்பவர் இறப்பதற்கு முன்பு அவரே செய்ய வேண்டிய சில செயல்கள் சில நிலைகளில் உள்ளன.

நிலை 1 – மருத்துவ மனையை முடிவு செய்தல் .

" முழு உடலையும் தானமாகப் பெற்றுக் கொள்ளும் மருத்துவ மனையை உடலை தானம் கொடுப்பவர் முதலில் தேர்ந்தெடுக்க வேண்டும்.

" இவ்வாறு முழு உடலையும் தானம் செய்வது என்பது அத்தகைய உடல் தானத்தைப் பெறுவதற்கு அரசால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மனைகளில் மட்டுமே செய்ய முடியும்.

" அத்தகைய மருத்துவ மனைகள் மூன்றாம் நிலை மருத்துவ மனை களாக அதாவது தொழில் நுட்பம் நிறைந்த பல் நோய்களுக்கு சிறப்பு வைத்தியம் செய்யக் கூடியதாகவோ அல்லது மாணவர் களுக்கு சொல்லிக் கொடுக்கக் கூடியதாகவோ மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த தாக அதாவது எங்கு அந்த உடல் ஆராய்ச்சி மற்றும் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க உதவுவதாகவும் இருக்குமோ அங்கு.

நிலை 2 – ஐயப்பாடுகளைத் தெளிவு பெறுதல்

மருத்துவ மனையைத் தேர்ந்தெடுத்ததும் முழு உடலை தான்மாகப் பெறுவதற்கு அவர்களுக்கு உள்ள விதி முறைகள் என்னவென்பதைக் கேட்டுத் தெளிவு பெற வேண்டும் ஏனென்றால் ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் சில விதமான மாற்றங்கள் இருக்கக் கூடும் . அடுத்த நடவடிக்கை எடுக்கும் முன்பாக உடல் தானம் கொடுப்பவர் தனக்குள்ள ஐயப்பாடுகளைக் கேட்டுத் தெளிவு பெறலாம் அந்த மருத்துவ மனையின் அனாடமி என்னும் உடற் கூறு இயல் துறை மருத்துவ அதிகாரியிடமே அவர் பேசலாம்.

உடல் தானம் கொடுப்பவர் தனக்குள்ள கீழ்க்கண்ட ஐயப்பாடுகளை அவரிடம் கேட்டுத் தெளிவு பெறலாம்

1 தானமாகக் கொடுக்கப்படும் உடல் எவ்வாறு பயன் படுத்தப் படும்.

பெரும்பாலும் மாணவர்களுக்கு சொல்லிக் கொடுக்கவும் மருத்துவ ஆராய்ச் சிக்கும் பயன்படும் . தானம் கொடுக்கப்படும் உடலை எந்த காரியத்துக்குப் பயன் படுத்துவார்கள் என்பதைக் கேட்கலாம்

2 அந்த உடல் எவ்வளவு நாடகள் பயன்பாட்டில் இருக்கும் ? அதன் பிறகு அந்த உடல் எரிக்கப்படுமா? அப்படி என்றால் அஸ்தியை என்ன செய்வார்கள்?

இந்தியாவில் பெரும்பாலான மருத்துவ மனைகளில் அந்த உடல் நீண்ட காலம் பயன்பாட்டில் இருக்கும் பல

நேரங்களில் ஆரம்பத்தில் மாணவர்களுக்கு சொல் லிக் கொடுப்பதற்குப் பயன் படுத்தி விட்டு அந்த சடலத்தைப் புதைத்து விட்டு பின்னர் அந்த மருத்துவ மனை அந்த எலும்புக் கூட்டை எடுத்துக் கொள்ளும். ஒரு சில மருத்துவ மனைகள் அந்த உடலை எரித்து விடுவார்கள் ஆனால் அஸ்தியை குடும்பத்தாரிடம் கொடுக்க மாட்டார்கள்

3 உடலின் எந்த பாகத்தையாவது இறுதிச் சடங்கு செய்வதற்காக நெருங்கிய உறவினர்களிடம் கொடுப்பார்களா?

பெரும்பாலும் மருத்துவ மனைகள் அந்த உடலின் தலை முடியை ஈமச் சடங்கு களுக்காக உறவினர்களிடம் கொடுப்பார்கள்.

4 இறந்து எவ்வளவு நேரத்துக்குள் மருத்துவ மனையைத் தொடர்பு கொள்ள வேண்டும்? உடலை எடுத்துச் செல்வது மருத்துவ மனையில் ஒப்படைப்பது ஆகியவற்றுக்கான நடை முறை என்ன ?

இறந்தவரில் உடல் 6 மணி நேரத்துக்குள் மருத்துவ மனைக்குக் கொண்டு செல் லப்பட வேண்டும் சில இனங்களில் மருத்துவ மனையே உடலை மருத்துவ மனைக்குக் கொண்டு செல்ல வாகனத்தை அனுப்பும் இந்த வசதி இறந்தவர் உடல் 100 கி.மீ தூரத்துக்குள் இருந்தால் கூட கொடுக்கப் படக் கூடும். ஆனால் சில் நேரங்களில் குறிப்பாக உடல் தானம் குறித்து மருத்துவ மனையில் ஏற்கனவே பதிவு செய்யப்படாமல் இருந்தால் மருத்துவ மனையினர் இறந்தவரின் நெருங்கிய உறவினர்களையே உடலை மருத்துவ மனைக்கு எடுத்து வரச் சொல்லு வார்கள் இறந்தவரின் உடலை மருத்துவ மனைக்கு தானமாகக் கொடுப்பதற்கு முன்பு 48 மணி நேரம் வரை வைத்துக் கொள்ள விரும்பினால் அவர்கள் மருத்துவ மனையில் உள்ள சவக் கிடங்கு / பிண வறை வசதியைப் பயன் படுத்திக் கொள்ளலாம்.

5 ஒரு நபர் வேறு ஊரில் இறந்திருந்தால் அந்த மருத்துவ மனை எவ்வாறு உதவும்.

பெரும்பாலான மருத்துவ மனைகள் ஒன்றுக் கொன்று ஒப்பந்தம் போல் கொண்டிருப்பார்கள் எனவே இறப்பு வேறு ஊரில் நடந்தாலும் ஏற்கனவே பதிவு செய்துள்ள மருத்துவ மனையைத் தொடர்பு கொண்டால் அவர்கள் அந்த ஊரில் அருகில் உள்ள உடலை தானமாகப் பெறத் தகுதி உள்ள மருத்துவ மனையைச் சொல்லி உதவுவார்கள்.

6 உடல் தானத்துக்குத் தேவையான ஆவணங்கள் யாவை ?

ஏதேனும் மருத்துவ மனையில் தன்னிச்சையான உடல் தானத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே பதிவு செய்திருந்தால் அவர்கள் கொடுத்திருந்த நன் கொடையாளர் அட்டையை இறந்தவரின் உறவினர்கள் உடலைக் கொண்டு வரும்போது கொ டுக்க வேண்டும்.

அவ்வாறு பதிவு செய்யாவிட்டால் இறந்தவரின் நெருங்கிய உறவினர்கள் உடலுடன் மருத்துவ மனைக்கு வந்து உடலை ஒப்படைக்கும் போது எழுதிக் கொடுக்க வேண்டிய செயல்களைச் செய்து கொடுக்க வேண்டும்.மிக முக்கி யமான ஆவணம் மருத்துவரால் கொடுக்கப்பட்ட இறந்தவரின் மரண சான்றிதழ், அவர் அங்க அடையாளங்கள் பற்றிய சான்றிதழ், இறந்தவரை அடையாளம் காட்டும் ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை வருமான வரி நிரந்தரக் கணக்கு எண் அட்டை போன்றவற்றில் ஏதேனும் ஒன்று.

7 எந்தெந்த காரணங்களுக்காக உடலை தானம் பெற மருத்துவ மனை மறுக்கும்

இது பற்றி இக்கட்டுரையில் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். இது போன்ற மற்றும் இதர ஐயப்பாடுகளைக் கேட்டுத் தெளிவு பெற வேண்டும் இத்துடன் உடல் தானம் பற்றிய கட்டுரை முற்றுப் பெற வில்லை உடல் தானத்துக்கு மருத்துவ மனையில் பதிவு செய்தல் , இரண்டாவது கட்டமாக உடல் தானத்துக்குப் பதிவு செய்தவர் இறந்த பிறகு அவருடைய நெருங்கிய உறவினர்கள் செய்ய வேண்டியவை போன்றவற்றை அடுத்த பகுதியில் பார்ப்போம்.

உடல் தானம் பற்றி ஏதும் அறியாதவர்கள் ஓரளவு தெரிந்து கொள்வதற்காக எழுதப் பட்ட கட்டுரை. மேற்கொண்டு விபரம் வேண்டுவோர் சம்பந்தப்பட்ட சட்டம் அல்லது மருத்துவ மனையின் உதவியை நாடுவது பயனுள்ளதாக இருக்கும்.

சம்பந்தப்பட்ட சட்டம், மற்றும் விக்கீபீடியா.காம், க்ராஸ் ரோடுஷாஸ்பைஸ்.காம், மோஹன் ஃபௌண்டேஷன். ஒஆர்ஜி, ஆர்கன் இந்தியா.ஒஆர்ஜி மற்றும் டொனேட் யுவர் பாடி.இன் போன்ற இணைய தளங்களிலிருந்து தொகுத்து வழங்கியவர் மேலையூர் ச.அன்பழகன், துரைப்பாக்கம், சென்னை 97. போன் 98413 73184

வெளிநாட்டு மோகம்

Dr. D. Kalyanakumar, Trichy-18.

ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பதுகளில் அமெரிக்கா போய் அங்கு வாழும் நம் இந்தியர்களோடு பேச்சுக்கொடுத்தால் உரையாடல் இப்படி இருக்கும். "என்னப்பா நம்ம ஊர்ல டெலிபோன் புக் பண்ணினா கிடைக்கவே ஏழெட்டு வருஷம் ஆவுங்கறான்!" ஏன்யா Bajaj Chetak ஸ்கூட்டர் புக் பண்ணி பாரின் எக்ஸ்சேஞ்ச் குடுத்தா தான் சீக்கிரம் கிடைக்கும்ன்றாய்ங்க! என்னய்யா ஊரு உங்க ஊரு" மேற்சொன்ன பேச்சைக்கேட்டால் ஏதோ அமெரிக்கர் பேசுகிறார் போல இருக்கிறதா? இல்லை சொல்பவர் நம்ம மயிலாடுதுறையில் இருந்து போன கோவிந்தசாமியோ அல்லது சீர்காழியிலிருந்து போன சோமுவோ தான்! அமெரிக்கா இங்கிலாந்து போய்விட்டால் ஒரே வருடத்தில் இவர்கள் பார்வையில் இந்தியா வாழத்தகுதியற்ற நாடாக இருந்த காலம் உண்டு.

வெளிநாட்டு வேலை எத்தனை வலிகளைத் தந்தாலும், அதன் மீதான மோகம் இன்னும் குறையவில்லை. பெரும்பாலும் இன்ஜினீயரிங் படிக்கும் நகர்ப்புற இளைஞர்களிடம் இந்த மோகம் தலைக்கிறுக்கி ஆடுகிறது. (டாக்டர்களை அவர்கள் அதிகம் அனுமதிப்பதில்லை) இன்றைய நடுத்தர வர்க்கக் குடும்பங்களில் விதிவிலக்கில்லாமல் ஒரு கஸினோ சித்தப்பாவோ அமெரிக்காவில் இருக்கிறார்கள். அவர்கள் அந்தக் கனவு தேசத்தின் அருமை பெருமைகளை வருடாந்திர விஜயத்தில் எடுத்துக் கூறி அந்த ஆசை சின்ன வயசிலிருந்து இளைஞர்களிடம் விதைக்கப்படுகிறது. அது நிறைவேறுவதற்கான தெளிவான பாதையும் தெரியும். ழுசுநு, TOEFL எழுதுவது, இருக்கிற எல்லா கல்கலைக்கழகங்களுக்கும் விண்ணப்ப பாரம் பெற்று நிரப்பி அனுப்புவது, அதில் ஏதாவது ஒரு கல்லூரி இடம் கொடுக்க விசாவுக்கென்று பாங்க் பாஸ் புக்கில் தற்காலிகமாக கடன் வாங்கி பல லட்சங்களை காட்டுவது படித்து முடித்து அடுத்த ப்ளேனில் திரும்பி வந்துவிடுவேன் என்று விசா ஆபீஸரிடம் பொய் சொல்வது அதை அவர்களும் சிரித்துக்கொண்டே நம்புவது. இது ஆண்களுக்கு.

பெண்களுக்கு மற்றொரு பாதை உள்ளது இங்கே, எம்.சி.ஏ. பி.எஸ்.ஸி, கம்ப்யூட்டர் சயின்று போன்றவை படித்து இந்துவில் விளம்பரம் கொடுக்கும் அமெரிக்க என்.ஆர்.ஐ மாப்பிள்ளைகளுக்குப் பதில் போட்டு கல்யாணம் செய்துகொள்வது அதன் க்ரீன்கார்டு சிக்கல்கள் எல்லாம் அவர்களுக்கு அத்துப்படி இவர்களுக்கும் எல்லாம் அறிவுரை. தாராளமாக அமெரிக்கா செல்லுங்கள். உங்கள் திறமையும் புத்திசாலித்தனத்தையும் அங்கு சென்று பயன்படுத்திப் படிப்பதில் எந்தவித ஆட்சேபணையும் யாருக்கும் இருக்கக்கூடாது. வாழ்த்துக்கள். ஆனால் ஒரு வேண்டுகோள் வெளிநாடு செல்வதற்கு கொடுக்கும் மறைமுகமான விலைகள் சில உண்டு. அவற்றைப் புரிந்துகொண்டு செல்லுங்கள். அவை இவை.

1. திரும்ப வரமாட்டீர்கள். இது கட்டாயம் நூறு சதவிகிதம் நிகழும் ஒரு விளைவு போய்விட்டு படிப்பு முடித்துவிட்டு உடனே வருகிறேன் என்று சொல்வதெல்லாம் பொய் அந்த நாடு உங்கள் மேல் படரும் நாடு ஒரு ஆக்டோபஸ். அல்லது மலைப்பாம்பின் இறுக்கம் போல அது உங்களை விடாது அதைத் தெளிவாக அறிந்து கொள்ளுங்கள்.

2. அங்கே போன்பின் உறவு, பாசம் இவற்றுக்கெல்லாம் புதிய அர்த்தங்கள் தோன்றும் எதற்காக அப்பா அம்மாவைக் கவனித்துக்கொள்ள வேண்டும். அவர்கள் கடமையைச் செய்தார்கள். வருஷம் ஒரு முறை ஃபாதர்ஸ் டே, மதர்ஸ் டே கார்டு அனுப்பினால் போதுமே. அல்லது அவ்வப்போது கொஞ்சம் டாலர்கள்... இப்படித் தோன்றும் இந்த எண்ணத்தையும் தவிர்க்க முடியாது.

3. அங்கே போய் நிறைய சம்பாதிக்கத் தொடங்கியதும் இந்திய விஷயங்கள் மேல் ஒரு ஏளனம் தோன்றும் என்னப்பா உங்க ஊர்ல சரியா ஒரு டாய்லெட் கட்டமாட்டாங்களா வாட் ஏ ட்ராஃபிக்! ரோடுல ஒண்ணுக்கு போறவரைக்கும் (நம்ம நாட்டுல வெளில போனா பிரீ, உள்ள போனால் காசு, வெளி நாட்டுல வெளில போனா காசு, உள்ள போனால் பிரீ) உங்க தேசம் உருப்படாது... (கவனிக்கவும், உங்க ஊர் உங்க தேசம்)

4. தமிழ் பேசும் வழக்கத்தையும் மெள்ள இழக்க வேண்டியிருக்கும் நாங்கள் தமிழில் பேசினால் நீங்கள் இங்கிலீஷில் பதில் சொல்வீர்கள் நாளடைவில் தமிழ் படிக்கவே மறந்து போய்விட்டது என்று பொய் சொல்வீர்கள். இந்தப் பக்கவிளைவுகள் எல்லாம் பரவாயில்லை என்றால் தாராளமாக வெளிநாடு செல்லுங்கள்.

கார்கிலிலிருந்து துவங்கி நம் பிற்பட்ட கிராமங்களில் வயற்புறங்கள் வரை பணிபுரியும் இளைஞர்கள் இருக்கிறார்கள். இவர்கள் மேல்தான் எனக்கு மரியாதை என்னைக் கேட்டால் இங்கேயே இருந்துகொண்டு எல்லா அசௌகரியங்களுக்கு மத்தியிலும் ஏதாவது சாதிக்கும் இளைஞர்கள்

இந்நாட்டின் கண்கள். நீங்களோ, நீங்கள் அனுப்பப்போகும் டாலரோ அல்ல! தாராளமாக செல்லுங்கள். சம்பாதியுங்கள். ஆனால், இந்தியாவைக் கேலி செய்யாதீர்கள். தழைய தழைய தாவணி அணிந்து கல்லூரி பெண்கள். இன்று வசதியாய் ஜீன்ஸ் பனியனுக்கு மாறிவிட்டனர். தலைவாழை உணவு சுருங்கி, கிண்ணத்தில் "ஸ்பூன்" ஆக மாறிவிட்டது. 'கால் காசு என்றாலும் அரசு வேலை' என்ற மனப்பான்மை மாறி, கை நிறைய சம்பளத்தில் வெளிநாட்டு வேலைக்கு செல்கிறோம், நமக்கே நமக்கு என்று சொல்லக்கூடிய அன்பு, பாசம், அரவணைப்பு, உற்றம், சுற்றம்.... என்ற சிந்தனைகள் கூட மாறி "தன் குடும்பம்" மட்டுமே என வாழ பழகி விட்டோம். ஒருவனுக்கு ஒருத்தி கலாசாரம் கண்ணீர் விடும் நிலைக்கு மாறி வருகிறது எங்கே இருக்கிறது கோளாறு ?

ஒரு வீட்டில் toilet tissue paper கூட ஹாலந்திலிருந்தோ, நியூஸிலாந்திலிருந்தோ கொண்டுவந்தது என்று – பெருமைப்பட்டுக் கொண்டார்கள். முதலில் பேப்பரே எதற்கு என்பது என் கேள்வி. ஃபாரின் விஸ்கிதான் மயக்கம் வராது. ஃபாரின் சிகரெட்டுதான் கான்சர் வராது. என்னும் மனப்பான்மைதீங்கானது.மும்பைவிமானநிலையத்தில் ஒரு முறை கஸ்டம்ஸ் அதிகாரியிடம் ஓர் இளைஞர் சண்டை போட்டுக்கொண்டிருந்தார். அவர் அமெரிக்காவிலிருந்து சைக்கிள் ஒன்று கொண்டுவந்திருந்தார். அப்புறம் ஒரு பெட்டி நிறைய சாக்லெட் கஸ்டம்ஸ் அதிகாரி இன்னும் லஞ்சம் வாங்கத் துவங்காத இளைஞர். ஏன் சார், நம் நாட்டிலிருந்து மற்ற நாடுகளுக்கு லட்சக்கணக்காக சைக்கிள் ஏற்றுமதி செய்கிறோம். நீங்கள் சைக்கிளை இம்போர்ட் செய்கிறீர்களே, உங்களை என்ன சொல்வது? என்றார். நீ என்ன அதைக் கேட்பது ? அதற்கான டூட்டி கொடுக்கிறேன். சைக்கிள் என்ன, அண்டர்வேர் கூட என்னுடையது. ஃபாரின்தான் பார்க்கிறாயா ? என்றார் இளைஞர். அதிகாரி பதட்டப்படாமல், ஏறக்குறைய ஒரு மோட்டார் சைக்கிள் விலைக்கு டூட்டி தீட்டினார்! ஒரு ஃபேமிலிக்கு இத்தனை சாக்லெட் அதிகம். இதை நான் அனுமதிக்கப் போவதில்லை. என்று கடுப்பில் தடுத்துவிட்டார். அந்த இளைஞர், தன் குடும்பத்தினர் அனைவரையும் உட்காரவைத்து, அங்கேயே அத்தனை சாக்லெட்டையும் சாப்பிட்டு முடித்தார்! இம்மாதிரியான பகுத்தறிவை மயக்கும் அபத்தங்கள் கொண்ட மோகத்தைத்தான் தவிர்க்க வேண்டும்.

மக்கள் குறிப்பாக பெற்றோர் மத்தியக்கிழக்கு நாடுகளுக்கு வேலைதேடி செல்கின்ற நிலைமை அதிகமாக காணப்படுகிறது. உள்நாட்டில் போதிய வேலைவாய்ப்பின்மை, போதிய வருமானமின்மை, சேமிப்பு பழக்கமின்மை போன்றவைகளால் ஏற்படும் குடும்பத்தின் வறுமை, தொழிற் பற்றாக்குறை, கடன்தொல்லைகள், பிறரின் தூண்டுதல், கணவன் அல்லது மனைவியின் கொடுமை, குடும்ப பிரச்சனைகள், திருமணம், கல்வி நடவடிக்கைகள் மற்றும் சமூக அந்தஸ்தினை உயர்த்த வேண்டுமென்ற தூரநோக்கு, போன்ற பல்வேறு காரணங்களால் பலர் வெளிநாடுகளை நோக்கி செல்கின்றனர். இதனால், அவர்களது பிள்ளைகள், உறவினர், குடும்பத்தினர், உடல் உள மற்றும் சமூக ரீதியாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இவர்களில் பெருவாரியாக பாதிக்கப்படுவது பிள்ளைகளின் கல்விநிலையும் அவர்களது எதிர்காலமும்தான் என்பது யதார்த்தம்.

வெளிநாட்டு மாப்பிள்ளைகள் மீதான மோகம் இப்போது வேறு விதமான பிரச்சினைகளை உருவாக்கி வருகிறது. பெற்றோர்கள் அனைவருக்கும் வெளிநாடுகளில் செட்டிலான மாப்பிள்ளைகள் தங்கள் பெண்களுக்கு நல்ல ஒரு வாழ்க்கையையும் புதிய வாய்ப்புகளையும் வழங்க முடியும் என்று நம்புகின்றனர். அதில் உண்மை இல்லாமல் இல்லை இன்றைக்கும் இலட்சக்கணக்கான வெளிநாடு வாழ் இந்தியர்கள் நல்ல முறையில் திருமணம் செய்து கொண்டு தங்கள் மனைவிகளை தங்கள் பணிபுரியும் நாடுகளுக்கே அழைத்துச் சென்றுவிடுகின்றனர் அல்லது அவர்களை இந்தியாவிலேயே வைத்து பராமரிக்கின்றனர். உலகத்தில் உருப்படியான ஒன்று உருவாகி வரும் போது அதைப்போலவே போலிகள் உருவாகுது இயல்பு 2018–ஆம் ஆண்டு இந்தியாவின் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த 8 பெண்கள் தம் மனுவில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மனைவிகள் வெளிநாட்டில் வசிக்கும் தங்கள் கணவர்களால் ஏமாற்றப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளனர். 2015 முதல் 2019 வரை 6000க்கும் மேற்பட்ட வெளிநாடு வாழ் இந்திய ஆண்களுக்கு எதிரான புகார்களை இந்திய அரசாங்கம் பெற்றுள்ளது.

தொண்ணூறுகளில் உலகமயமாக்கல் தாராளமயமாக்கல், சீர்திருத்தங்கள் வந்த பிற்பாடு இந்தியாலே மாறிப்போனது. சிங்கப்பூர் செண்ட்டும், டேப் டெக்கும் எலக்ட்ரானிக் சாதனங்களும் சுவிஸ் சாக்லேட்டுகளும் கோக்கோ கோலாவும் இங்கேயே கிடைக்க ஆரம்பித்தன. கே.எப்.சி சிக்கனும் மெக்மொனால்டின் பர்கரும் மௌண்ட் ரோட்டிலும் பிரிகேட்ரோட்டிலும்கிடைத்தன. அதனால்இந்தியாவை

விட்டு வேலை காரணமாக வெளிநாடு போனாலும் இந்தியக்குடியுரிமையை தக்க வைத்துக்கொண்ட இந்தியர்களின் எண்ணிக்கை பெருகியது.

ஆனால் வாழ்க்கை வெளிநாடுகளில் எப்போதுமே சொர்க்கம் இல்லை. அங்கும் சகிக்க முடியாத சங்கடங்கள் உண்டாகும் வாய்ப்புகள் அதிகம். அமெரிக்காவிலும் கூட நோய் வந்துவிட்டால் இன்சூரன்ஸ் இருக்கும் வரைதான் பாதுகாப்பு அதற்குமேல் செலவானால் சொத்தையே எழுதிக்கொடுக்க வேண்டி வரும். அதே போல பள்ளிப்படிப்பும் கூட மிகச்செலவு வைக்கும். காலேஜ் படிப்பு என்பது எட்டாக்கனி பிள்ளை நன்கு படித்து ஸ்காலர்ஷிப் ஏதேனும் வாங்கினால் உண்டு.

இல்லை இல்லை. இந்தியாவில் பாதுகாப்பு இல்லை வாழ்க்கைத்தரம் மிக மோசம் வேலையில்லாத் திண்டாட்டம் என்றெல்லாம் காரணங்கள் சொல்லப்பட்டாலும் அவை முற்றும் உண்மை இல்லை. இன்றைய இந்தியா 80 களில் இருந்த இந்தியா அல்ல உலகமே அபார வாய்ப்பாக கருதும் மிகப்பெரிய ஜனநாயகம் நம் நாடு இதன் சந்தை மதிப்பு மிக மிக அதிகம் பல சட்ட திட்டங்களில் உண்டான மாறுதல்கள் வெளி நாட்டு முதலீடுகளுக்கு பெரும் வழி வகுத்துவிட்டன. இந்தியாவின் சராசரி வாழ்க்கைத்தரம் எவ்வளவு உயர்ந்துவிட்டது.

என்னதான் அமெரிக்கா, ஐரோப்பா என்றாலும் அந்நியத்தன்மை என்பது காற்றில் எப்போதும் ஊசலாடிக்கொண்டேதான் இருக்கும். என்னதான் இருந்தாலும் தாய்நாட்டுச் சுவாசம் என்பதன் மகிமை வெளிநாட்டில் வாழும்போதுதான் தெரியும்.

"சொர்க்கமே என்றாலும் அது நம் ஊரைப் போல வருமா? அட என் நாடு என்றாலும் அது நம் நாட்டுக்கீடாகுமா? பல தேசம் முழுதும் பேசும் மொழிகள் தமிழ் போல் இனித்திடுமா? ஏரிக்கரை காத்தும் ஏலேலோ பாட்டும் இங்கே ஏதும் கேட்கலையே, பாடும் குயில் சத்தம் ஆடும் மயில் நித்தம் பார்க்க ஒரு சோலை இல்லையே, வெத்தலைய மடிச்சு மாமன் அதை கடிச்சி துப்ப ஒரு வழியில்லையே, ஓடி வந்து குதிச்சு முங்கி முங்கி குளிக்க அட ஒரு ஓடை இல்லயே, ஒரு எந்திரத்தை போல அட இங்கு உள்ள வாழ்க்கை இத எங்கே போயி சொல்ல மனம் இஷ்டப்படவில்லை. இது ஊரு என்ன ஊரு நம் ஊரு ரொம்ப மேல்"

Strongly believe in 'Be Indian, Buy Indian'

மலட்டு மழை

மலடு என்பது உயிர்களிடத்தில் மட்டுமல்ல மண் மலடாகும். மனிதன் மலடாவான் ஜனிக்கும் உயிர்கள் மலடாகும். மழையும் மலடாகும் கேள்விப்பட்டிருக்கிறீர்களா!!??

இடி, மின்னல் இல்லாமல் நன்றாக பெய்து கொண்டிருந்த மழையைப் பார்த்துவிட்டு "இது மலட்டு மழை எதுக்கு பெய்யணும்?" என்று சொல்லி சலித்துக் கொண்டார். ஒரு விவசாயி விவசாயிக்கு மட்டும் தான் இயற்கையின் அத்துணையும் பிடிப்படும்.

எல்லா மழையும் மழையல்ல

இடி மின்னலோடு பெய்யும் மழை தான். பயிர்களுக்கு நல்லது. அப்படி எனில் இடி மின்னல் இல்லாமல் பெய்யும் மழை? பூமிக்கு நல்லது அல்ல என்று அர்த்தமா? பூமிக்கு மழை நல்லது தான்! தாவரங்களுக்கு தான். முழுமையான நல்லது கிடையாது! இதை அறிய தொடர்ந்து படியுங்கள்.

தாவரங்களில் ஒளிச்சேர்க்கை எனப்படும் நிகழ்ச்சி நடைபெற கார்பன்–டை–ஆக்சைடு எவ்வளவு அவசியமோ, அதே அளவுக்கு அவசியமானது நைட்ரேட் ஆனால் இந்த நைட்ரேட் தாவரங்களுக்கு நேரிடையாக மண்ணிலிருந்தோ, காற்று மண்டலத்திலிருந்தோ கிடைப்பதில்லை. காற்று மண்டலத்தில்தான் நைட்ரஜன் இருக்கும். இடி மின்னலோடு மழை பெய்யும்போது மின்னலில் இருந்து வெளிப்படும் வெப்பமானது காற்று மண்டலத்தில் இருக்கும் ஆக்சிஜன் நைட்ரஜனுடன் வினை புரிந்து நைட்ரஜன் ஆக்சைடாக மாற்றுகிறது.

இந்த நைட்ரஜன் ஆக்ஸைட் மழை நீரில் கலந்து நைட்ரிக் அமிலமாக மாறி பூமியில் விழுந்து மண்ணில் கலக்கிறது. மண்ணில் உள்ள தனிமங்களோடு இந்த நைட்ரிக் அமிலம் வினை புரிந்து நைட்ரேட் ஆக மாறுகிறது. (இடி மின்னல் இருக்கும் போது பெய்யும் மழையில் நனைய கூடாதுஎன்று தாத்தா பாட்டி கூற கேட்டிருக்கிறீர்கள் தானே) (மேலும் இடி மின்னல் அற்ற மழையில் குளித்துவிட்டு வரச் சொல்லியும் அவர்கள் கூறுவார்கள்.

பூமியில் உள்ள மண்ணில் கலந்து இருக்கும் இந்தநைட்ரேட்சத்துக்களைதாவரங்கள்வேர்கள்மூலம் உறிஞ்சி தங்கள் வளர்ச்சிக்குப் பயன்படுத்துகின்றன.

நம் முன்னோர்களுக்கு எல்லாமே தெரிந்திருந்து இருக்கிறது. வாழ்வியலோடு இணைத்து வாழ்ந்து உள்ளார்கள். அறிவியல் ஆதாரம் என பதிவு செய்யாமல் போனார்கள். எம் இளம் தலைமுறையே. 'அறிவியல் நூல் பிடித்து அகிலத்தில் நிலைக்க ஆவன செய்'.

– பில்டெக் அருள்மொழி.
8883468333

சென்னை கார்காத்தார் சங்கம்,
புதுச்சேரி கார்காத்தார் சங்கம் இணைந்து நடத்தும்
கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழா
சிறக்க வாழ்த்துகள்

வாழ்த்துகள்...

அன்புடன்...

தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு

பதிவு எண் : 242/2017

Dr.KKR.K.சுரேஷ் (எ) ராஜசுந்தரம் பிள்ளை
தலைவர்


M.பாலசுப்ரமணியன் பிள்ளை
பொதுச்செயலாளர்

G.ராமநாதன் பிள்ளை
பொருளாளர்

கைலை.சண்முகம் பிள்ளை
அமைப்புச்செயலாளர்

மாநில துணைத்தலைவர்கள், மண்டல செயலாளர்கள்,
இணைப்புச்சங்க நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள்,
இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்.

சென்னை கார்காத்தார் சங்கம், புதுச்சேரி கார்காத்தார் சங்கம்
இணைந்து நடத்தும் கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழா சிறக்க வாழ்த்துகள்




UCON
UCONPT

19 Years
Engineering Excellence

JAS-ANZ













Perfection is our Profession

for more details logon
www.uconpt.com
Tel : 044 -24468001 /02 /03

We are Specialist in
Post-Tensioning Design
and Execution

UCONPT STRUCTURAL SYSTEM PRIVATE LIMITED
formerly known as UTRACON STRUCTURAL SYSTEMS PVT LTD
No. 45, 5th street, Padmanaba Nagar, Adyar, Chennai - 600020.

எழுச்சி விழா காணும் **கார்காத்தார் ஒப்புரவு** இதழுக்கு

சிறந்த பாராட்டுதலுடன் வாழ்த்தும்

கட்டுமானம் மற்றும் கட்டிடவியலில்

நான்கு தசாப்தங்களாக ஈடுபட்டிருக்கும்

கேப்டன் **Er. மு. பிரதாபன்**

P. கௌதமன்
Architect

P. மாதினி
Architect

Scan to know more on our Projects.

No. 54, 2nd Cross Street, Sithanantha Nagar,
Puducherry - 605 005.

சென்னை கார்காத்தார் சங்கம், புதுச்சேரி கார்காத்தார் சங்கம் இணைந்து நடத்தும் கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழா சிறக்க வாழ்த்துகள்

பலரின் தன்னம்பிக்கை மிக்க புன்னகைக்கு பின்னால்
எங்களின் அனுபவம்மிக்க பல் மருத்துவர்கள்

Dr.Smilez
Dental Center



எங்களின்
அனுபவம் மிக்க பல்
மருத்துவ நிபுணர்கள்
இருக்கையில்
கவலை வேண்டாம்.

சென்னை
1800 20 88988
என்ற உதவி எண்ணை அழைக்கவும்:

எண்.221, பாயிண்ட் கேர் வீதி,
உழந்தை கீரப்பாளையம்,
முதலியார்பேட்டை, பாண்டிச்சேரி - 605 004.

எண்.2, ஜே.என்.தெரு,
(ராஜ் நிவாஸ் பின்புறம்) ஒயிட் டவுன்,
பாண்டிச்சேரி - 605 001.

பாண்டிச்சேரி
739 777 0141
என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்

BRANCHES IN CHENNAI:

ALWARPET I PERUNGUDI I NUNGAMBAKKAM I ANNA NAGAR I ASHOK NAGAR I CHROMEPET I IYYAPPANTHANGAL
NANGANALLUR I VELACHERRY I PORUR I RAJAKILPAKKAM & PONDICHERRY

சென்னை கார்காத்தார் சங்கம், புதுச்சேரி கார்காத்தார் சங்கம் இணைந்து நடத்தும் கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழா சிறக்க வாழ்த்துகள்

CHENNAI RADHA ENGINEERING WORKS (P) LTD.
ISO 9001 & OHSAS 18001 Company
Practisor of 5S Technique for **T**otal **Q**uality in **W**ork place

DOMAIN EXPERTISE

EPC contractor as well as Service Provider for Operation & Maintenance of Coal Handling Plant, Ash Handling Plant in Thermal Power Plants & Sea Ports.

EPC contractor for Establishment of 230/110 KV & 33/11 KV Substations.

Service provider in deployment of Mobile Harbour Cranes in Ports.

Coal Mining.

Service Provider for Mechanical and Electrical furnishing of Railway coaches for Indian Railways.

Manufacture and Supply of parts and Assemblies of Railway Coaches for Indian Railways.

WORKSITES

MINES

South Eastern Coalfields Limited, Amlai, Madhya Pradesh.
Mahanadi Coalfields Limited, Lajkura, Odisha.
South Eastern Coalfields Limited, Jagannathpur, Chhattisgarh.
Bharat Coking Coal Limited, Sijua, Jharkhand.

PORTS

India

Adani Ports and Special Economic Zone Ltd., Mundra, Gujarat.
Kamarajar Port Limited, Chennai, Tamil Nadu.
Paradip Port Authority, Paradip, Odisha.
JSW Paradip Port Terminal, Paradip.
V.O.Chidambaranar Port Trust, Tuticorin, Tamil Nadu.
Kalinga International Coal Terminal Paradip Private Limited, Odisha.

Overseas

JSW Terminal (Middle East) FZE, UAE.

RAIL COACH

Bharat Earth Movers Ltd, Bengaluru, Karnataka.
Integral Coach Factory, Chennai, Tamil Nadu.
Modern Coach Factory, Raebareli, Uttar Pradesh.
Rail Coach Factory, Kapurthala, Punjab.
Alstom Transport India Limited, Andhra Pradesh.

OTHERS

Conveyor Component Manufacturing Unit, Vellivoyalchavadi, Chennai, Tamil Nadu.
Parts and Assemblies for rail Coaches Manufacturing Unit, Oragadam, Chennai, Tamil Nadu.
Wind Mill, Thirupur, Tamil Nadu.

POWER PLANTS

Odisha

Jindal India Thermal Power Ltd, Angul.
Vedanta Limited, Jharsuguda.
Vedanta Limited, Lanjigarh.
National Aluminium Company Limited, Angul.
Steag Energy Services (India) Private Limited.

Rajasthan

JSW Energy Power Limited, Barmer.

Tamil Nadu

IL & FS Tamil Nadu Power Company Ltd, Cuddallore.
Mettur Thermal Power Station/ TANGEDCO, Mettur.
North Chennai Thermal Power Station/TANGEDCO, Chennai.
Tuticorin Thermal Power Station/TANGEDCO, Tuticorin.
CEPL Mutiara Thermal Power Plant, Tuticorin.

COAL WASHERY

Heavy Engineering Corporation Ltd, Madhuband Coal Washery, Jharkhand.

EPC – Major Bulk Material Handling Equipment

Stacker Cum Reclaimer and Stacker
Grab Type Ship unloader
Wagon Loader
Trough / Pipe Conveyors
Eccentric Disc Screen(EDS)

OUR CLIENTS

CORPORATE OFFICE
#9/D-12, Sipcot IT Park, Siruseri,
Chennai – 603 103.
E-mail : crewho@crewpl.com
Phone: +91 44 4741 4701 | **Fax:** +91 44 4741 4724

REGISTERED OFFICE
#40, Sapthagiri Colony, Jafferkhanpet,
Chennai – 600 083.
E-mail : info@crewpl.com
Phone : +91 44 2489 2274 | **Fax :** +91 44 2489 2001

REGIONAL OFFICE
First Floor, Building No 3, Local Shopping Centre,
Sector - B Pocket -1, Vasant Kunj, New Delhi - 110 070
E-mail : crewdelhi@crewpl.com
Phone : +91 11 2613 0913

www.crewpl.com

மணமகள் தேவை



பெயர்	செல்வன் **S. வினோத்குமார்**
படிப்பு	B.E.,
வேலை	Jindal Power Plant, Maharashtra Rs. 55,000/PM
பிறந்த தேதி	30.11.1994
உயரம்	165 cm
நட்சத்திரம்	சுவாதி
கோத்திரம்	விஸ்வராய
பூர்வீகம்	கார்குடல்
தகப்பனார்	**S. சபாநாயகம்**
தாயார்	**S. சகிலா,**
முகவரி	லலிதா பரமேஸ்வரி நகர், சேந்தங்குடி, மயிலாடுதுறை Cell : 63822 39676, 94432 27611
விருப்பம்	குடும்பபாங்கான பெண்.



பெயர்	செல்வன் **K. முத்துகுமரன்**
படிப்பு	B.E. (ECE)
வேலை	தனியார் கம்பெனி
பிறந்த தேதி	17.10.1991
நட்சத்திரம்	திருவோணம்
கோத்திரம்	கோடாலிகருப்பூர்
பூர்வீகம்	ஜெயங்கொண்டம்
தகப்பனார்	**J. கல்யாணசுந்தரம்**
தாயார்	**K. கல்யாணி**
முகவரி	No. 39B, வசந்தம் நகர், தெற்கு வெள்ளாளர் தெரு, ஜெயங்கொண்டம். Cell : 95008 93214, 99656 71581
விருப்பம்	நல்ல குணமுள்ள பெண்.



பெயர்	செல்வன் **Dr. M. செல்வமுத்து**
படிப்பு	D.Pharm, Pharm.D.,
வேலை	Professor, EGS Pillay College of Pharmacy
பிறந்த தேதி	06.06.1993
உயரம்	179 cm
நட்சத்திரம்	பூராடம்
கோத்திரம்	செம்பதரிய
பூர்வீகம்	ஓரத்தூர்
தகப்பனார்	**ச. முரளிதரன்** (Business)
தாயார்	**தமிழ்த்தேன்** (Govt. Teacher) (கன்னியாநத்தம்)
முகவரி	1/344, மெயின் ரோடு, தருமகுளம், பூம்புகார், சீர்காழி Tk. – **609 105.** Cell : 94432 60447, 63790 45384
விருப்பம்	படித்து வேலையில் உள்ள வரன்

மணமகன் தேவை

பெயர்	செல்வி **வெ. அனுபிரியா**
படிப்பு	B.E. (ECE)
வேலை	CTS, Chennai Rs. 9 Lakhs / PA
பிறந்த தேதி	19.07.1994
உயரம்	5' - 6"
நட்சத்திரம்	அனுஷம்
கோத்திரம்	வேளா
தகப்பனார்	**சோ. வெங்கட்ராமன்**
தாயார்	**வெ. உஷாராணி**
முகவரி	**8/3**, மேட்டுத் தெரு, திருவிழந்தூர், மயிலாடுதுறை – **609 001.** Cell : 73389 84725 96887 69854 (Whatsapp)



பெயர்	செல்வி **S. மஹாலக்ஷ்மி**
படிப்பு	B.E. (CSC)
வேலை	Programmer Analyst, CTS, Chennai Rs. 4 Lakhs / PA
வயது	**05.12.2000**
உயரம்	169 cm
நட்சத்திரம்	உத்திரட்டாதி
கோத்திரம்	கலப்பாலுட
பூர்வீகம்	மறையூர்
தகப்பனார்	**R. சரவணன்**
தாயார்	**S. ரத்னா** (சேலம்) இல்லத்தரசி
முகவரி	18/3, கீழகொண்டையம்பேட்டை, திருவானைக்கோவில், திருச்சி – **620 005.** Cell : 94430 75596 E-mail : mahalaksr5@gmail.com
விருப்பம்	நல்ல பணியில் உள்ள வரன்



பெயர்	செல்வி **மோ. அபிநயா**
படிப்பு	B.E. (EEE)
வேலை	Production Editor Sinjore Technologies, Thanjavur.
பிறந்த தேதி	21.09.1995
உயரம்	5' - 4"
நட்சத்திரம்	ஆயில்யம் 3–ம் பாதம்
கோத்திரம்	சணமுடை
பூர்வீகம்	உடையார் பாளையம்
தகப்பனார்	**கோ. மோகன் பிள்ளை**
தாயார்	**மோ. மலர்கொடி** (திருநாரையூர்)
முகவரி	A/2, சீத்தா நகர், சிவாஜி நகர் வழி, தஞ்சாவூர் – **613 001.** Cell : 94424 75666, 94424 75777
விருப்பம்	சமபடிப்பு, நல்ல பணியில் உள்ள வரன்.






மாநில கார்காத்தார் சங்க தலைவர் K.K.R. SURESH திருமணத்திற்கு வந்திருந்து மணமக்களை ஆசீர்வதித்தார்.



துபாய் ஷேக் NABEEL NOOR AHMED, குடும்பத்தினருடன் வருகை தந்து மணமக்களை வாழ்த்தினார்கள்.



மணிமேகலை பதிப்பகத்தார். திரு. ரவி தமிழ்வாணன் வருகை தந்து மணமக்களை வாழ்த்தினார்கள் மற்றும் பலர்.







வாழ்க மணமக்கள்



சிதம்பரம் வட்டம்,
இளநாங்கூர், பூவனுட
A. ஜவஹர் – ஜெயஸ்ரீ
இவர்களின் இளைய மகள்
Dr. J. ABARNA, M.D.S.



திருநெல்வேலி நகரம், காருட,
K. கல்யாணசுந்தரம் – K. சுந்தரி
இவர்களின் குமாரன்
Er. K. KUTTALAM
(a) VELU, B.Tech

25–06–2023 ஞாயிற்றுக்கிழமையன்று சென்னை கோடம்பாக்கம், பத்மராம் மஹாலில் நடைபெற்ற திருமணத்திற்கு வந்திருந்து மணமக்களை வாழ்த்திய உற்றார், உறவினர், மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகள் பல

A. வாசீகன் – கீதா
சந்திரா அனந்த கிருஷ்ணன்
T. அருண்
S. தமிழ்செல்வன்
A. சுபாஷ்சந்திரன் – செல்வபாரதி
குமரகுருபரன் – சுஜாதா
A. அர்ச்சனா
T. மலர்கொடி
மழலை மஹிமா அருண்
T. அர்ஜுன்

சென்னை கார்காத்தார் சங்கம், புதுச்சேரி கார்காத்தார் சங்கம்
இணைந்து நடத்தும் கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழா சிறக்க வாழ்த்துகள்

KMW BY KIRLOSKAR

இது ஒரு டில்லர் போல தோன்றும் ஆனால்
ஒரு டிராக்டர் போல வேலைகளை செய்யும்

அரசு மானியம் உண்டு



அறிமுகம்
மெகா டி
இதுவே போதும்

Indian Bank & Shriram Finance Available

இது ஒரு கிர்லோஸ்கர் தயாரிப்பு
kirloskar
மெகா டி 15

மோனிகா ஏஜென்சிஸ்
தர்ஷன் ஏஜென்சிஸ்

கிர்லோஸ்கரின் கடலூர் மாவட்டத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்



அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள்

மோனிகா ஏஜென்சிஸ்
H.O : 19/1, சிவா காம்ப்ளக்ஸ், (உழவர் சந்தை பின்புறம்) இம்பீரியல் ரோடு, கடலூர்-2.
Branch : நெ.6, AVK, வணிக வளாகம், கடலூர் மெயின் ரோடு, வடலூர்.

தர்ஷன் ஏஜென்சிஸ்
ஜோதி இல்லம், பெண்ணாடம் மெயின் ரோடு, கருவேபிலங்குறிச்சி, விருத்தாசலம்

செல் :
97509 60681
94430 76441

சென்னை கார்காத்தார் சங்கம், புதுச்சேரி கார்காத்தார் சங்கம்
இணைந்து நடத்தும் கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழா சிறக்க வாழ்த்துகள்

LIVE **LIKE** A **LANDLORD**

Saradharam's Lakshmi Vilas Heritage Hotel is housed in traditional landlord's bungalow (Pannaiyar Veedu) built in the 1850s. The complex consisted of the main terraced bungalow for the Pannaiyar's family and two separate tiled domestic quarters for the staff and farm hands along with a big cattle shelter on 4.5 acres of private property surrounded with lemon, sapota, mango and coconut orchards. The original bungalow which currently houses the reception and the restaurant was modernised in the year 1943. The domestic quarters and the cattle shed were demolished and new rooms constructed in the year 2009 replicating the chola period architecture. The property has been in possession with the family for over eight generations now.



NEAR **VEERANAM** LAKE







LAKSHMI VILAS
HERITAGE HOTEL

PUMP SET BATH | OPEN AIR THEATRE | TEA KADAI | 20 AC ROOMS | CAR PARKING

+91 9442591456 / 94425 91466 http://www.lakshmivilasresort.com/

71/2, SIVANKOIL STREET, NEDUNCHERRY T. PUTHUR TAMIL NADU

சென்னை கார்காத்தார் சங்கம், புதுச்சேரி கார்காத்தார் சங்கம்
இணைந்து நடத்தும் கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழா சிறக்க வாழ்த்துகள்

ராம்விஜய் நெல் உயிர் உரம்





ராம்விஜய் தென்னை உயிர் உரம்

Bio-Fertilizers

Azospirillum	Nitrogen fixing
Phosphobacterium	P. Solubilising
Potash Mobiliser	K Mobilising
Acetobacter	Nitrogen fixing
Azotobacter	Nitrogen fixing
Rhizobium	Nitrogen fixing
Zinc Solubiliser	Zn Solubilising
Silicate Solubiliser	Si solublising bacterium

Bio-Pesticides

Verelac	For sucking pests
Beauveria	Borer control
Metarhizium	Borer control
Pelicide	Nematode control
Grubkill	Sucking Pests/borers
Bioter	Termite control
Biomite	Mite control

Bio-Fungicides

Pseudomons	Foliar disease control
Trichoderma	Control of soil born diseases
Trypae Mix	Control of soil born diseases & Nematode
Glypae Mix	Control of soil born diseases

Bio-Compost Mix :
Conversion of biowaste into welldecomposed manure
Organic Growth Promoter :
Romzyme Growth Promotion

Dr. C. Vaithilingam M.Sc. (Ag)., Ph.D.,
Cell : +91 94432 39092
E-mail : vaithi52@gmail.com

Dr. S. Anthoni Raj M.Sc. (Ag)., Ph.D.,
Cell : +91 94438 11663

Dr. V. Vijay Ph.D.,
Cell : +91 96555 39092
E-mail : vvijayaganapathy@gmail.com

தேவைக்கு அணுகவும்
ஏ. அருண்குமார்
செல் : 73394 69442

ECO-FRIENDLY
ROMVIJAY

ராம்விஜய் பயோடெக் (பி) லிட்.,
5, கடலூர்–பாண்டி மெயின் ரோடு,
கன்னியகோயில், புதுவை–607 402.
www.romvijaybiotech.com

தங்கப்பதக்கம் வென்றதற்கு நல்வாழ்த்துக்கள்





நம் கார்குல பொறியாளர் திரு. **ஏ. கணபதி** 30/06/2023 அன்று சென்னை வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கட்டிடப் பொறியியல் பிரிவில் **(BE, Civil) முதல் மாணாக்கராக** தகுதி பெற்று இந்திய நிதியமைச்சர் மாண்புமிகு திருமதி **நிர்மலா சீதாராமன்** அவர்களிடமிருந்து தங்கப்பதக்கம் பெற்றார். இவரது தந்தை திரு. **ச. ஏகாம்பரம்** அவர்கள் சென்னை, மடிப்பாக்கத்தில் கட்டிடப் பொறியாளராக உள்ளார் என்பது (Pathi Builders, 9841321786) குறிப்பிடத்தக்கது.

தந்தை வழி தானும் நடந்து தன்னடக்கத்துடனும் தன்னம்பிக்கையுடனும் தனிநிலை பெற்று தரணியில் புகழ் சிறக்க மேலும்பல வெற்றிகளைப் பெற மனமுவந்து வாழ்த்துகிறோம்.

T.S.R. சோமசுந்தரம் (Balu) & குடும்பம்,

தாழஞ்சேரி, மயிலாடுதுறை மாவட்டம்

சென்னை கார்காத்தார் சங்கம், புதுச்சேரி கார்காத்தார் சங்கம் இணைந்து நடத்தும் கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழா சிறக்க வாழ்த்துகள்



புதுவை நகரின் நெ. 1

ஸ்ரீ முருகன் கபே

உயர்தர சைவ உணவகம்

ஆர்டரின் பேரில் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் உணவு வகைகள் செய்து தரப்படும்





Ph : 0413-2224650

(ஞாயிறு உணவகம் உண்டு)

268, கொசக்கடை வீதி, (PGR வாசவி ஜ்வல்லரி எதிரில்), புதுச்சேரி-1.

சென்னை கார்காத்தார் சங்கம், புதுச்சேரி கார்காத்தார் சங்கம் இணைந்து நடத்தும் கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழா சிறக்க வாழ்த்துகள்

KIRUBANANDAM

GREEN SOLUTIONS PVT. LTD.,

C-1, 1st Floor,
Sri Venkatava Apartments,
SaiRam Nagar,1st cross street,
Medavakam Koot Road,
Medavakam,
Chennai - 600 100.
Cell : 9840505437

VIJENDRANATH RAVINDREN

TERRAIN LABS LANDSCAPE ARCHITECTS,

C-1, 1st Floor,
Sri Venkatava Apartments,
SaiRam Nagar,1st Cross street,
Medavakam Koot Road,
Medavakam, Chennai - 600 100.
Cell : 9500035956

சென்னை கார்காத்தார் சங்கம், புதுச்சேரி கார்காத்தார் சங்கம் இணைந்து நடத்தும் கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழா சிறக்க வாழ்த்துகள்

கார்காத்தார் ஒப்புரவு புதுச்சேரி சிறப்பிதழ்
வெற்றி பெற நல்வாழ்த்துக்கள் !
இலையூர் V. வாகீசன், இராணிப்பேட்டை
Mobile : 94433 88644

VANI ENTERPRISES
Authorised Distributors : MAILAM Welding Electrodes, Flux Cored Wires,
Auto Welding Wires & Flux, Welding Consumables,
INDUSTRIAL Oxygen Gas (O2) & Carbondioxide Gas (Co2)

SRI SEDHUPATHY TRADERS
BALAJI INDUSTRIES
ANCILLARY TO BHEL - RANIPET

No.48, SIDCO-BHEL ANCILLARY ESTATE,
RANIPET - 632 406.
vanienterprises999@gmail.com

HimaalaYaa Paints



Manufacturer of
Cement Based Putty
Acryil Putty
Interior & Exterior Primer
Interior & Exterior Emulsion
Wood Primers,
Industrial Primers
Water Proofing Chemicals
Enamel N.C. Epoxy Thinner
Epoxy Primer & Finish

ADDRESS
No.01/125, Pillayar Koil Street, Nallathur Village, Tamil Nadu - 605 106.
Email : himaalayaapaints@yahoo.co.in
Ph : 94436 16326 & 97867 00850

உ



அருள்தரு விசாலாட்சி அம்பிகை அருள்மிகு விஸ்வநாதர் ஆலயம்



திருக்குடமுழுக்கு எனும் மஹா கும்பாபிஷேகம்

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் வட்டம் பூவிழுந்தநல்லூர் கிராமத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு கற்பக விநாயகர் அருள்தரு விசாலாட்சி அம்பிகை உடனாகிய அருள்மிகு விஸ்வநாதர் அருள்தரு செல்லியம்மன் அருள்தரு பூர்ணா , புஷ்கலா சமேத அருள்மிகு அய்யனார் ஆகிய ஆலயங்களுக்கு நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் ஆவணித் திங்கள் 4-ஆம் நாள் 21.08.2023 திங்கள் கிழமை காலை 6.00 மணிக்குமேல் 7.30 மணிக்குள்ளும் அருள்மிகு கற்பக விநாயகர் அருள்தரு விசாலாட்சி அம்பிகை உடனாகிய அருள்மிகு விஸ்வநாதர் ஆலயத்திற்கு காலை 9.00 மணிக்குமேல் 10.00 மணிக்குள்ளும் திருக்குடமுழுக்கு எனும் மஹா கும்பாபிஷேகம் திருக்கயிலாய பரம்பரை தருமை ஆதீனம் 27வது நட்சத்திர குருமணிகள் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பனசை காசித் திருமடம் 21 வது அதிபர் கயிலை மாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமி தம்பிரான் சுவாமிகள் ஆகிய அருளாளர்களின் திருமுன்னிலையில் சென்னை இராதா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் (பி) லிமிடெட் நிறுவனர் கொடைவள்ளல் திரு.S.வெங்கடேசன் அவர்களின் பெருநிதி உதவியுடன் திருக்குடமுழுக்கு எனும் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதால் ஆன்மீக அன்பர்களும் பக்த கோடிப்பெருமக்களும் திரளாக வந்திருந்து கண்டுகளித்து தெய்வங்களின் பேரருளுக்கு பாத்திரராகும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்

திருப்பணிக்குழுவினர் மற்றும் கிராமவாசிகள்

பூவிழுந்தநல்லூர்

வாழ்க்கையின் அர்த்தம்

A. RAJARETHINAM,
PORUR, CHENNAI. PH: 9444224366

நாம் எப்பொழுதும் மற்றவர்கள் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்று நினைக்கிறோம் அதற்கேற்ப நம் நடை முறைகளை அமைத்துக்கொள்கிறோம். இது நமது உள் மனது என்ன விரும்புகிறது என்று நம் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அதை நாம் மதிக்க வேண்டும். அதன்படி நடக்க வேண்டும்.

சூழ் நிலை காரணமாக நமது உண்மையான திறமைகளை வெளியே கொண்டு வர நாம் தவறி விடுகிறோம். பிரபல தத்துவ ஞானிகள் உல்ப்கேன்க், மஸார்ட், பெப்போ பிக்காஸோ, ஷார்லி டெம்பிள் போன்றவர்கள் இளம் வயதிலேயே அவர்களது உண்மையான திறமைகளை உணர்ந்து செயல்பட்டு வெற்றி அடைந்தார்கள். சில தலைவர்கள் தங்கள் கொள்கைகளில் பிடிவாதமாக இருந்தார்கள். மற்றவர்களுடைய அபிப்ராயத்திற்காக அவர்கள் காத்திருக்கவில்லை. வீரபாண்டிய கட்டபொம்மன் தனது கொள்கைக்காக அதிகார வர்க்கத்திடம் அடி பணிய மறுத்தார். அவருக்கு அளிக்கப்பட்ட தூக்கு தண்டனையையும் ஏற்றார். நம் நாட்டின் சுதந்திரத்திற்காக பல தலைவர்கள் தங்கள் வாழ்க்கையை தியாகம் செய்திருக்கிறார்கள். அவர்கள் சரித்திரம் படைத்தவர்கள்.

நாம் எல்லோரும் வீடுகளும், கார்களும் வாங்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். நிறைய சொத்து சேர்ப்பதில்தான் மகிழ்ச்சி இருக்கிறது என்று நினைக்கிறோம். மற்றவர்கள் A.C, பிரிஜ், வாஷிங்மெஷின், T.V. இவையெல்லாம் வைத்திருப்பதைப் பார்த்து, நாமும் அவற்றை வாங்குகிறோம். அதன்பின் இவற்றையெல்லாம் பழுதின்றி பாதுகாக்க ஆட்களைத் தேடுகிறோம். டெக்னிஷியன்கள் உடனே கிடைப்பதில்லை. மன அழுத்தம் உண்டாகிறது. இது சந்தோஷமான வாழ்க்கை இல்லை.

மன அமைதி வேண்டுமென்றால் நமது வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். அது நபருக்கு நபர் வேறுபடும். சிலர் பொறுமை, அன்பு, உண்மை, தர்மம், பிறருக்கு உதவுதல் போன்றநல்ல அம்சங்களில்நாட்டம்செலுத்துகிறார்கள். சிலர் கலை, பாட்டு, நடனம் போன்றவற்றில் ஆர்வம் கொள்கிறார்கள். சிலர் பல நல்ல மனிதர்களுடன் பழகி வாழ்கிறார்கள். நன்றாக சிந்தித்தால் நமது வாழ்வின் அர்த்தம் என்ன என்பது புரியும். சில நேரங்களில் நாம் சில சோதனைகளை சந்திக்கிறோம். அந்த நேரத்தில் நமது வாழ்வின் அர்த்தம் என்ன என்பது தெரிய வருகிறது.

ஒரு நாட்டில் கெரோலா என்று ஒரு பெண் இருந்தாள். அவளுக்கு பெரிய வீடு, விலை உயர்ந்த கார், நிறைய செல்வம் எல்லாம் இருந்தது. அவள் அதைப்பற்றி மற்றவர்களிடம் பெருமையாக பேசிக் கொள்வாள். மிகவும் கர்வம் மிக்கவள். திடீரென்று ஒரு நாள் அவள் நோய் வாய்ப்பட்டாள். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாள். மூன்று மணி நேரம் அறுவை சிகிச்சை நடந்தது. பத்து நாட்கள் கழித்து வீட்டுக்கு வந்தாள். அன்று அவள் வாழ்க்கையின் அர்த்தம் என்ன என்று அறிந்தாள். உடனே அவள் மனப்போக்கு மாறிவிட்டது. தர்ம சிந்தனை ஓங்கியது. அனாதை இல்லங்களுக்கு பணம் கொடுத்தாள். பார்வை அற்றவர்களுக்கும், முதியோர் இல்லங்களுக்கும் உதவி செய்தாள். அது மன அமைதியைத் தந்தது. மகிழ்ச்சி பெறுகியது. சிலர் நன்றாக படம் வரைவார்கள். சிலர் தோட்டங்களை பராமரிப்பார்கள். சிலர் நீச்சல், மலை ஏறுதல், விளையாட்டு போன்ற செயல்களில் ஈடுபடுவார்கள். சிலர் சிறுவர்களுக்கு இலவசமாக பாடம் சொல்லித் தருவார்கள். எனது நண்பர்கள் சிலர் கிராமங்களுக்குச் சென்று ஏழை மாணவர்களுக்கு பாடம் சொல்லித் தருகிறார்கள். சிலர் கோவில்களில் இலவசமாக சேவை செய்கிறார்கள்.

வாழ்வின் அர்த்தம் என்ன என்பதை அறிந்து அதன்படி பணி செய்தால் உண்மையான மன மகிழ்ச்சி கிடைக்கும்.

குல தெய்வ வழிபாடு.

சீர்காழி அருகில் உள்ள திருக்குருகாவூர் அருள்மிகு. ஸ்ரீ வீரனார் கூட்டு வழிபாடு, கார்குல வளவுதுரைய கோத்திர இனத்தவர்கள் அமைப்பின் சார்பாக கடந்த ஜூன் மாதம் 09–06–2023 அன்று தமிழ் மாதம் வைகாசி 26–ஆம் நாள் காலை 9 மணிக்கு தொடங்கியது. அருள்மிகு கற்பக வினாயகரை வணங்கிய பின்னர் அருள்மிகு ஸ்ரீ வீரனார் கோவிலுக்கு வந்து பொங்கல் பொங்கி, கடம் வைத்து வேத விற்பன்னர்கள் வேதம் ஓத அருள்மிகு ஸ்ரீ வீரனாருக்கு அபிஷேகம் செய்வித்து படையலிட்டு வழிபாடு நடத்தப்பட்டது. குல தெய்வ வழிபாட்டில், உள்ளூர், வெளியூர் மற்றும் வெளிநாட்டிலிருந்து வந்த கார்குல சொந்தங்கள் பலரும் கலந்து கொண்டனர்.

ச. சண்முகநாதன்
சிதம்பரம்

மணமகன் / மணமகள் தேவை

முக்கிய குறிப்பு : எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 1/8 செல்வி **M. தனலட்சுமி** உத்திரம் பருவுட பூர்வீகம் : பெண்ணாடம் விருப்பம் : சமபடிப்பு	07.05.98 154 cm	B.Tech (CS) .	Software Professional EPSILON Bangalore	திரு. K. மணிகண்டன், G1, Ashok Manor, Ruby Builders, 5/2, Kalamegam Street, East Tambaram, Chennai - 600 059. Cell : 94447 11045, 99416 20355
B 2/8 செல்வி **கூ.ரா. பாக்யா** உத்திரம் 4ம் பாதம் நெப்புகுட பூர்வீகம் : கூடலூர் (கடலூர் Dt.) விருப்பம் : நல்ல பணியில் உள்ள வரன். (Looking for groom after 1992) குறிப்பு : ராகு, கேது தோஷம் உள்ளது.	18.01.98 150 cm	M.Sc. (Physics)	IT Company Rs. 2 Lakhs/PA	திரு. வை. இராசேந்திரன், 49, சபரி நகர், Dr. மூர்த்தி ரோடு, கும்பகோணம் – 612 001. Cell : 94421 43370 (W)
B 3/8 செல்வி **வ. ராஜலஷ்மி** (எ) **உஷா** மூலம் – 2ம் பாதம் குவாவுடை பூர்வீகம் : திருவில்லிப்புத்தூர் விருப்பம் : பட்டம் பயின்று நல்ல பணியில் உள்ள மணமகன்	09.04.96	B.E (Electrical & Electronics Engineering)	சீனியர் பிராடாக்ட் என்ஜினியர் Rs. 70,000/PM	திரு. தி. வடமலையப்பன், "ஷண்முகப்ரியா", 4–3/29, மூன்றாவது தெரு, ரயிலார் நகர், மதுரை – 625 018. Cell : 96007 49161, 99400 37402 E-mail : vadamalaiappan@gmail.com
B 4/8 செல்வி **கௌ. ரோஷிணி** ரோஹிணி அரசுடையார் பூர்வீகம் : தஞ்சாவூர் விருப்பம் : சென்னை (or) பெங்களூரில் வேலையில் உள்ள சமடிப்பு வரன்.	16.09.95 154 cm	B.E. (Computer Science) M.Sc., (Cyber Forensics and Information Security	Associate in MNC (Bangalore)	திரு. N.Gowrishankar 14/47, Valluvar Street, Jagannatha Nagar, Arumbakkam, Chennai - 600 106. Cell : 96772 33791 Phone : 044–2363 8284
B 5/8 செல்வி **ப. திரிபுரசுந்தரி** பூசம் 4ம் பாதம் தென்னவராய பூர்வீகம் : சாத்தநத்தம் விருப்பம் : பணியில் உள்ள வரன்	03.11.96 163 cm	B.C.A.,	CSS Corp. Chennai Rs. 35,000/PM	திரு. P. பழனிவேல், சாத்தநத்தம், திட்டக்குடி வட்டம், Cell : 95007 90802, 79040 77494
B 6/8 செல்வி **R. சௌந்தர்யா** கேட்டை பாதம் – 2 மீனம் குருகுலராய	04.01.2000 5' - 2"	B.E. (CSE)	Rs. 6 Lakhs/PA	திரு. T. இரவி பிள்ளை, 2/179, இராஜ வீதி, இலந்தைகூடம் அஞ்சல் – 621 851. திருமழபாடி வழி, அரியலூர் வட்டம் Cell : 94438 19454, 97868 85909, 89403 66276
B 7/8 செல்வி **K. சுவாதி** திருவோணம் விழுப்பதரிய பூர்வீகம் : பள்ளிகுப்பம் (சி.வீரசோழகன்) விருப்பம் : சமபடிப்பு	27.05.97 170 cm	CA	AK Lunawath & Associate, Choolai Chennai Rs. 30,000/PM	திரு. மு. கலைசெல்வன், 164, காசுகடைத் தெரு, சிதம்பரம் Cell : 97903 36548, 80566 52357

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 8/8 செல்வி **ம. சிவரஞ்சனி** ரேவதி முனதரிய பூர்வீகம் : கண்ணங்குடி – சிதம்பரம் விருப்பம் : 8–ல் செவ்வாய் உள்ளது.	8.3.2000 165 cm	M.A. (English)	Branch Postmaster (India Post) Rs. 16,000/PM	திரு. வி. மணிவண்ணன், 2/20, தெற்கு தெரு, கண்ணங்குடி, எண்ணகரம் அஞ்சல், சிதம்பரம் தாலுகா. Cell : 92452 94342, 92452 64964
B 9/8 செல்வி **V. அனுஷா** பூரம் வேளா	20.11.2000 160 cm	B.Sc., Bio Chemistry	Medical Coder AGS Healthcare Chennai Rs. 3 Lakhs/PA	திரு. R. வெங்கடேசன், 74, பெருமாள் கோவில் தெரு, தெற்கு வடக்கு புத்தூர், விருத்தாசலம் T.K.– 606 110. Cell : 99447 50849, 70102 23406 E-mail : anushvenjatesan@gmail.com
B 10/8 செல்வி **S. கோகிலா** சதயம் களப்பாள பூர்வீகம் : T. பழூர் விருப்பம் : கனடாவில் வேலையில் செய்பவர் அல்லது கனடா செல்ல விருப்பமுள்ள வரன்	05.08.93 5' - 2"	B.Tech. MBA.,	Workato India Pvt. Ltd., Chennai Rs. 21,00,000/PA	திரு. B. செல்வம், 20/1, S3, மூங்கி என்கிளேவ், ஈஸ்வரன் கோவில் தெரு, ஊரப்பாக்கம், சென்னை – 603 210. Cell : 97904 71465, 94457 15530
B 11/8 செல்வி **D. அபிதா** புனர்பூசம் குளத்துட பூர்வீகம் : செம்மங்குடி (சீர்காழி Tk.) விருப்பம் : I.T. துறையில் சென்னை மற்றும் பெங்களூர் பணியில் உள்ள வரன்.	10.01.2001 5' - 6"	B.E. (ECE)	Software Test Engineer at Softeon India Pvt. Ltd., Rs. 22,000/PM	திரு. S. Dakshinamoorthy, 149, ABI Illam, S.K. Moorthy Road, VIP Nagar, Nallathukudy. Mayiladuthurai - 609 001. Cell : 94862 18100, 94874 42159
B 12/8 செல்வி **S. சிந்து** விசாகம் மருவுட பூர்வீகம் : சிதம்பரம்	28.06.96	B.E. (ECE) .	Sri Navasakthi Vinayagar Transport Accountant	திரு. K. சுப்பையா, 20, நித்யானந்தா கார்டன், உசுப்பூர், சிதம்பரம் Cell : 99943 59278, 96775 04442, 94437 42459
B 13/8 செல்வி **சு. அசுமதி** கேட்டை குலத்துட பூர்வீகம் : தில்லைவிடங்கன், சீர்காழி விருப்பம் : நல்ல வேலையில் உள்ள வரன்.	03.11.97 5' - 7"	B.E. Computer Science (CSE)	Associate Software Engineer, Kyndryl, IBM, Chennai	திரு. T. சுவாமிநாதன், 5/500, கரூவூல காலனி, நந்தவனப்பட்டி, திண்டுக்கல் – 624 001 Cell : 94434 22469, 92451 70111, 90439 86890



பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 1/8 செல்வன் **R. பாலாஜி** அசுபதி நன்னுடை பூர்வீகம் : 6–கீழையூர் (தரங்கம்பாடி தாலுகா) விருப்பம் : பட்டைய படிப்பு	18.06.90 167 cm	B.E., MBA.,	BOT VFX Pvt. Ltd., Chennai Rs. 70,000/PM	திரு. A. ரவிச்சந்திரன், 38, ஸ்ரீ லட்சுமி நகர், செம்பனார்கோவில், தரங்கம்பாடி தாலுகா Cell : 94981 65037, 94866 65327
G 2/8 செல்வன் **Prabhakaran Sathiyamurthy** Pooradam Konguaraya பூர்வீகம் : Malaiyur - Mayiladuthurai	31.05.91	B.E., (Mechanical)	Trumpf Metamation Pvt. Ltd, Siruseri, Chennai Rs. 10 Lakhs/PA	திருமதி. SUSILA SATHIYAMURTHY Plot No. 28, Door No. 11/196, Annai Indra Gandhi Street, 1st Cross, Bharathiyar Nagar, Polichalur, Chennai - 600 074. Cell : 98405 46301
G 3/8 செல்வன் **இரா. மணிபாரதி** மகம் தொழுவுட பூர்வீகம் : பெண்ணாடம்	04.03.96 168 cm	B.Sc.	MRF Ltd., Arakonam	திரு. தி. இராஜாமணி, 540, கண்ணப்பா தெரு, நசரத்பேட்டை, பூந்தமல்லி – 600 123. Cell : 89399 91174, 98406 87849
G 4/8 செல்வன் **இரா. அமுதன்** ரேவதி வேளா பூர்வீகம் : பெண்ணாடம் விருப்பம் : சமபடிப்பு, BE, ME, MCA, MBA வேலைக்கு செல்வது பெண்ணின் விருப்பம்	19.10.94 175 cm	BE. (MEch),	SAP Consultant Danfoss Industries Pvt. Ltd., Chennai (MNC) Rs. 9,50,000/PA	திரு. இராமநாதன் பிள்ளை (லேட்), E1/40, வள்ளலார் தெரு, பெண்ணாடம், திட்டக்குடி (Tk). கடலூர் (Dt) – 606 105 Cell : 80126 82125, 94436 38924
G 5/8 செல்வன் **V. நந்தகுமார்** ரேவதி மருங்குட பூர்வீகம் : ஹரிஹரன் கூடல் (அரசலங்குடி) விருப்பம் : சமபடிப்பு, பணியில் உள்ள வரன்	12.02.97 177 cm	B.Tech. (M)	Ford Global Technologies Sholinganallur Rs. 8.8 Lakhs/PA	திரு. B. விவேகாநந்தன், F2, ராம் சரோவர், No. 88, வீராத்தமன் கோவில் தெரு, மேடவாக்கம், சென்னை Cell : 99420 73694, 98420 86926
G 6/8 செல்வன் **B. தினேஷ்ராஜ்** அஸ்வினி வில்வராய பூர்வீகம் : கருவாழக்கரை விருப்பம் : பணிபுரியும் பெண்ணாக இருப்பது சிறந்தது (கட்டாயமில்லை)	02.05.92 176 cm	B.E. (Mech)	Maintenance Engineer Arni Infotech P. Ltd., Chennai Rs. 4.30 Lakhs/PA	திரு. G. பாஸ்கரன், 1/64, தெற்கு வெள்ளாழ தெரு, கருவாழக்கரை (PO) தரங்கம்பாடி (Tk) மயிலாடுதுறை மாவட்டம் Cell : 94437 03677, 63692 69113
G 7/8 செல்வன் **S. விக்னேஷ்** பரணி பங்களதரிய பூர்வீகம் : கீழ்நத்தம், சிதம்பரம் விருப்பம் : படித்த வேலையில் உள்ள வரன்.	23.06.95 5' - 7"	M.Sc., (CS)	System Administrator NLGIC Support Service Pvt. Ltd., Nungambakkam Rs. 35,000/PM	திரு. S. சுந்தரம், பிளாட் எண். 34, வேலன் நகர், கண்ணங்குடி மெயின் ரோடு, சிதம்பரம் – 608 001. Cell : 99428 57747 / 73055 81424 E-mail:sundaramnirmala.90@gmail.com
G 8/8 செல்வன் **இரா. பாலமுருகன்** சதயம் தென்னவராய பூர்வீகம் : காவாலக்குடி–கடலூர் மாவட்டம்	08.12.86 5' - 7"	B.Com., MBA.,	Reliance Telecom Pvt. Ltd., Rs. 3.75 Lakhs/PA	திரு. R. பாலமுருகன், S/o. V. இராதாகிருஷ்ணன், 1007, வெங்கடேஷ்வரா நகர், பரமேஸ்வரநல்லூர், சிதம்பரம் – 608 001. Cell : 98948 60555

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 9/8 செல்வன் **R. மணிகண்டன்** உத்திரம் முதனுட பூர்வீகம் : வளையமாதேவி விருப்பம் : BE / B.Tech. / MCA / MS / M.Phil/Ph.D., முடித்த உள்நாடு / வெளிநாடு வேலையில் உள்ள / இல்லாத வரன்.	05.07.84 165 cm	B.Tech, M.Sc., Ph.D. Atmaspherie Science	Research Asst. University of UTECH (USA) # 5200/PM	திருமதி. T. மணிமேகலை, S1, இராகவேந்திரா அப்பார்ட்மெண்ட்ஸ், சுசிலா அம்மாள் நகர், கனகசபை நகர் விரிவு, சிதம்பரம் – 608 001. Cell : 98941 22436 E-mail : manimegalai53orathur@gmail.com
G 10/8 செல்வன் **S. கௌசிக்** அவிட்டம் நன்னுட பூர்வீகம் : மழவராயநல்லூர்–சிதம்பரம் விருப்பம் : சமபடிப்புடன் வெளிநாட்டில் பணிபுரிய விருப்பமுள்ள வரன்.	21.05.95 182 cm	B.E. (Civil) MBA	Project Enginner Doha - Qatar	திரு. V. சங்கர், 49, தேவதாஸ் நகர், விபீஷ்ணபுரம், சிதம்பரம் Cell : 94862 23517, 70100 41488
G 11/8 செல்வன் **S. Mohanasundaram** Ayilyam Aalachukuda பூர்வீகம் : Meyyathur	05.12.93 155 cm	D.M.E.	QC, TPI Composites India Pvt. Ltd., Chennai Rs. 4,05,000/PA	திரு. K. Sabanayagam, 49, Arivalayam Nagar, M.K. Thottam, Chidambaram - 608 001. Cell : 82203 30706
G 12/8 செல்வன் **C. லோகேஷ்** பரணி வில்வராய பூர்வீகம் : நெய்வாசல் – கடலூர் விருப்பம் : பணியில் உள்ள வரன்	09.14.97 180 cm	B.Tech (EEE)	Foxteg Services India Pvt. Ltd., Foxcon Technology Group, Chennai Rs. 5 Lakhs/PA	திரு. T. சந்திரசேகர், 22, ஸ்ரீராம் நகர், கோண்டூர் (PO), கடலூர் – 607 002. Cell : 94440 82732, 94450 95624 E-mail : chandrasekarcnt@gmail.com
G 13/8 செல்வன் **R. ஹரிஷ்குமார்** பூனர்பூசம் 4ம் பாதம் முனதரிய பூர்வீகம் : கண்ணங்குடி – சிதம்பரம்	17.10.95 180 cm	B.E. CSC	Front End Developer One Dot,Chennai Rs. 4.2 Lakhs /PA	திரு. வி. இராமகிருஷ்ணன், G3 சாய்குமரன் அபார்ட்மெண்ட்ஸ், 74, 2வது மெயின் ரோடு, குமரன் நகர், விருகம்பாக்கம், சென்னை – 600 092. Cell : 96771 21315, 94446 10246
G 14/8 செல்வன் **K.B. சுகந்த்** உத்திராடம் (மகரம்) பஞ்சதரிய பூர்வீகம் : விசலூர் விருப்பம் : பணிக்கு செல்லும் வரன் குறிப்பு : TWINS	11.04.96 5' - 10"	B.E (Mech)	Asst. Engineer (Flow Serve) Bangalore	திரு. K. Balamurugan, 41, VKA Nagar, Ammapettai, Chidambaram - 608 401. Cell : 94897 08585, 94430 46094
G 15/8 செல்வன் **K.B. சுமந்த்** உத்திராடம் (மகரம்) பஞ்சதரிய பூர்வீகம் : விசலூர் விருப்பம் : பணிக்கு செல்லும் வரன் குறிப்பு : TWINS	11.04.96 5' - 10"	B.E (Mech)	Asst. Engineer (Flow Serve) Bangalore	திரு. K. Balamurugan, 41, VKA Nagar, Ammapettai, Chidambaram - 608 401. Cell : 94897 08585, 94430 46094
G 16/8 செல்வன் **G. Sivakumar** Bharani Kozhundhuda பூர்வீகம் : Thanjavur	17.01.97 178 cm	DCE	Sri KGS Arts College Srivaikumdam, Thoothukudi State Govt. Job	திரு. A. Gunasekar, Plot No. 16, Annai Nagar, 1st Street, Dhanalakshmi Nagar Extn, Reddypalayam Road, Thanjavur - 613 009. Cell : 75984 21372, 73975 67303

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 17/8 செல்வன் **K. ஹரிஹரன்** புனர்பூசம் 2ம் பாதம் விளந்துட பூர்வீகம் : இருக்கை – நாகை மாவட்டம் விருப்பம் : படித்த வேலையில் உள்ள / இல்லாத வரன்.	09.10.93 178 cm	MCA.,	Software Developer TCS, Chennai Rs. 8,50,000/PA	திரு. S. குமரவேல், 1/80, தெற்கு தெரு, இருக்கை, வடுகச்சேரி (PO), கீழ்வேளூர் வட்டம், நாகை மாவட்டம் Cell : 90423 31975, 93445 18764
G 18/8 செல்வன் **M. தினகரன்** விசாகம் 2ம் பாதம் குழுமுட பூர்வீகம் : சிதம்பரம்	08.12.96 173 cm	B.Tech. EEE, PGDSSM,. MBA	Site Engineer NLCIL, Neyveli Rs. 6 Lakhs/PA	திரு. S. முத்துக்குமரன், 14/71, காளியம்மன் கோவில் தெரு, அண்ணாமலை நகர், சிதம்பரம் – 608 002. Cell : 97880 83707 (W) 87782 96965
G 19/8 செல்வன் **D. ஸ்ரீசபரிராஜன்** பூரம் எரவுட பூர்வீகம் : இறையூர்–பெண்ணாடம் விருப்பம் : குடும்பபாங்கான படித்த பெண்.	22.05.91 173 cm	BE. (EEE),	Roatary, Pvt. Singapore Rs. 12 Lakhs /PA	திரு. A. தட்சிணாமூர்த்தி, 180/A, கொத்தட்டை ரோடு, இறையூர் (PO) – 606 111. பெண்ணாடம் RS, திட்டக்குடி (Tk). Cell : 97879 74287, 99433 03570
G 20/8 செல்வன் **S. பரணிதரன்** பூராடம் தனவாருடைய பூர்வீகம் : திருநெல்வேலி விருப்பம் : படித்த வேலையில் உள்ள வரன்	27.07.88 5' - 7"	B.Com., MBA.,	Team Leader TCS, Chennai Rs 8 Lakhs/PA	திரு. C. தியாகராஜன், C/o. A.C. Subramanian 8A, Jothi Nagar 4th Street, Emerald Street, Chitthalapakkam, Chennai - 600 064 Cell : 94869 17683 / 76391 09296
G 21/8 செல்வன் **அ. சரண்ராஜ்** பூசம் – 3ம் பாதம் தொளாருடைய பூர்வீகம் : நாகமங்கலம் விருப்பம் : படித்த நல்ல குணமுள்ள வரன்.	05.09.91 165 cm	BE. (Mech),	First Abudhabi Bank Abudhabi Rs. 21 Lakhs /PA	திரு. S. அன்பரசன், 11B, பெரியார் நகர் 2வது தெரு, அரியலூர் (PO) (DT) – 621 704. Cell : 97502 79162, 97500 82213 98402 83867
G 22/8 செல்வன் **அ. வெங்கடேசன்** மகம் நிம்மலுட விருப்பம் : பட்டப்படிப்பு Any Degree	12.07.94 155 cm	B.Com., MBA	சுய தொழில்	திரு. R. அய்யாதுரை, 2/122இ, சேக்கிழார் தெரு, நமச்சிவாயபுரம், மயிலாடுதுறை Cell : 89402 69486
G 23/8 செல்வன் **T. பார்த்திபன்** உத்திரம் காருட பூர்வீகம் : கொத்தங்குடி – சிதம்பரம் விருப்பம் : படித்த குணமுள்ள வரன்	20.05.94 6' - 2"	B.E.	கனடா	திரு. S. திருநாவுக்கரசு, 1/33C, நாயுடு தெரு, இராமாபுரம், சென்னை – 600 089. Cell : 89390 24200, 89390 16230
G 24/8 செல்வன் **S.R. பாலாஜி** ரோகிணி முதனுட பூர்வீகம் : காட்டுமன்னார்குடி விருப்பம் : சமபடிப்பு, பணிபுரியும் பெண்.	30.01.96 6'	B.Tech. Civil MBA	IT ADMAXIM India (P) Ltd., Software Engineer Rs. 50,000/PM	திரு. S. ராமதாஸ், 17, காமராஜர் வீதி, தாகூர் நகர், இலாஸ் பேட்டை, புதுவை – 605 008. Cell : 94425 80571, 94426 40571

உடற்பயிற்சியுடன் இணையும் மனவள கிளர்ச்சி

ஞான. அம்புலி

உடற்பயிற்சியின் அவசியத்தையும் பலாபலன்களையும் அறியாதவர்கள் யாரும் இல்லை எனலாம். ஆயினும் நல்வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் உடற்பயிற்சி மட்டும் அளித்திடாது என்பதை மக்கள் உணர ஆரம்பித்துவிட்டார்கள். உடற்பயிற்சி வல்லுனர்கள், உடல் ஆரோக்கியத்தில் தீவிர கவனம் செலுத்துபவர்கள் ஆகியோரில் கூட சில இளம் வயது இறப்புகள் அகால மரணங்கள் அன்றாட நிகழ்வாக தெரியப்படுத்தப்படுவதால் உடற்பயிற்சி மட்டும் போதாது என்ற எண்ணம் பரவலாக எழ ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒரு பக்கம் உடற்பயிற்சியில் கோலோச்சும் பலரில் கூட மனநோயாளிகள் நீரிழிவு நோய், இதய நோய் போன்ற பெரும் வியாதி கொண்டோர் எண்ணிக்கை பெருகி வருகிறது. ஆயினும் ஒரு சமீபத்திய ஆய்வின்படி தொடர் உடற்பயிற்சி செய்வோருக்கு இதய செயலிழப்பு, பக்கவாதம் ஏற்படும் அபாயம் குறைவாக உள்ளதாம்.

உடற்பயிற்சியினைப் பற்றி நலன்கள் பலன்கள் பற்றி தீவிர ஆராய்ச்சிகள் தொடர்ந்து உலகமெங்கும் நடைபெற்றுக்கொண்டுதான் உள்ளன. சில ஆராய்ச்சிக்கான முடிவுகள் விநோதமாகவும் விசித்திரமாகவும் உள்ளதாக சம்மந்தப்பட்டவர்கள் வருத்தமிகு கொண்டுள்ளனர்.

நோயற்ற வாழ்வுக்கு உடற்பயிற்சிக்கேற்ற கட்டுப்பாடான உணவு முறைகள், உள்மன வளர்ச்சி ஆகியவைக்கும் பெருமளவு துணைபுரிவதாக அறியப்பட்டுள்ளது. எல்லாவகை உடற்பயிற்சிகளும் யாவருக்கும் பொருந்தும் என்ற நிலை மாறி, அவரவர் உடல் வாகு, வயது, செய்யும் பணி, சுற்றுச்சூழல் ஆகியவற்றையும் கணக்கில் கொண்டு சரியான உடற்பயிற்சியினை முடிவு செய்தல் முதல் வழியாகும். இம்முடிவை எடுக்குமுன் இத்துறையில் அனுபவமுள்ள வல்லுநர்களை கலந்தாலோசித்தால் நல்ல முடிவை விரைவில் எட்டிட ஏதுவாகும்.

உடற்பயிற்சியில் தலையானதாகவும் தன்னிகரற்றது எனவும் மூத்தவர்கள், உடல் நலம் குறைந்தோர், பெண்கள், மழலைப் பருவம் கடந்த சிறார்கள், மாற்றுத்திறனாளிகள் போன்ற அனைத்து வகை மக்களுக்கும் ஏற்றதாகவும் கருதப்படுவது நடை பயிற்சியாகும். குறைந்த தீவிரம் கொண்ட உடற்பயிற்சி கூடுதல் கொழுப்பை எரிப்பதாக சில ஆராய்ச்சிகளில் அறியப்படுவதால் இதுதான் சிறந்தது என கருதப்படுகிறது. உடல் எடை குறைப்புக்கு உடலிலுள்ள கொழுப்பு சேமிப்பு மையங்களிலிருந்து வெளிப்பட்டு எரிக்கப்படும் கொழுப்புச் சத்தை பொறுத்ததே என்பர். ஒரு தனிப்பட்ட நிகழ்வில் செலவழிக்கப்பட்ட கலோரிகளின் எண்ணிக்கையை விட, நீடித்த ஒரு காலக்கட்டத்தில் எரிக்கப்படும் கலோரிகளின் மொத்த தொகை மேலும் முக்கியமானதாகும்.

ஒவ்வொரு மனிதனும் புகழ்ச்சி என்ற மாமருந்துக்கு அடிமையாகாதிருக்க முடியாது. இதன்படி ஒருவரது தளராத தன்னம்பிக்கையை மற்றொருவர் மூன்றாமவரிடம் புகழ்ந்து பேசும்போது சம்பந்தப்பட்டவரின் தன்னம்பிக்கைச் சுடர் பிரகாசமாக எரியும். அடுத்ததாக ஒவ்வொருவரும் வகுத்துக்கொள்ளும் இலக்குகள் ஒரு முக்கியமானதாக கருதப்படுகிறது. முறையான இலக்குகளை அமைத்துக்கொள்ள வேண்டும். இலக்குவை அமைத்துக்கொள்வது ஒரு கலை என்றும் சொல்வார்கள்.இலக்கைஎட்டிட அதை அடைவதற்கான பாதை செப்பனிடும்போதே சிறு பகுதிகளாக பிரிப்பதும், எதார்த்தமாக எட்டக்கூடியதாக ஆக்க சிந்திப்பதும் தக்க பலனைத் தரும். உதாரணத்துக்கு 4 மாதத்திற்குள் ஒருவர்தன் எடையில் 10 கிலோ குறைப்பேன் என்ற இலக்குக்குப்பதிலாக நினைத்த எடைக் குறைப்பை செயல்படுத்த திட்டமிட்ட முயற்சிகள் அனைத்து செயல்பாட்டையும்இலக்காக அமைத்துக்கொள்ளலாம். சற்று விளக்கமாக சொல்லவேண்டுமென்றால் ஒவ்வொருவரும் தினமும் இவ்வளவு தூரம் இத்துணை நேரம் நடப்பேன் என்றும், பதப்படுத்தப்பட்ட சர்க்கரை கலந்த உணவு வகையை அறவே அகற்றுவேன் என்றும் இலக்குகளை முழுமையாக ஒரே முயற்சியில் குறைக்க கருதாமல் (முயன்றால் முடியும்) சிறு சிறு பகுதிகளாக பிரித்து முடிவுகள் எடுத்தால் எடை குறைப்பை எளிதில் அடைந்துவிடலாம். இலக்குகளை குறிப்பிட்ட காலத்தில் எட்டிட ஒவ்வொருவரின் உள்கட்டுப்பாட்டு எல்லை என்ற ஒன்றின் தாக்கம் கட்டுப்படுத்தப்படும் அளவுக்குள் இருக்கவேண்டும். வெளிக்கட்டுப்பாட்டு எல்லை என்றால் ஒருவருக்கு நடக்கும் அனைத்தும் அவருடைய கட்டுப்பாட்டில் இல்லாத விஷயங்களின் விளைவுகளாதலால் அவற்றை அந்த மனிதரால் மாற்ற இயலாது என்று பொருளாம். ஒரு புதிய ஆய்வின் முடிவின்படி, வாரம் முழுவதும் உடற்பயிற்சி செய்ய முடியாதவர்கள் வார இறுதி 2 நாட்களுக்கு (ஒரு நாளைக்கு 2 மணி நேரம்) செய்யலாம்.

உடல் நலம் பற்றிய "இலக்கை" அடையவேண்டும் என்றால் சில வழிகளை பெரியோர்கள் விட்டுச்சென்றுள்ளார்கள். அவைகளில்

ஒன்று, இலக்கை முதலில் மனத்திரைக்கு கொண்டுவரவேண்டும். பின் அமைதியாக அமர வேண்டும். நிதானமாக மூச்சை விட வேண்டும். பின் இலக்கின் தெளிவான வடிவத்தை மனதில் வரையவேண்டும். உடன் அதுகிடைத்து விட்டதுபோல பாவனை செய்யவேண்டும். இலக்கை மானசீகமாக அடைந்ததற்கு உறவுகள் நட்புகள் எல்லோரும் பாராட்டுவதாக உணரவேண்டும். (எல்லாமே பாவனைகள்தான்). இத்தகைய உணர்வுகள் ஆழ்மனதில் (Subconscious mind) அழகாக பதிந்துவிடும். இந்த எண்ண ஆகமங்கள் பிரபஞ்சம் முழுதும் பரவும். ஆழ்மனதின் அற்புத சக்தியால் அவரவர் கர்மவினை பதிவுகளுக்கேற்ப எப்போது அந்த இலக்கு செயலுக்கு வரவேண்டுமோ அப்போது சரியாக உங்களை அடையும்.

மேற்குறிப்பிட்ட எளிமையான பயிற்சி தினமும் செய்யப்படுமானால் ஏற்படும் வாழ்வாதார அலைகள் (Positive Vibrations) மூலமாக பிரபஞ்சத்தின் மூலமாய் இறைவனோடு இணைவதை உணரமுடியுமாம். இச்செயல் அந்தக்கால சாஸ்திரத்தின்படி ஜீவகாந்தமாகிய மனிதன் வான் காந்தமாகிய பிரபஞ்சத்துடன் இணையும் அற்புதம் நிகழ்வாக கூறுவான்.

உடற்பயிற்சியினை விடாது செய்தலை வாழ்க்கையின் ஒரு அங்கமாக பாவித்தல் எந்த பிரச்சனையும் இல்லை. இந்த அன்றாடச் செயலில் தளர்ச்சி ஏற்படாமல் இருக்க விடாமுயற்சியின் வெற்றியின் இடை இடையில் ஒவ்வொருவரும் தங்களுக்கே ஏதாவது பரிசு அளித்துக்கொள்ளுதல் பலனைத் தருவதாக ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். அத்தகைய பரிசை தேர்வு செய்யும்போதுதாங்கள்கடைபிடிக்கும்உடல்பயிற்சிக்கு சாதகமாக இருக்கும்படி தேர்வு செய்ய வேண்டும்.

உதாரணத்துக்கு ஒரு போட்டியில் வெற்றி பெற்றவனுக்கு அவனுக்கு பிடித்த பொருளை பரிசளித்தால் அடுத்த போட்டிக்கு அவன் தன்னை மேலும் தயார் செய்துகொள்வான். அதே நேரத்தில் உடற்பயிற்சியினால் வெற்றி பெற்றதை சிதைக்கும் வண்ணம் 10 கிலோ பிசாவை சாப்பிட பரிசாக தர விருப்பம் கொள்ளக்கூடாது. பயிற்சியின் முன்னும் பின்னும் உட்கொள்ள வேண்டியவைகளை தெரிந்து கடைபிடிக்க வேண்டும். உடற்பயிற்சிக்கு ஒவ்வாத உணவுவகைகளை தவிர்க்க வேண்டும்.

மேற்சொன்ன அனைத்து விஷயங்களையும் கூட்டிப்பார்த்தால் உடற்பயிற்சிக்கு மனவளக்கிளர்ச்சியும் அவசியம் தேவை என்பதை உணரலாம். மனவளர்ச்சிக்கேற்ற உடற்பயிற்சி ஊக்கமும், ஆக்கமும் தருவதோடு ஒருவருடைய ஆற்றலை அதிகப்படுத்துவதாகவும் அறியப்படுகிறது. மனவளம் தரும் தாக்கம் உடற்பயிற்சியோடு இழையோடிப்போகின்ற வளமான தொடர் உடற்பயிற்சியின் அவசியத்தை பல வழிகளில் பரப்புவது மிகச்சிறந்த சேவையாய் பரிணாமித்து வருகிறது. உயிர் குடியிருக்க உடல் தேவை. ஆரோக்கியமான உடலில்தான் உயிர் தங்கும். உயர உயர வேண்டிய உயிரின் வளர்ச்சி துணைபுரிய வாழ்வு நிச்சயம்.

மனவள உடற்பயிற்சி உணர்வோம்! உயர்வோம்!!

நாற்காலி....!

அரட்டைக்கு கிடைத்த
வெற்றி பரிசு
பட்டி மன்றத்தில்!

மரியாதைக்கு
தகுந்த இடம்
ஆசிரியர் இடத்தில்!

நாகரிகம்
நாசுக்காக வெளிப்பட்டது
நேர்முகத் தேர்வில்!

பந்திக்கு முந்து
படைக்குப் பிந்து
கூறியது எனக்காக தானோ!

அமைந்தது கம்பீரம்
அமைச்சர்
இடத்தில்!

ஓய்வில்தான்
எத்தனை
ஒய்யாரமாய்!

இணைவதில்
இனிமை
திருமண மேடையில் தான்!

எவ்வளவு
வெகுமதி
பொதுக்கூட்டத்தில்!

அடுக்கி வைத்தனர்;
கண்ணில் தென்பட்டார்
ஆஞ்சநேயர் !!!

பி. மரகதம்,
மாடம்பாக்கம்.
9894208913

குரோம்பேட்டை கார்காத்தார் சங்கம்

16-ம் ஆண்டு மங்கல சந்திப்பு

நாள் : **01-10-2023**

இடம் : **ஸ்ரீ கணபதி ஹால்,** Dr. ராஜேந்திரபிரசாத் ரோடு, குரோம்பேட்டை.

Website : http://karkathar.in/marriage Whatapp : 9444630833

E-mail : Chrompetkarkatharsangam@gmail.com

விண்ணப்ப படிவம்

செல்வன் / செல்வி பெயர்	
பிறந்த தேதி	கோத்திரம்
நக்ஷத்திரம்	ராசி
கல்வி	பணி
இடம்	மாத வருமானம்
குடும்பம்	
தந்தை பெயர்	தாய் பெயர்
பணி	பணி
பூர்வீகம்	பூர்வீகம்
உடன் பிறந்தோர்	
முகவரி	
தொலைபேசி	ஈமெயில்

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

கையொப்பம்

நிபந்தனைகள் :

* இணையத்தளத்தில் பூர்த்தி செய்வது பிழையின்றி பூர்த்தி செய்ய உதவும்.

* விண்ணப்பிக்க கடைசி நாள் 20-09-2023

* பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப எண் மற்றும் பதிவு கட்டணம் செலுத்திய விவரம் ஆகியவற்றை வாட்ஸாப் மூலம் 9444630833 என்ற எண்ணில் மட்டும் தெரிவிக்கவும்.

தொடர்புக்கு :

பா. தியாகராஜன், செயலாளர். **9944463333**

பதிவு கட்டணம் : Rs. 500/- இந்தியன் வங்கி கணக்கு எண் 935934700, சிட்லபாக்கம் கிளை.



சிறுவர் பகுதி



தயாரிப்பு **தஞ்சை தியாகு**
தொ.பேசி: 044–26532182
Email: thiagu1943@gmail.com

ஒரு நல்ல புத்தகமே ஒரு மனிதனுக்கு ஏமாற்றாத நண்பனும், சிறந்த துணையுமாகும்தாமஸ் ஹார்டி

மன்னிக்க வேண்டும் ! ஒரு நிமிடம் தாமதம்



மகாத்மா காந்தி ஒரு முறை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஓர் நிகழ்ச்சியில் பங்கேற்பதற்கென தனது நண்பர் டாக்டர் ராஜனுடன் காரில் சென்றுகொண்டிருந்தார்.சிதம்பரம் அருகே கார் போய்கொண்டிருந்தபோது திடீரென ஒரு கூட்டத்தினர் காரினை வழிமறித்து ஐயா ! இங்கு அனைத்து ஜாதியினரும் ஒன்றாக அமர்ந்து உண்ணும் சமபந்தி போஜனம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.ஒரு நிமிடம் தாங்களும் இதில் கலந்துகொண்டு பேசவேண்டும்என்றனர்.

பல்கலைக்கழகத்தை அடைய இன்னும் பத்தே நிமிடங்கள் உள்ளன எனவும்,இந்த விருந்து அவரது நிகழ்ச்சி நிரலில் இல்லை எனவும் அறிந்த காந்திஜி தனது இயலாமையைக் கூறினார்.என்றாலும் மக்கள் அன்புத் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தனர்.இதுதான் சமயம்என்று காரின் வலது பக்கம் இறங்கி பின்னால் வந்த ஒரு காரில் ஏறி பல்கலைக்கழகத்தை அடைந்தார்.காந்திஜி மின்னல்வேகத்தில் செயல்பட்டாலும் அவர் நிகழ்ச்சிக்கு ஒரு நிமிடம் தாமதமாகச் செல்ல நேரிட்டது. எனவே அங்கு பேசிய முதல்வார்த்தை மன்னிக்க வேண்டும், ஒரு நிமிடம் தாமதமாகிவிட்டதுஎன்பது !!. காந்திஜியும் அவரது கைக்கடிகாரமும் பிரிக்க முடியாதவை.நேரம் தவறாமைக்கு அவர் அந்த அளவு முக்கியத்துவம் கொடுத்து வந்தார். நேரம் தவறாமை விஷயத்தில் நாம் லேட்டாகப்போனால் என்ன. மற்றவர்களும் லேட்டாகத்தானே வருவார்கள் என எண்ணுவதே தவறு. நம் நேரத்தை வீணடிப்பதறகு நமக்கு வேண்டுமானால் உரிமை இருக்கலாம். ஆனால் பிறரை காக்கவைத்து அவர்களது நேரத்தை வீணடிப்பது கெட்டப்பழக்கம மட்டுமல்ல அநாகரீகமும்கூட. அவர் எதிலும் கரெக்டாக இருப்பவர் என்ற பெயரை நமக்கு வாங்கித்தருவது நேரம்தவறாமை என்ற பழக்கமே! நேரம் தவறாதீர்கள் !

வெற்றி!

வெற்றி என்பதற்கு வேறு ஒரு பெயரும் இருக்கிறது. அது உழைப்பு!உழைப்பு மட்டும்தான் உங்களை மற்றவர்களிடமிருந்து பளீரென வேறுபடுத்திக் காட்டும். அது மட்டும்தான் மகிழ்ச்சி, என்னும் உணர்வுக்கு உங்களை அடையாளம்காட்டி, அமைதி என்கிற உணர்விடம் உங்கள் பெயரை சிபாரிசு செய்யும் !

காலத்தை வீணாக்கக்கூடாது என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை காலத்தை சரியான செயலுக்குப்பயன்படுத்தவேண்டும் என்பதும். வெற்றியின் வெளிச்சம் இதில்தான் அடங்கியிருக்கிறது.

பழகுங்கள்!

நம்மைவிட சிறியவர்களுடன் பழகினால் மனது இளமையாகும். பெரியவர்களுடன் பழகினால் அறிவு அதிகரிக்கும். சமமானவர்களுடன் பழகினால் மகிழ்ச்சி அதிகமாகும்.

பழகுங்கள் !. பழகுங்கள் ! ... பழகுங்கள் ! தயக்கம் இன்றி பழகுங்கள் ! வெற்றி நிச்சயம் ! ஆனால் ஒரு பழகும்போது அளந்து பழகவேண்டும்.பால் வாங்குபோதும்,துணி வாங்கும் போதும் அளந்துதானே வாங்குகிறோம் ? அது போன்றே யாரிடம் பழகினாலும் அளந்து பழகாவிடில். துயரம் வந்து சேரும்.

தவறாது பாராட்டுங்கள்!

ஒருவரிடம் உள்ள குறைகளைச் சொல்வதைவிட அவர்களிடம் உள்ள நல்ல குணங்களையும் செயல்களையும் சுட்டிக்காட்டி அவர்களைத் தவறாது பாராட்டி நன்றி கூறும்போது ,அவருக்கு மட்டுமல்ல நமக்கும் மன அமைதி கிடைக்கிறது.முகத்தில் புன்சிரிப்பு வருகிறது,நாம் எப்போதும் மகிழ்வோடு இருக்கமுடியும்.

நகைச்சுவை!

நகைச்சுவை உணர்வு ரொம்ப முக்கியம். அது இல்லாத யாராலும் உண்மையான அன்பு செலுத்த முடியாது. மனம்விட்டு சிரியுங்கள். உங்கள் பலம்கூடும். நம்பிக்கை பல மடங்காகும்.

உங்களுக்குள்ளாக இருக்கும் சக்தியை உணருங்கள்!


ஒரு விவசாயி இறக்கும் முன்பாக மகன்களுக்கு ஓர் உயில் எழுதி வைத்துவிட்டு இறந்து விட்டார். அவரது மூன்று மகன்களும் தந்தையின் ஈமக்கிரியைகள் செய்து முடித்துவிட்டு அடுத்தநாள் உயிலை எடுத்துப் பார்த்தனர். உயிலில் என்னுடைய சொத்தில் இரண்டில் ஒரு பங்கு என் முதல் மகனுக்கும், மூன்றில் ஒரு பங்கு இரண்டாவது மகனுக்கும் ஒன்பதில் ஒருபங்கு கடைசி மகனுக்கும் சேரவேண்டியது என்று எழுதியிருந்தது!

உயிலைப்படித்ததும் மூன்று மகன்களுமே குழம்பிப்போய் தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டனர்.காரணம் தந்தையின் சொத்து என்று இருந்தது 17 பசுக்கள் மட்டுமே! தந்தையின் உயில்கணக்குப்படி 17 பசுக்களை பாதிப்பாதியாகவோ, மூன்றில் ஒரு பங்காகவோ, ஒன்பதில் ஒரு பகுதியாகவோ முழுப்பசுக்களாகப் பிரிக்க முடியாதே ! மூன்று மகன்களும் தவித்துக் கொண்டிருந்ததைப்பார்த்து துறவி ஒருவர் உதவிக்கு வந்தார்! இவர்களின் தந்தை எழுதிவைத்திருந்த உயிலைக் கவனத்தோடு படித்த துறவி ,பெரிய புன்னகையோடு 17 பசுக்களையும் வரிசையாக நிற்க வைத்துவிட்டு இப்படிச் சொன்னார்.

என் ஆசிரமத்தில் ஒரு பசு இருக்கிறது.அதை உங்கள் தந்தை விட்டுச்சென்ற 17 பசுக்களுடன் சேர்த்துக்கொள்ளுங்கள்.இப்போது பசுக்கள் 18 ஆகிவிட்டது இல்லையா ? சரி முத்தமகனே, முதலில் நீ வா. இதோ உன்னுடைய இரண்டில் ஒரு பங்கு என்று 9 பசுக்களை அவனுக்குக் கொடுத்தார். 9 பசுக்களோடு அவன் ஒரு ஓரமாகபோய் நின்றான். உயிலில் உள்ளது போலவே ,இரண்டாவது மகனுக்கு மூன்றில் ஒரு பங்கு அதாவது 6 பசுக்களையும் கடைசி மகனுக்கு ஒன்பதில் ஒரு பங்கு என்று இரண்டு பசுக்களையும் கொடுத்தார்.பிறகு துறவி சொன்னார்.பிள்ளைகளே ! உங்கள் தந்தை வைத்துவிட்டுப்போன 17 பசுக்களை அவர் சொல்லியிருந்தபடியே உங்களுக்கு பிரித்து கொடுத்துவிட்டேன். உங்களிடம் இப்போது 17 பசுக்கள் உள்ளன.இப்போதும் ஒரு பசு அதாவது நான் கணக்கில் சேர்த்த எனது பசு என்னிடமே இருக்கிறது.அந்த 18வது பசுவை நானே எடுத்துக்கொண்டேன் என்றார். இதுதான் மாயை. இருக்கிறது ஆனால் இல்லாததது போல் இருக்கிறது !

இக் கதை வேடிக்கையாக இருந்தாலும் கடவுள் இருக்கிறாரா ? இல்லையா ? ஆவி இருக்கிறதா ? பேசுமா ? போன்ற வாதங்களில் இளைஞர்கள் கவனம் செலுத்துவதை விடுத்து நமக்குள்ளேயே இருக்கும் சக்தியை உணர்ந்து பலப் படுத்திக் கொண்டால் அதைவிட பெரிய சக்தி வேறு எதுவும் கிடையாது.

சிந்தனைகளை வளரச்செய்யுங்கள்



இந்த 20ஆம் நூற்றாண்டில் அணுயுகத்தில் எவ்வளவோ மாபெரும் சாதனைகளை நிகழ்த்தமுடியும் என்பதற்கு ஐன்ஸ்டீன் ஒருவரே எடுத்துக்காட்டு. தாமஸ் ஆல்வா எடிசன் இளமையிலேயே வறுமையின் சோதனைகளை சந்தித்தவர். நாளிதழ் விற்பனை செய்வதற்காக ஓடும் ரயிலில் ஏற முற்பட்டபோது அவரது காதுகள் செவிடாயின. வாழ்நாள் முழுவதுமே காதுகேளாது இருந்த இவர் உலகே வியக்கும் வண்ணம் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். அவரது ஆய்வுதான் உலகம் மின் ஒளிபெறச்செய்தது. சிறுவர்களாகிய நீங்கள் நல்ல சிந்தனைகளை உங்களுக்குள் வளரச் செய்யுங்கள் நான் நிற்பதற்கு ஒரு இடமும் சரியான நெம்புகோலும் கிடைத்தால் இந்த பூமியை அசைத்திடமுடியும் என்று சூளுரைத்தார் ஆர்க்கிமிடிஸ். உங்கள் திறமையால் உலகை அசைத்திடுங்கள் சரித்திரத்தில் இடம்பெறுங்கள்.


எந்த சாமியைக் கும்பிட்டால் படிப்பு வரும்?

சாமி கும்பிடுவதற்கும் படிப்புக்கும் தொடர்பு இருக்கிறதா ? என்று பலர் கேட்கிறார்கள். உண்டு. மனதை ஒருமுகப்படுத்தினால் படிப்பு வரும்.சாமி கும்பிடுதல் என்பது மனதை ஒருமுகப்படுத்துதலதான்.பிறகென்ன ? சாமி கும்பிட்டால் படிப்பு நன்றாக வரும் !உடனே எந்த சாமியைக் கும்பிட்டால் என்று நீங்கள் கேட்டால் எந்தச்சாமியைக் கும்பிட்டாலும் படிப்பு வரும் என்பேன் நான் . காரணம் கும்பிடுகிறவன் கும்பிடுவதில்தான் அதாவது மனத்தை ஒரு முகப் படுத்துவதில்தான் வேறுபாடு இருக்கிறது. சுவாமியில் ஏது வேறுபாடு ? எந்தச் சுவாமியைக் கும்பிட்டாலும் படிப்பு வரும்.ஏசு,அல்லா,முருகன்,சிவன் யாரை வேண்டுமானாலும் கும்பிடுங்கள் .ரொம்பவும் கடவுளையே சுற்றி சுற்றி வந்தால் போதாது. தன்னம்பிக்கை, முயற்சி, உழைப்பு,விழிப்பு இவை மிகவும் தேவை.

நன்றி

சுகி.சிவம்

சுதந்தீர இந்தியா



சும்மா கிடைக்கவில்லை சுதந்திர இந்தியா
சுகமான சுதந்திர காற்றை
சுவாசிக்க அன்று சுய நலத்தைத் துறந்து
சுகத்தை மறந்து சுவாசித்தவர்களால்
கத்தியின்றி பெற்றிருந்தாலும்
ரத்தம் சிந்தி பெற்றிட்ட மாபெரும் சுதந்திரம்
அன்று சிந்திய செந்நீர்தான்
இன்று நாம் குடிக்கும் குடிநீர்.
ஒன்றுபட்ட இந்தியா தான் ஓங்கிய புகழ்பெறும்
என்பதை மறவாமல் மனம் ஒன்றி மனித நேயத்துடன்
பிரிவினை காணாது ஒற்றுமையுடன் வாழ்ந்து
தரணி போற்ற தாயகத்தை உயர்த்திடுவோம்.

பாரதியின் ஆதங்கம்





வ.உ. சிதம்பரனார் வெள்ளையருக்கு எதிராக கப்பல்விட்டது நம் எல்லோருக்கும் தெரியும். இக் குற்றத்திற்காக வ.உ.சி இரட்டை ஆயுள் தண்டனை பெற்று சிறை சென்றார். ஆனால் அதன்பின் அந்த கப்பலின் நிலை என்ன ?

என்ன ஆயிற்று என்பது பலருக்குத் தெரியாது.அந்த நேரத்தில் அந்த கப்பலை சிலர் வெள்ளையரிடம் விற்று விட்டனர்.

இதனைக் கேள்விபட்ட மகாகவி சுப்ரமணிய பாரதியார் மனம் வருந்தி இவ்வாறு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தி யிருக்கிறார்.ஒன்றிரண்டு ஓட்டைக் காசுகளுக்காக விற்றானே வெள்ளையனிடம். அதை உடைத்துகடலில் வீசி இருந்தால்கூட அமைதியாக இருந்திருப்பேனே நான்! என்று.

தேசிய கொடிக்கு மரியாதை

நாம் இந்தியர் என்பதற்கான அடையாளமே நம் தேசியக் கொடிதான். தேசியகொடிக்கான உரிய மரியாதையை நாம் தருதல் வேண்டும்.அரசு அலுவலகங்களில் ,கல்விக்கூடங்களில் வீடுகளிலும் ஏற்றலாம் என்றாலும் அதற்கென உள்ள சில விதிமுறைகளை மட்டுமல்லாது தேசிய கீதத்தையும் அவசியம் அறிந்திருத்தல் வேண்டும்.

1. சுதந்திர தினம், குடியரசு தினங்களில் பொதுவான இடங்களில் கொடி ஏற்றி மரியாதை செய்தல் வேண்டும்.
2. சூரிய உதயத்திற்கு பின் ஏற்றி சூரிய அஸ்தமனத்திற்கு முன் இறக்கிவிடவேண்டும்.
3. கொடியேற்றியபின் வணக்கம் செய்தல் வேண்டும்.
4. பேரணிகளில் எடுத்துச்செல்லும்போது வலதுதோளிற்குமேல் உயர்த்தி பிடிக்கவேண்டும்.
5. தேசியகொடியை காலில் மிதித்தல்,மழையில் நனையவிடுதல் கிழித்தல் தரையில் போடுதல் ஆகியசெயல்கள் நம் நாட்டை அவமதிக்கும் செயல்களாகக்கருதப்படும்.

தேசியகொடியின் பெருமையை உணர்ந்து போற்றி மரியாதை செய்தல் வேண்டும்.

நாட்டுப்பற்று

நடந்து முடிந்த ஒலிம்பிக்போட்டி ஒன்றின்போது முன்னதாக வருபவர்களின் பெயர்களைக் குறித்துக் கொண்டிருந்தனர்.ஒருவர் மட்டும் தனது கால்எலும்பு முறிந்துவிட்ட நிலையில் நெடுநேரத்திற்குப்பின் இறுதிக்கோட்டிற்கு நொண்டியபடியே வந்துசேர்ந்தார். இடையில் அங்கேயே நின்றிருக்கலாமே என்றதற்கு. நான் டான்சானியா நாட்டைச்சேர்ந்தவன்.அவ்வாறு நடுவே நின்றிருந்தால் டான்சானியாநாட்டுவிளையாட்டுவீரர் ஓடமுடியாதுபாதியில் நின்றுவிட்டார் என எனது நாட்டிற்கு அவப்பெயர் சேர்க்க விரும்பவில்லை யென்றாராம். என்னே அவர்தம் நாட்டுப்பற்று!!



ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்..

உரிய காலத்தையும் இடத்தையும் அறிந்து செயல்பட்டால் உலகமே
உன் கைக்குள் வந்துவிடும்..

வல்லவனுக்கு வல்லவன்

ஒரு அரசன் தன் நாட்டு மக்களுக்கு ஒரு செய்தியை அறிவித்திருந்தான். தனக்குத் தெரியாத புதிய கதையை யார் சொல்கிறார்களோ அவர்களுக்கு 1000 பொற் காசுகள் பரிசு தருவதாகக் கூறியிருந்தான். ஆனால் அரசனோ இந்தக் கதை எனக்குத் தெரியும் எனக்கூறி அனைவரையும் திருப்பி அனுப்பினான். சில நாட்கள் கழித்து ஒரு இளைஞன் வந்து உண்மைச் சம்பவம் ஒன்றை கதையாகக் கூறுவதாகச் சொன்னான். மன்னர் போட்டிக்கு ஒப்புக்கொண்டான். அரசருடைய தாத்தா எனது தாத்தாவிடம் 5000 ஆயிரம் பொற்காசுகளைக் கடனாக வாங்கியிருந்தார். அதை எனது பேரனிடம் திரும்ப பெற்றுக்கொள் எனக் கூறியிருந்தார். எனது தாத்தா இறந்துவிட்டதால் அதை என்னிடம் கொடுக்க வேண்டும் எனக் கதையை முடித்தான். அரசர் சற்றே யோசித்தார். இந்தக்கதை தெரியும் என்றால் 5000 பொற்காசுகள் தரவேண்டும். தெரியாது என்றால் 1000 பொற்காசுகள் தரவேண்டும். சிறிது யோசித்த அரசன் தனக்கு இந்தக் கதை தெரியாது எனக்கூறிவிட்டு 1000 காசுகளை இளைஞனிடம் கொடுத்தான். இளைஞனோ அரசனை வென்ற மகிழ்வோடு சென்றான்.

இது எப்படி ? தனக்குப் பிடிக்காத ஒரு மந்திரியை வேலையைவிட்டு அனுப்பப் பார்த்தார் ராஜா. மந்திரியைக் கூப்பிட்டார். ஒரு தொப்பிக்குள் இரண்டு சீட்டுகளை எழுதிப் போட்டார் ஒரு சீட்டில்டிஸ்மிஸ் என்று எழுதியிருக்கிறேன். இன்னொன்றில் நீடிக்கலாம் என்று எழுதியிருக்கிறேன். ஏதாவது ஒரு சீட்டை எடும். அது சொல்கிறபடியே ஆகட்டும் ! என்றார் ராஜா. எப்படியும் ஒழித்துக்கட்ட வேண்டும் என்று இரண்டு சீட்டுகளிலும் டிஸ்மிஸ்என்றே ராஜா எழுதி வைத்த சதி மந்திரிக்குத் தெரிந்து விட்டது.

தொப்பிக்குள்இருந்து ஒரு சீட்டைதான் ராஜாவிடம் எடுத்துக்காட்டினார்.ஆனாலும் மந்திரி வேலையில் நீடித்தார். மந்திரி சமாளித்தது எப்படி ?

விடை ஒரு சீட்டைதொப்பிக்குள்ளிருந்து எடுத்த மந்திரி உடனே அதை நம்ம டாங்கி ஸ்டைலில் வாயில்போட்டு விழுங்கிவிட்டார் .தொப்பிக்குள்ளிருக்கும் மற்றொரு சீட்டை மக்களிடம் காண்பியுங்கள் மன்னா ! என்றார். அசடு வழிந்ததை வெளியில் காட்டிக்கொள்ளாமல் டிஸ்மிஸ் என்று எழுதியிருந்த சீட்டைக் காட்டினார் மன்னர்.

ஓ அப்படியானால் நான் நீடிக்கலாம் என்று எழுதியிருந்த சீட்டைத்தான் நான் எடுத்து விழுங்கிவிட்டேனா ? மிகவும் நன்றி மன்னா ! என்று விஷமத்தனமாக வணங்கிவிட்டு போய்க்கொண்டே இருந்தார் மந்திரி.

எல்லை

உடலின் ஆற்றலுக்கு எல்லை உண்டேதவிர மனத்தின் ஆற்றலுக்கு எல்லையே இல்லை. மனது தூய்மை அடைய அடைய அதற்கான ஆற்றலின் எல்லையும் விரிவடைந்து கொண்டே போகும். பொறாமை, கோபம், பேராசை, அடுத்தவர் துன்பத்தில் இன்பம் போன்ற குணங்களை நீக்குவதன்மூலம் எல்லைகள் விரிவடையும்.

எழுத்துக்கு எல்லை சொல், கவிதைக்கு எல்லை ஓசை, கல்விக்கு எல்லை பண்பாடு, வயதுக்கு எல்லை மனநிறைவு, இந்த எல்லைகள் மீறப்படுகிற போது ஆங்கே ஒரு சுனாமியே உருவாகி எல்லை யாவற்றையும் கலைத்து குலைத்துப் போட்டுவிடுகிறது. எதிலும் எல்லை தெரிந்து நடந்துகொள்வதும், எதையும் எல்லைக்குள் வைத்துக்கொள்வதும்தான் எல்லையில்லாத நிம்மதியைக் கொடுக்கும்.

சிரிப்பதற்கு சில:



1. டாக்டர் என்ன பண்றதின்னே தெரியலை.நீங்கதான்
   ஹெல்ப் பண்ணனும்.எனக்குஎதுவுமே ஞாபகமே இருக்கிறதில்லை.
   இப்பக்கேட்டது உடனே மறந்துடுது. நான் என்ன பண்ணனும் சொல்லுங்க டாக்டர் ?
   முதல்ல பணத்தை அட்வான்ஸா கொடுக்கணும் !
2. குரைக்கிறநாய் கடிக்காது.ஏன் தெரியுமா ?
   இரண்டு வேலையையும் ஒரே நேரத்தில்செய்யமுடியாது.அதான்.
3. வீட்டுக்கு வந்த திருடன் ரொம்பவும்பொறுப்பானவன்சார்.
   எப்படி சொல்றீங்க ?
   போகும்போது கதவைத்தாழ்ப்பாள் போட்டுக்கச் சொல்லிவிட்டு போனானே.

சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

100க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் ஒவ்வொரு மாதமும் சங்கச் செய்திகள் அனுப்புவதில்லை என்றாலும் அனுப்பப்படும் சங்கச் செய்திகள் அனைத்தையும் வெளியிட முயற்சிக்கிறோம். அதற்கு உதவிகரமாக சங்கச் செய்திகள் அனுப்புபவர்கள் தாங்கள் அனுப்பும் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் மட்டும் அனுப்பி அதிகமான சங்கங்களுக்கு வாய்ப்பளிக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். நிர்வாகத் தேவை காரணமாக அனுப்பப்படும் செய்திகளை நிராகரிக்கவோ சுருக்கித் தொகுக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.

அண்ணா நகர் :

சங்க கூட்டம் 9–7–2023 ஞாயிறன்று கொரட்டூரில் தொடங்கி நடைபெற்றது.

தலைவர் ஜெ. கோபாலகிருஷ்ணன் அவர்கள் இந்த ஆண்டுக்கான வரவு செலவு அறிக்கையை சமர்ப்பித்தார். அதற்கு உறுப்பினர்கள் ஒப்புதலை தெரிவித்தார்கள். ஆண்டு விழா மலருக்கு பதிவுகள், விளம்பரங்கள் கேட்டு உறுப்பினர்களுக்கு இரண்டு நாளில் கடிதம் அனுப்பப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. ஆண்டு விழா மலர் போட செயலாளர் தலைமையில் ஐந்து பேர் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அதில் திரு. கோபாலகிருஷ்ணன், திரு. தியாகராஜன், திரு. இராஜேந்திரன், திரு. இளங்கோவன், திரு. ஆனந்தகணபதி ஆகியோர் இருந்து பணிகளை செய்ய முடிவு செய்யப்பட்டது.

திருச்சி சங்கத்தின் பொன்விழா சிறப்பாக நடைபெற வாழ்த்தும் கால்நடை பல்கலை கழகத்தில் கண்காணிப்பாளராக பணி புரிந்து ஓய்வு பெற்ற திருச்செல்வம் அவர்களுக்கு வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது.

கொடுங்கையூர் பகுதியின் கூட்டம் மூன்றாவது ஞாயிறு நடத்தப்பட்டது. இதில் வேலூர் பொற்கோவிலுக்கு ஒரு நாள் சென்று வந்த நிகழ்வுகள் பகிரப்பட்டது. நிறைவாக பிரபாகரன் அவர்கள் நன்றி சொல்ல கூட்டம் இனிதே நிறைவு பெற்றது. நன்றி !

என். ஆனந்த கணபதி, செயலர்.
9094682811

குரோம்பேட்டை :

சங்க செயற்குழு கூட்டம் 22–07–2023 அன்று பிரவின் பிளாட்ஸ், காந்தி தெரு, சிட்லப்பாக்கத்தில் சங்க தலைவர் திரு. சி. மனோகர் தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் மூத்த முன்னோடி ஆலோசகர்கள் ஆன திரு. அகோரம், திரு. சதாசிவம், திரு. முருகேஷ், திரு. சேகர், திரு. முருகன் ஆகியோரும், செயற்குழு உறுப்பினர்களுமான 11 பேர் கலந்து கொண்டு சங்கத்தின் செயற்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

சங்க செயற்குழு கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன் சங்கத்தின் சார்பில் மருத்துவ துறையில் வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற திரு. டாக்டர். S. முத்துகுமார் அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் பார்வதி மருத்துவமனையில் திரு. மனோகர், திரு. அகோரம் பொன்னாடை அணிவித்தும், உடனிருந்த சங்க நிர்வாகிகள் வாழ்த்து கூறியும் டாக்டர் அவர்களின் தன்னிகரற்ற சேவையை பெருமையுடன் நினைவு கூர்ந்து சிறப்பிக்கப்பட்டது.

சங்க செயற்குழு கூட்டத்தில் நிதி நிலை அறிக்கை பொருளாளர் திரு. வசந்தகுமார் வாசித்தார்.

01–10–2023–ல் நடக்கவிருக்கும் மங்கல சந்திப்பு நிகழ்ச்சியின் குழு அமைப்பாளராக சங்கத்தின் செயலர் திரு. B. தியாகராஜன் அவர்களும், அக்குழுவின் மற்ற செயல் உறுப்பினர்களாக திரு. சத்தியமூர்த்தி, திரு. தீபன், திரு. சேகர், திரு. வசந்தகுமார் ஆகியோர் நியமிக்கபட்டுள்ளனர். இது தொடர்பான விளம்பரம் ஒப்புரவு இதழில் வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

B. தியாகராஜன்,
செயலாளர்.

போரூர்

செப்டம்பர் மாதம் (24.09.2023) ஞாயிறு அன்று போரூர் கார்காத்தார் சங்கத்தின் எட்டாம் ஆண்டு விழா R.K.C. திருமண மஹால், ராமகிருஷ்ணா நகர், போரூரில் சிறப்பாக நடைபெற உள்ளது. அது சமயம் மாணவ, மாணவிகளுக்கு விளாயாட்டுப் போட்டி, திறன் போட்டி நடைபெற உள்ளது. அதில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் திரு. பாலசுந்தர் – 98402 70215, திரு. கல்யாண சுந்தரம் – 98406 97100, திரு. ரெத்தினசபாபதி – 9884470561 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பதிவு செய்யவும் மற்றும் மகளிருக்கும் போட்டி நடைபெறும்.

நமது சங் உறுப்பினர்கள் 10வது, 12வது மற்றும் கல்லூரி படிப்பு முடித்த மாணவ, மாணவிகள் தங்களது மதிபெண் சான்றிதழை திரு. ஜவஹர் – 9566096155 அவர்களுக்கு அனுப்பி வைக்கவும். அனைவருக்கும் சிறப்பு பரிசு வழங்கப்படும்.

நமது சங்கப் பகுதியிலுள்ள மருத்துவர்களை கௌரவப்படுத்த உள்ளதால் தங்களுக்கு தெரிந்த மருத்துவ பட்டியலை திரு. இராமலிங்கம் – 94444 22813 அவர்களுக்கு தெரியப்படுத்தவும்.

திருச்சி பொன்விழா, பாண்டிச்சேரியில் நடைபெறும் கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழாவிற்கு போரூர் கார்காத்தார் சங்கம் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது.

S. சந்திரமோகன்

செயலாளர்

விருத்தாசலம்

சங்கக் கூட்டம் மண்டலச் செயலர் திரு. S. பாலசுப்ரமணியன் அவர்கள் தலைமையில் 24–06–2023 அன்று நடைபெற்றது. பொருளாளர். திரு. K. சுப்ரமணியன் அவர்கள் நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்தார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சங்கத் தலைவர் திரு. S. பாலசுப்ரமணியன் EE (TNEB) Retd அவர்கள் மண்டலச் செயலாளராக ஆனதைத் தொடர்ந்து தலைவராக திரு. S. செல்வமணி ஆசிரியர் (Retd) அவர்களையும் இணைச் செயலாளராக திரு. T. ஜெயராமன் JAO (Agri) Retd அவர்களையும் தேர்வு செய்து அவர்களை செயல்பட இக்குழு ஏகமனதாகக் கேட்டுக் கொண்டது.

2023–24– ஆம் கல்வியாண்டில் 6 முதல் 12– ஆம் வகுப்பு வரை பயிலும் நம் இன மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கிட நன்கொடை கேட்டு பெற்று ஜூலை (அ) ஆகஸ்ட் மாதத்திற்குள் வழங்கிட இக்குழு ஏகமனதாகக் கேட்டுக்கொண்டது.

- J. சந்திரசேகரன்,

செயலாளர்.

சீர்காழி :

சங்க செயற்குழு கூட்டம் 1–7–2023 அன்று மாலை 6 மணியளவில் தலைவர் கல். சுகுந்தவனநாதன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் குண அமுதன் பிள்ளை அனைவரையும் வரவேற்றுப் பேசினார். கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் அருகில் உள்ள மாணவர் மாணவிகளுக்கு கல்வி உதவிதொகை சென்று சேர வழி வகை செய்யுமாறு கேட்டுகொள்ளப்பட்டது.

நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

– குண. அமுதன் பிள்ளை,

செயலாளர்.

மயிலாடுதுறை மகளிரணி

ஜூன் மாதம் செயற்குழு கூட்டம் தலைவி பில்டெக் அருள்மொழி தலைமையில் நடத்தப்பட்டது. திருமதிகள். அகிலா இறைவணக்கம் பாடினார்கள். சுகன்யா வரவேற்புரை கொடுத்தார்.

01–08–2023 செவ்வாய்க்கிழமை பௌர்ணமி தினத்தில் குலதெய்வ வழிபாடு, விளக்கு பூஜை, பௌர்ணமி பூஜை ''முப்பெரும் பூஜை'' செய்வதாகவும்

திருச்சி பொன்விழா ஆண்டின் அழைப்பை ஏற்று மகளிர் இணைந்து செல்வதாக முடிவு செய்யப்பட்டது.

விளக்கு பூஜை செலவுகள் பற்றி பொருளாளர் சசிகலா விளக்கமளித்தார். செயலாளர் காயத்ரி செயலர் அறிக்கை வாசித்தார். துணைத் தலைவி இராஜேஸ்வரி மற்றும் தமிழ்ச்செல்வி செயல்பாடுகள் செவ்வனே நடப்பதை உறுதி செய்தனர். துணைச்செயலாளர் விஜயலெட்சுமி நன்றி கூற செயற்குழு கூட்டம் இனிதே நிறைவுற்றது.

பில்டெக் அருள்மொழி, தலைவி.

8883468333

செம்பொன் ஒன்றிய சங்க செயற்குழு கூட்ட அறிக்கை :

செம்பொன்னார் கோவில் ஒன்றிய கார்காத்தா வேளாளர் கூட்டமைப்பின் செயற்குழு கூட்டம் 23.07.2023 அன்று விசலூர் கிராமம் வெள்ளாளர் தெரு, திரு. ஏ. லெட்சுமிகாந்தன் பிள்ளை அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. ஒன்றிய சங்க சிறப்புத்தலைவர் ஆக்கூர் திரு. Dr. க. பாலகிருஷ்ணன் பிள்ளை முன்னிலை ஏற்றிட ஒன்றிய தலைவர் திரு. பா. லெட்சுமணன் பிள்ளை தலைமை வகித்தார்கள். பரசலூர் சங்க சிறப்பு தலைவர் பட்டாமணியார் திரு. க. சண்முகம் பிள்ளை இறைவணக்கம் பாடிடவும், வருகை தந்த அனைவரையும் விசலூர் சங்கத்தலைவர் திரு. பொன். சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள் சிறப்புற வரவேற்றிடவும், கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் தங்களை அறிமுகம் செய்து கொண்டார்கள்.

சென்ற கூட்ட அறிக்கையினை மாநில துணைத்தலைவரும், செம்பொன் ஒன்றிய சங்க செயலாளருமான திரு. M.C.K. ராமநாதன் பிள்ளை வாசித்திடவும், ஒன்றிய சங்க வரவு – செலவினை ஒன்றிய சங்க பொருளாளர் திரு. மு. சரவணன் வாசித்திட கூட்டம் அதனை ஏற்றது. செயற்குழு கூட்டத்தின் நோக்கம் பற்றியும் ஒன்றிய சங்கம் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும் திரு. கணபதி நடனம் பிள்ளை அவர்கள் சிறப்பாக எடுத்துரைத்தார்கள்.

முன்னிலை வகித்த Dr. க. பாலகிருஷ்ணன் பிள்ளை தமது உரையில் பல்வேறு சிறந்த கருத்துக்களை தொகுத்து கூறினார்கள். தலைவர் தமது உரையில் நம் ஒன்றிய சங்கம் மாநில அளவில் ஆற்றிய பணிகளையும், தொடர்ந்து ஒன்றிய சங்கம் முதன்மையாக விளங்கிட பணியாற்ற வேண்டிய அவசியம் பற்றியும் கூறினார்கள்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

செம்பொன் ஒன்றிய சங்கத்திற்குட்பட்ட கிராம சங்க உறுப்பினர்கள் சுமார் 100 குடும்பங்களுக்கு கார்குல வள்ளல் உயர்திரு. ச. வெங்கடேசம் பிள்ளை அவர்கள் சென்னை கார்காத்தார் சங்கம் மூலம் இலவசமாக "கார்காத்தார் ஒப்புரவு" மாத இதழை வழங்கியமைக்கு மனமார்ந்த நன்றியை இக்கூட்டம் மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறது.

ஒன்றிய சங்க இணைப்பு சங்கங்களில் உள்ள உறுப்பினர்கள் பெயர் பட்டியலை விலாசம் மற்றும் செல் எண்களுடன் ஊர்வாரியாக தயாரிக்க இளைஞரணியிரை கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

மாநில சங்க முன்னாள் பொது செயலாளர் கார்குல வளர்ச்சியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி கொண்ட காலஞ்சென்ற விருதுநகர் அ. பாண்டி அவர்களின்மறைவுக்குஆழ்ந்தஇரங்களைதெரிவித்து அவரது ஆன்மா சாந்தியடைய மௌனஅஞ்சலி செலுத்திட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

மண்டல செயலாளரும் விசலூர் சங்க செயலாளருமான திரு. லெ. ராமசெல்வம் அவர்கள் நன்றியுரை கூறினார். கூட்டம் நடைபெற்ற இல்லத்தார் ஏ. லெட்சுமிகாந்தன் பிள்ளை தம்பதியினருக்கு சங்கம் சார்பாக சால்வை அணிவிக்கப்பெற்றது.

K. ராமநாதன்,
ஒன்றியச் செயலாளர், 94428 20061

செம்பொன்னார்கோவில்

சங்க கூட்டம் 06–07–2023 அன்று சங்கத்தலைவர் திரு. கி. ராமநாதன் பிள்ளை அவர்கள் தலைமையில் செம்பொன் நகரில் 45 ஆண்டுகளுக்கு முன்னர்செம்பொன்நகரசங்கத்தைதோற்றுவித்தவரும் வாழ் நாள் இறுதி வரை சங்க சிறப்புத் தலைவராய் இருந்தவருமான மறைந்த நல்லுச்சேரி கோ. சம்பந்தம் பிள்ளை அவர்களது இல்லத்தில் அவர்களது சகோதரர் மகனும் சங்க உறுப்பினருமான திரு. செள. பாஸ்கரன் பிள்ளை அவர்களால் கூட்டம் நடத்தப்பெற்றது. இறைவணக்கம் திருமதி. நாகவள்ளி ஜெயராமன் பாடிடவும், வரவேற்புரை திரு. செள. குணசேகரன் (E.D.O பணிநிறைவு) பிள்ளை அவர்கள் ஆற்றிடவும், சென்ற மாத அறிக்கை முன்னாள் மண்டல செயலாளர் திரு. கோ. வடிவேலு பிள்ளை அவர்கள் வாசிக்கவும், பொருளாளர் கூட்டத்திற்கு வர இயலாத காரணத்தால் செயலாளர் திரு. ச. நெடுஞ்செழியன் அவர்கள் வாசிக்கவும் கூட்டம் அதனை ஏற்றது. முன்னாள் மாநில துணைத்தலைவர் திரு. கணபதி நடனம் பிள்ளை அவர்கள் வரிச்சிக்குடி திரு. கணபதி சுப்ரமணியம் அவர்களும் பணி நிறைவு பெற்ற வட்டார வளர்ச்சி அலுவலருமான திரு. செள. குணசேகரன் பிள்ளை அவர்களும் கலந்து கொண்டனர்.

சங்க சிறப்புத் தலைவர் மு. சபாநாயகம் பிள்ளை சங்கம் வளர்ச்சி குறித்தும் சங்கத் தலைவர் கி. இராமநாதன் பிள்ளை திருச்சி கார்காத்தார் சங்கம் பொன் விழாவில் விளம்பரம் கொடுத்துள்ளது பற்றியும் புதுச்சேரியில் ஆகஸ்டு 13–ஆம் தேதி நடைபெறவுள்ள புதுச்சேரி கார்காத்தார் சங்க ஆண்டு விழாவுடன் "கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழாவிலும் நமது சங்கக பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். கூட்டம் நடத்திய இல்லத்தாருக்கு சங்கம் சார்பாக சால்வை அணிவிக்கப்பட்டது. கூட்டத்தில் கலந்து கொண்டோர்க்கான ஆண்களுக்கான பரிசு விசுசேகர் பிள்ளைக்கும், பெண்களுக்கான பரிசு திருமதி. ஜெயக்குமாரி பாலாஜி அவர்களுக்கும் வழங்கப்பட்டது. கூட்டம் நடத்திய இல்லத்தார் சார்பாக இரவு சிற்றுண்டி வழங்கப்பட்டது. மாநில முன்னாள் துணைத்தலைவர் திரு. கணபதி நடனம் பிள்ளை அவர்கள் நன்றி கூறிட கூட்டம் நிறைவு பெற்றது.

S. நெடுஞ்செழியன்,
செயலாளர்.

பரசலூர்

02–07–2023 அன்று நக்கீரர் தெரு, சதாபிஷேகம் கண்ட திருவாளர் S. இராமகிருஷ்ணன் பிள்ளை – விஜயலெட்சுமி மற்றும் 17–ம் ஆண்டு திருமண நாள் கொண்டாடும் சு. அமிர்தகணேசன் – ஜெயசுதா இல்லத்தில் தலைவர் க. கோவிந்தராஜன் தலைமையில் A. ஆதித்யா இறைவணக்கம் பாட திருமதி. ஜெயசுதா அமிர்த கணேசன் வரவேற்புரை நிகழ்த்த கூட்டம் துவங்கியது.

செயலர் வீ. கண்ணன் சென்ற மாத அறிக்கையையும், நிதிய அறிக்கையையும், தலைவர் மு.அ. நிதிய அறிக்கையையும் வாசித்தார். அனைத்து பதிவேடுகளும் சுற்றுக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

23–24–ம் ஆண்டிற்கான CREW நிதி உதவி பெறுவதற்குரிய விண்ணப்பத்தினை முறையாக பூர்த்தி செய்யப்பட்டு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்பு, காரம், காபி வழங்கப்பட்டது. பரிசு குலுக்கலில் ஆண்களுக்கான பரிசை R. மணிவேலும், பெண்களுக்கான பரிசை லதா மதிவாணனும் முறையே ராமகிருஷ்ணன் பிள்ளை விஜயலெட்சுமி அவர்களும் கொடுத்தனர். கூட்டம் நடத்திய இல்லத்தாருக்கும், சிறப்பு விருந்தினருக்கும் சால்வை அணியப்பட்டது. சங்க தலைவர், செயலர், பொருளர் அவர்களுக்கு இல்லத்தார் சார்பில் சால்வை அணியப்பட்டது. கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் தேவாரம் பாடி சதாபிஷேகம் கண்ட தம்பதியினரிடம் ஆசீர்வாதம் பெற்றனர். தலைமையாசிரியை திருமதி. செந்தமிழ்ச்செல்வி இராமலிங்கம் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

V. கண்ணன், செயலர்.

Cell : 9894960438

மணிக்கிராமம்

சங்கத்தின் மாதாந்திர கூட்டம் 1–7–2023–ம் அன்று சங்க செயலர் இல்லத்தில் தலைவர் திரு. M. சிங்காரவேலன் தலைமையில் நடைப்பெற்றது. செயலர் திரு. G. அன்பழகன், சிவபுராணமும் சென்ற ஆண்டு அறிக்கையும் வாசித்தார். பொருளாளர் திரு. T. கபிலன் வரவு – செலவு கணக்குகளை படிக்கவும் சங்கம் அதை ஏற்றுக்கொண்டது. தலைவர் சங்க செயல்பாட்டை விளக்கி பேசினர். 20–06–23–ல் 78–வது பிறந்த நாள் காணும் கார்குல வள்ளல் திரு. R. வெங்கடேசம் பிள்ளை அவர்கள் நீடூழி வாழ்ந்து பல நலன் பெற்ற வாழ வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சென்ற ஆண்டு CREW அறக்கட்டளை மூலம் கல்வி உதவிதொகை பெற்றவர்கள் 2023–24–ம் ஆண்டிற்கு கல்வி உதவிதொகை பெற விண்ணப்பங்களை நேரடியாக அறக்கட்டளைக்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம் என சங்க உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. 30–07–23–ல் திருச்சியில் நடக்க இருக்கும் கார்காத்தார் சங்கத்தின் பொன்விழாவில் சங்கத்தின் சார்பாக கலந்து கொள்ள முடிவு செய்யப்பட்டது. மகளிர் அதிகம் பேர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். எல்லோருக்கும் மதியம் விருந்து சங்க செயலர் அளித்தார். தலைவர் நன்றி கூற நாட்டுபண்ணுடன் கூட்டம் இனிதே முடிந்தது.

– கோ. அன்பழகன், செயலர்.

மேலப்பெரும்பள்ளம்

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் & தலைச்சங்காடு : சங்க கூட்டம் 05–07–2023 அன்று தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் இனிதே துவங்கியது.

பின்னர் 50வது திருமண நாளை கொண்டாடி மகிழும் தம்பதிகள் திரு. R. ராதாகிருஷ்ணன் திருமதி. இந்திரா ராதாகிருஷ்ணன் ஆகியோருக்கு சங்கம் சார்பில் சந்தன மாலை அணிவிக்கப்பட்டும், பொன்னாடை போர்த்தியும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டு கௌரவிக்கபட்டது.

தம்பதியரிடம் ஆசீர்வாதம் பெற்ற நம் சங்க உறுப்பினர்களுக்கு இனிப்பு மற்றும் காரம் மகிழ்வுடன் வழங்கிய R. ராதாகிருஷ்ணன் இந்திரா தம்பதியருக்கு சங்கம் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டு கூட்டம் இனிதே நிறைவேறியது.

பால. இலட்சுமணன், தலைவர்.

9443783743

இலையமுதுகூடம்

சங்க கூட்டம் 23–07–2023 அன்று இலையமுதுகூடம் கார்காத்தார் சங்க தலைவர் A. நடனம் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் துவங்கியது.

பொருளர் திரு. சிவகடாட்சம் பிள்ளை அவர்களால் வரவு செலவு கணக்கு படிக்கப்பட்டு ஏற்பளிக்கப்பட்டது.

பார்த்தசாரதி பெருமாள் கோயில் திருகல்யாண உற்சவத்தை மிக சிறப்பாக நடத்தியமைக்கும் அதற்கு பொருளுதவி அளித்த அனைத்து சங்க உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த ஆண்டு கல்வி உதவித்தொகை Crew Trust மூலம் பெற N.N. அபிஷேக் S/o நாகராஜ் என்பவருக்கு பெற்று தர சங்கம் பரிந்துரை செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது கூட்டத்திற்கு தேநீர் விருந்து அளித்த சங்க செயலர் G. சுப்பிரமணியம் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தேசிய கீதத்துடன் கூட்டம் நிறைவேறியது.

A. நடனம், தலைவர்.
Cell: 7598456182

இராதா நல்லூர்

சங்க மாதாந்திர கூட்டமும் மகளிர் அணி துவக்க விழாவும் 9–7–2023 ஞாயிறு தலைவர் T. முத்துக்குமரசாமி அவர்கள் இல்லத்தில் அவருடைய தலைமையில் நடைபெற்றது. துணைத்தலைவர் G. இராஜநாயகம் அவர்கள் வரவேற்க சிறப்பு விருந்தினர் இலையமுது கூடம் சங்க தலைவர் A. நடனம் அவர்கள் முன்னிலையில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மகளிர் அணிக்கு கீழ்க்கண்டவர்கள் பொறுப்பாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தலைவர் : சாவித்திரி சுப்ரமணியன்

செயலர் : லதா கோவிந்தராசு

பொருளாளர் : கலா இராஜா முத்தையா

சங்க செயற்குழு உறுப்பினருமாகிய இரா. வெங்கடேஸ்வரன் – சீ. புவனேஸ்வரி தம்பதியினருக்கு 30–6–2023 அன்று ஆண் குழந்தை பிறந்ததற்கு வாழ்த்தும்

சங்கசெயற்குழுஉறுப்பினர்R.M.சத்தியமூர்த்தி – அருணா தம்பதியினரின் குழந்தைகள் (1) அட்சயா மற்றும் (2) அர்ஜுன் ஆகியோரின் பிறந்த நாள் (9–7–2023) வாழ்த்து தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

சங்க தலைவர் T. முத்துக்குமரசாமி அவர்களின் பெயர்த்தியும் சென்னை மு. நமசிவாயம் – ஜெயந்தி தம்பதியினரின் மூத்த மகளுமாகிய N. SHWETHA சென்னை S.R.M. கல்லூரியில் BIO-TECHNOLOGY பயின்று 8–7–2023 அன்று கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் FIRST CLASS WITH DISTINCTION-ல் தேர்ச்சி பெற்று பட்டம் பெற்றமைக்கு சங்கம் பாராட்டு தெரிவிப்பதோடு எதிர்காலத்தில் சிறப்பாக பணியாற்றி பெற்றோர்க்கு நற்பெயர் பெற்றுத்தரவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

சங்க செயலர் இரா. மு.அ. செல்வம் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

T. முத்துக்குமரசாமி, தலைவர்.

பூம்புகார் :

சங்கக்கூட்டம்02–07–23அன்றுசெயலருடைய இல்லத்தில்தலைவருடைய இறைவணக்கம்பாடலுடன் துவங்கியது.

இம்மாதம் தன்னைச் சங்கத்துடன் இணைத்துக் கொள்ள வருகை தந்த, கீழத்தெருவைச் சேர்ந்த ளு. மருதவாணனைக் கரவொலியுடன் உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அது போலவே ஆர்வத்துடன் கூட்டத்திற்கு வந்து பங்கேற்ற S. காவியாஸ்ரீ S. நித்யஸ்ரீ இருவரையும் உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்த்தி வரவேற்றனர்.

சங்கப் பொருளர் அண்மையில் சென்று வந்த அந்தமான் சுற்றுலாப் பயண அனுபவங்களை உறுப்பினர்களிடம் பகிர்ந்து கொண்டார்.

ஷீலாவிற்குப் பள்ளிச் சீருடைக்காக ரூபாய் 600/– வழங்கிய தலைவர் வரதராஜன் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. சென்ற மாதக் கூட்டத்தில் தெரிவித்தது போல மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள உயர்தர ஆங்கில அகராதியைச் சங்கச் செயலரிடம் அளித்த R. வெங்கடேசனுக்கு நன்றியும்

இன்றைய தேனீர் உபசரிப்பு செய்த விஜயராகவனுக்கு நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

கல்வி உதவித்தொகை வழங்க ஒரு நிதியம் ஏற்படுத்தி அதனை நிர்வகிக்கக் குழுவொன்றை ஏற்படுத்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டது.

இறுதியில் பொருளரின் நன்றியுரைக்குப்பின் கூட்டம் நிறைவுற்றது.

- M. பரணீதரன், செயலர்.

இளந்தோப்பு

சங்க கூட்டம் 03–07–2023 அன்று சிவன்கோவில் வளாகத்தில் திரு. S. சபாநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அய்யனார் கோவில் கும்பாபிஷேக திருப்பணியை விரைந்து முடிக்க அனைவரும் ஒத்துழைப்பு தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

30–07–2023 அன்று திருச்சி நகரில் நடைபெற இருக்கும் 50–வது ஆண்டு விழாவில் நம் கார்குல சொந்தங்கள் பெருமளவில் கலந்துகொள்ள வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது.

செயலாளர் தனது நன்றியுரையில் இளந்தோப்பு சங்க உறுப்பினர்கள் சுமார் 10 பேருக்கு/வருட ஒப்புரவு இதழ் சந்தா செலுத்திய கார்குல வள்ளல் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. சென்னை சங்க பொறுப்பாளர்கள் அனைவருக்கும் ஒப்புரவு வழங்கி நடவடிக்கை எடுத்தமைக்கு நன்றிகள் பாராட்டுகள் தெரிவித்து தனது நன்றியுரை நிறைவு செய்தார்.

V. இராஜசேகரன், செயலாளர்.

கும்பகோணம் :

ஆடி முதற் வெள்ளிக்கிழமையை முன்னிட்டு விளக்கு பூஜை மற்றும் மாதாந்திரக் கூட்டம் தலைவர் T.M. வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் துணைசெயலாளர் M. சாமிநாதன் அவர்கள் முன்னிலையில் 21–07–2023 அன்று மாதுளம்பேட்டை கார்காத்தார் இன வழிபாட்டு கோயில் அ/மி ஆண்ட பிள்ளையார் கோயிலில் மகளிர் அணியினர் விளக்கு பூஜையுடன் சிறப்பாக நடைபெற்றது. கூட்டத்தில் 30–07–2023 திருச்சியில் நடைபெற உள்ள திருச்சி சங்க பொன்விழாவில் கலந்து கொள்வது எனவும் மேலும் வரும் மாதாந்திர கூட்டங்களில் சூழ்நிலைக்கு ஏற்ப சிறப்பு விருந்தினர் அழைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

S. விஜயகுமார்,
செயலாளர்

மதுரை

ஜூலை மாத செயற்குழு கூட்டம் கடந்த 23–7–23 அன்று நடைபெற்றது.

செயற்குழு உறுப்பினர் திரு. K. ராஜேந்திரன் அவர்கள் கடவுள் வாழ்த்து பாடினார். கூட்டத்திற்கு வந்திருந்த அனைத்து உறுப்பினர்களும், உடல் நலமின்றி இருக்கும் மதிப்புரு தலைவர் திரு. மாரியப்ப பிள்ளை அவர்கள் விரைவில் நலம் பெற வேண்டினர்.

தலைவர் Dr. K. சிவசுப்பிரமணியம் தமது உரையில் 30–7–23 அன்று நடைபெற உள்ள 'மங்கள சந்திப்பு' சிறப்பாக நடத்துவது பற்றி எல்லோரிடமும் விவாதித்தார். அனைவரும் தமது கருத்துக்களை கூறினார். நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டது. வரன்கள் கையேடு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் மணமகன், மணமகள் குடும்பத்தாருக்கு நேரில் வழங்குவது என்றும், வர இயலாதவர்களுக்கு தபாலில் அனுப்புவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

உறுப்பினர்களிடம் CREW அறக்கட்டளை மூலம் பெறப்படும் கல்வி உதவிதொகை பெற விரும்பும் மாணவ மாணவிகளின் விபரங்களை தெரிவிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

23–7–23 அன்று மதுரை பொதும்பு கிராமத்தை சேர்ந்த சங்க உறுப்பினர் திரு. R. கணபதியா பிள்ளை அவர்களின் துணைவியார் திருமதி. G. இரத்தினம் அவர்களின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

பொருளாளர் திரு. முருகன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

- C.M. சொக்கலிங்கம்,
செயலாளர்.

திருநெல்வேலி

கார்காத்தார் சங்கம், திருநெல்வேலியின் செயற்குழு கூட்டம் நமது சங்க கட்டிடத்தில் வைத்து 23.07.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை தலைவர் திரு. சி. சண்முகசுந்தரம் பிள்ளை அவர்கள் தலைமையிலும், பொருளாளர் அ. திருஞானசம்பந்தன் பிள்ளை அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது. என்.ஜி.ஒ. காலனி A. அரசப்பன் பிள்ளை அவர்கள் கடவுள் வாழ்த்துடன் கூட்டம் துவங்கியது. C. இராமசுப்பிரமணியன் பிள்ளை அவர்கள் அனைவரையும் வரவேற்றார். மாதாந்திர வரவு, செலவு அறிக்கையை பொருளாளர் அ. திருஞானசம்பந்தன் பிள்ளை அவர்கள் தாக்கல் செய்தார். கூட்டத்தில் நிர்வாககுழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் தங்களது கருத்துகளை பதிவு செய்தனர். கலந்து கொண்ட உறுப்பினர்கள் கூறப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் பல்வேறு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சி. சண்முகசுந்தரம் பிள்ளை
தலைவர்

வருந்துகிறோம்

பூர்விகம் மேலபெரும்பள்ளம்,சென்னை மடிபாக்கத்தில் வசித்து வந்த எம். சௌந்தரராஜன், சூளைமேடு வெங்கடேஷ் வரா மெட்ரிகுலேசன் பள்ளியின் தலைமையாசிர் 31.07.2023 அன்று இயற்கை எய்தியமைக்கு சென்னை கார்காத்தார் சங்கம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

அந்தமானில் ஆறுநாட்கள்...

தி. ஜெயபாலன், மேலையூர்.
9443568722

நானும் என் உறவினர்கள் 5 பேரும் சுற்றுலா அமைப்பாளர் K. சண்முகத்தைத் தொடர்பு கொண்டோம். 08–05–23 முதல் 13–05–23 முடியவுள்ள ஆறு நாட்கள் சுற்றுலா நாட்களாக அறிவிக்கப்பட்டது. ஆனால் காலநிலை மாறுபாட்டால் விமானங்கள் ரத்து செய்யப்பட பயணம் 12–06–23 முதல் 17–06–23 வரை ஒத்தி வைக்கப்பட்டது. ஆவலுடன் எதிர்நோக்கிய அந்தமான் பயணத்திற்கான அந்த நாளும் வந்தது. 12–06–23 திங்கட்கிழமையன்று அதிகாலை 5.15 க்கு எங்களின் (29 பேர்) குழு இண்டிகோ விமானத்தில் வான்வழிப் பயணம் மேற்கொண்டு 7-35 a.m க்குத் தரையிறங்கிய அந்தத் தருணம் மகிழ்ச்சிக்குரியது.

ஏற்பாடு செய்து வைக்கப்பட்ட எங்களுடைய தங்குமிடத்திற்குச் சென்று புத்துணர்வு பெற்று காலைச் சிற்றுண்டி முடித்து நாங்கள் 6 பேரும், அந்தமானிலுள்ள, என் இளவல் இளங்கோவனின் மாணவர் மணிகண்டனுடன் அவரது மகிழ்வுந்தில் பல்வேறு ஆலயங்களுக்கும் சென்று வழிபாடு நிகழ்த்திவிட்டு அவருடைய இல்லத்திற்குச் சென்றோம். அவர் குடும்ப உறுப்பினரை அறிமுகம் செய்து வைத்தார். அவரையும், அவரது குடும்பத்தினரையும் சந்தித்து அளவளாவிய நிகழ்ச்சி ஒரு மகிழ்ச்சியான தருணமாகும்.

தங்கியிருந்த இடத்திற்குத் திரும்பிய நாங்கள், எங்கள் குழுவுடன் இணைந்து மதிய உணவிற்குப் பிறகு தெற்கு அந்தமானின் Port Blair-ல் உள்ள வரலாற்றுப் புகழ்மிக்க Cellular Jail க்குச் சென்றோம். 'திருப்பதி' என்ற வழிகாட்டி மிக அருமையாக வரலாறு முழுவதையும் எடுத்துக் கூறினார். சுதந்திரப் போராளிகள் அடைத்துவைக்கப்பட்ட சிறிய cell கள், அவர்கள் பெற்ற இன்னல்களைச் சித்தரிக்கும் மாதிரி உருவங்கள், தூக்குமேடை, தண்டனைக் கருவிகள் அனைத்தையுமே கனத்த இதயத்துடனும், கண்ணீர் வழியும் கண்களுடனும் காட்சிப்படுத்திக் கொண்டோம். நெகிழ்ந்து நின்ற நாங்கள் ஆசுவாசப்படுத்திக் கொண்டு, எங்கள் மனநிலையை மாற்றிக் கொள்ள அடுத்து நாங்கள் சென்ற இடம் Khaala Paani என்ற கருமை நிற நீருடைய கடற்கரையாகும். சற்றே மனம் அமைதியுற்ற பிறகு Alerdeem Bazzar என்ற இடத்திற்குச் சென்று பார்வையிட்டுப் பிறகு தங்குமிடத்திற்கு வந்து இரவு உணவு முடித்து உறங்கினோம்.

13–06–23 செவ்வாயன்று காலை Port Blair லிருந்து கப்பலில் 2 மணி நேரம் பயணித்துப் பிறகு படகு குழாயிலிருந்து ஒரு படகு மூலம் Elephante Island ற்குச் சென்றோம். அங்கு பலர் நீர் விளையாட்டுகளில் பங்கேற்று மகிந்தார்கள். சிலர் கடல் நீரில் திளைத்துக் குளித்து மகிழ்ந்தார்கள். அங்கு 3 மணி நேரம் தூங்கிக் காட்சிகளில் கட்டுண்டு கிடந்த நாங்கள் பிறகு ழயனநடடிஉம ஐளடயனே ற்குச் சென்று மதிய உணவுக்குப் பிறகு ஒரு டுடினபந–ல் தங்கி ஓய்வு எடுத்துக்கொண்ட பிறகு இரவு உணவு எடுத்துக்கொண்டு உறங்கினோம்.

14–06–23 புதன்கிழமை காலை 9 மணிக்குக் காலைச் சிற்றுண்டி முடித்து Khala Pather என்ற கடற்கரையை அடைந்தோம். மிருதுவான வெண் மணலும், நீல நிறமுடைய நீரைப்பெற்ற கடற்கரை, பவழப்பாறைகள், அவற்றின் கரையொதுங்கிய படிமங்கள் காட்சிக்கு அகப்பட்டது. கண்கவர் காட்சிகளைக் கண்ணுற்ற நாங்கள் மதிய உணவிற்குப் பின் "Blue Flag" சான்று பெற்ற ராதா நகர் கடற்கரைக்குச் சென்றோம். அருமையான இயற்கைக் காட்சிகள், தூய்மை, சுற்றுச்சூழல், இனிமையான உடலை வருடும் காற்று ஆகியவை மனதிற்கு இதமளித்தன. உடலில் ஒட்டாத வெண்மை நிற மென்மையான மணல், இனிமையான காற்று, குளிப்பதற்கேற்ற சூழல் நிறைந்த அந்த இடம் மனத்தைக் கொள்ளை கொண்டது. விட்டுப்பிரிய மனமின்றி மீளவும் தங்குமிடத்திற்கு வந்து இரவு உணவிற்குப்பின் உறங்கி ஓய்வெடுத்தோம்.

15–06–23 வியாழக்கிழமை காலைச்சிற்றுண்டிக்குப் பின் கப்பலில் பயணித்து Ross Island ற்குச் சென்றோம். ஆங்கிலேயரின் ஆளுகையில் இருந்த பொழுது, படைவீரர்கள் தங்குமிடம் பல்வேறு ஆயுதக்கிடங்குகள், அதிகாரிகள் வசிப்பிடம், Church போன்ற வரலாற்றுச் சின்னங்கள் சிதைந்த நிலையிலும், செடி, கொடிகள், புதர்கள் மண்டிய நிலையிலும் காணப்பட்டன. கலங்கரை விளக்கமும் உள்ளது. மான், மயில் போன்ற விலங்குகள் காணப்பட்டன. மான்கள், ஆட்டுக்குட்டிகள் போல, அச்சமின்றி நம்மை உரசி நின்றன. அழகுமிக்க அற்புதமான காட்சி மீண்டும் தங்குமிடம் சென்று இரவு உணவிற்குப்பின் உறங்கினோம்.

16–06–23 வெள்ளிக்கிழமை அதிகாலை 4.15 மணிக்குப் புறப்பட்டு ஏயபே–ல் 3 மணி நேரம் காட்டில் பயணித்து மத்திய அந்தமானின் Baratang என்ற இடத்தையடைந்தோம். அங்குள்ள சதுப்புநிலத்தில் உள்ள நீர்நிலையில் சிறுபடகு மூலம் பயணித்து சுண்ணாம்புப் பாறைக் குகைக்குச் சென்று பார்த்தோம். சொல்லிலடங்காத வகையில் இயற்கையின் அற்புதமான வடிவமைப்புக் கலையின் (Natures art) அதிசயத்தை அங்கு கண்டு வியந்தோம். மீண்டும் தங்குமிடத்திற்கு வந்த நாங்கள் இரவு உணவு முடித்து உறங்கினோம்.

17–06–23 சனிக்கிழமையன்று காலைச்சிற்றுண்டி முடித்து Port Blair விமான நிலையம் சென்று Spice Jet விமானம் மூலம், அழகுமிக்க அந்தமானை விட்டுப்பிரிய மனமின்றி, சென்னைக்கு 12.15 மணிக்கு வந்து சேர்ந்தோம். மொத்தத்தில் அந்தமான் பயணம் மகிழ்ச்சி நிறைந்த ஒன்றாக இருந்தது.

சாஸ்திரம் சொல்லும் சில தகவல்கள்.

குரு, கர்ப்பிணி, நோயாளி, சந்நியாசி, ஆகியோருக்கு ஆபத்து காலத்தில் கண்டிப்பாக உதவவேண்டும். அது மிகவும் புண்ணியம்.

தாய்க்கு நிகரான அண்ணியை தினமும் வணங்க வேண்டும்.

சகோதரன் அல்லது சகோதரி தாழ்ந்த நிலையில் இருந்தால், அவர்களுக்கு உதவ வேண்டும்.

பசு, தேர், நெய்குடம், அரச மரம், வில்வ மரம், அரசுடன் சேர்ந்த வேம்பு போன்றவை எதிரில் குறுக்கிட்டால் அவற்றை வலது புறமாக சுற்றிச் செல்ல வேண்டும்.

சாப்பிடும் போது முதலில் இனிப்பு, உவர்ப்பு, புளிப்பு, கசப்பு பதார்த்தங்களை வரிசையாக சாப்பிட்டு பின் நீர் அருந்த வேண்டும்.

பசு மாட்டை கோமாதாவாக எண்ணி, புல், தவிடு, தண்ணீர், புண்ணாக்கு, அகத்திரக்கீரை கொடுப்பது புண்ணியம்.

வீட்டுக்குள் நுழையும் போது தலைவாசல் வழியாகத்தான் நுழைய வேண்டும்.

நம்மை ஒருவர் கேட்காதவரையில் நாம் அவருக்கு ஆலோசனை கூறக்கூடாது.

இடது கையால் இருக்கையை தூக்கிப் போட்டால் ஆரோக்கியம் பாதிக்கும்.

இடது கையால் தலையில் எண்ணெய் தேய்த்துக் கொண்டால் பிள்ளைகளுக்கு பாதிப்பு வரும்.

இடது கையால் சாப்பாடு போட்டுக்கொண்டால் செல்வம் அழியும்.

ஒரு கையை தரையில் ஊன்றி சாப்பிடக்கூடாது.

மழை பெய்யும்போது ஓடக்கூடாது. நெருப்பை வாயால் ஊதக் கூடாது.

குடும்பஸ்தன் ஒரு ஆடை மட்டும் அணிந்து உணவு சாப்பிடக் கூடாது.

கன்றுக்குட்டியைக் கட்டி வைத்திருக்கும் கயிற்றை தாண்டக்கூடாது.

திருமணம் ஆகாமலே ஒரு பெண்ணுடன் வாழ்பவரை சுப காரியங்களில் முன்னிறுத்தக் கூடாது.

இருட்டில் சாப்பிடக் கூடாது. சாப்பிடும் போது விளக்கு அணைந்துவிட்டால் சூரியனை தியானம் செய்து மீண்டும் விளக்கேற்றி சாப்பிட வேண்டும்.

சாப்பிட்ட பின் குடும்பஸ்தன் வெற்றிலை போட வேண்டும்.

வெற்றிலை நுனியில் பாவமும், முனையில் நோயும், நரம்பில் புத்திக்குறைவும் உள்ளதால் அவற்றை கிள்ளி எறிந்திட வேண்டும்.

மனைவி கணவனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுக்கலாமே தவிர, கணவன் மனைவிக்கும், மகன் தாயுக்கும், மகள் தந்தைக்கும் மடித்து தரக்கூடாது.

குரு, ஜோதிடர், வைத்தியர், சகோதரி ஆகியோரை பார்க்கச் செல்லும் போதும், ஆலயத்திற்கு செல்லும் போதும் வெறும் கையுடன் செல்லக்கூடாது.

தீ உள்ள பொருட்களை, தரைமேல் போட்டு காலால் தேய்க்கக் கூடாது. பூமா தேவியின் சாபம் ஏற்பட்டு பூமி, மனை கிடைக்காமல் போய்விடும்.

பெற்ற தாய் சாபம், செய்நன்றி கொல்லுதல், பிறன் மனைவி கூடுதல், ஆகிய மூன்றும் பரிகாரம் இன்றி அனுபவித்தே தீர வேண்டிய பாவங்கள்.

உடல் குறைபாடுகள் உள்ளவர்கள், ஆறுவிரல் உள்ளவர்கள், கல்வியில்லாதவர்கள், முதியோர், வறுமையில் தவிப்பவர்கள் ஆகியோரின் குறையை குத்திக்காட்டி பேசக்கூடாது.

பசு மாட்டை காலால் உதைப்பது, அடிப்பது, தீனி போடாமல் இருப்பது பாவம்.

– நெ.ஆ. சிவகுருநாதன்,
S.R. நகர், சிதம்பரம்.
Cell : 9944419423

திருமுறைகள்

திருஞானசம்மந்தர் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்களை முதல் மூன்று திருமுறைகள்.

திருநாவுக்கரசர் அருளிச்செய்த திருப்பதிகங்கள் நான்கு, ஐந்து, ஆறும் திருமுறைகள்.

சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்த தேவாரம் ஏழாம் திருமுறைகள்.

மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகம் திருக்கோவையார் என்றும் இரண்டு நூல்கள் எட்டாந் திருமுறையாகவும் கொண்டது.

சைவ சாஸ்திரங்கள் மந்திரங்கள் பதினொன்று இதற்கு மேல் மந்திரம் இல்லை என்று உணர்ந்த நம்பியாண்டார் நம்பி திருமுறையை பதினொன்று ஆக வகுத்தற்கு காரணம் இதுதான்.

1. ஓம் ஈசநாய நம 2. ஓம் தத்புருஷாய நம 3. ஓம் அகோராய நம 4. ஓம் வாமதேவராய நம 5. ஓம் சத்யயோஜாதாய நம

இந்த ஐந்தும் பஞ்சபிரம்ம மந்திரம் ஆகும்.

1. ஓம் ஹிருதாய நம 2. ஓம் சிரேச நம 3. ஓம் சிகாயை நம 4. ஓம் கவசாய நம 5. ஓம் நேத்ரேய்யோந நம 6. ஓம் அஸ்த்ராய நம

இவை ஆறும் சடங்கு மந்திரம்

ஆக 5+6=11 மந்திரம் சேர்ந்து சம்மிதா மந்திரம் எனப்பெறும்.

ஏழு கோடி மந்திரம் என்பதில் கோடி என்றால் நூறு லட்சம் சேர்ந்தது என்று பொருளன்று. கோடி என்பதற்கு நுனி என்று பொருள். கோடி வீடு என்றால் தெருவின் நுனியில் உள்ள வீடு எனவே வழங்கப்படுகிறது அல்லவா.

நம, ஸ்வதா, ஸ்வாஹா, வஷட், சௌஷட், பட், ஹூம்பட் என்ற இந்த ஏழு மந்திரங்கள் ஏழு கோடி என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

விளக்கம்

ஒரு மருந்தை நோய்களுக்கு ஏற்றவாறு அனுபவங்கள் பலவற்றில் வைத்துத் தருவது மருத்துவ முறை.

லிங்க செந்தூரத்தை ஓம நீரில் தந்தால் சுரம் நிற்கும். இஞ்சி நீரில் தந்தால் பித்தம் நீங்கும் இவ்வாறு அந்த பானத்தை மாற்றி ஒரே மருந்தை தந்து நோய்களைத் தனிப்பது போல ஒரு மந்திரத்தை மேற் சொன்ன கோடிகளுடன் கூட்டி உச்சரித்தால் வெவ்வேறு பயனைப் பெறலாம்.

அஸ்ரதேவரை வணங்கும் போது ''அஸ்ராய நம'' என்று கூற வேண்டும்.

அஸ்ரதேவருக்கு ஒன்றைத் தந்து திருப்தி செய்விப்பதாயின் ''அஸ்ராய ஸ்வாக'' என்று கூறவேண்டும்.

ஒரு தீமையை விலக்குவதாயின் ''அஸ்ராய பட்'' என்று கூறவேண்டும்.

இவ்வாறு கோடிகளை மாற்றி மாற்றி மந்திரங்களுடன் உச்சரித்தால் பல நலன்கள் விளையும் எனவே ஏழு கோடிகள் உடன் கூடிய பதினொன்று மந்திரங்களுமே பதினோரு திருமுறைகள் ஆகும்.

சேக்கிழார் திருமுறை பாடல்களை சித்திரை திருவாதிரை நாளில் அரங்கேற்றினார் சிதம்பரத்தில். அநபாய சோழன் காலத்தில் திருமுறை சிதம்பரம் பொன்னம்பலத்தில் இருப்பதை தெரிவித்தது திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார்.

சுந்தரர் அவதரித்த இடம் திருமுனைப்பாடி சுந்தரருக்கு நம்பியூரார் (ஆரூரார்) என்ற பெயர் உண்டு.

– ம. வசந்தா.

கலியுகம்

பாரத போர் முடிந்து தர்மர் ஆட்சியில் இருப்பார் அவருக்கு துணையாக தர்மர்பிரியர், அர்ச்சுனன் பீமன், நகுலன், சகாதேவன், இவர்கள் பக்கதுணையாக இருப்பார்கள். ஒரு நாள் குதிரை வாங்க அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகிய 3 பேரும் சந்தைக்கு செல்கின்றனர், அப்போது ஒரு குதிரை அவர்கள் கண்ணில்படுகின்றன. குதிரை உரிமைகாரரிடம் குதிரை என்ன விலை கேள் எவ்வளவு விலையானாலும் கொடுத்து விட்டு வாங்கி கொள்கிறோம் என்று கேட்கிறார்கள். குதிரைகாரர் சொல்கிறார் இதற்கு விலையெல்லாம் இன்னும் நான் நிர்ணயிக்கவில்லை. ஆனால் ஒரு நிபந்தனை! நான் உங்களிடம் 3 கேள்விகள் கேட்பேன் அவற்றிற்கு விடையளித்துவிட்டு குதிரையை வாங்கி செல்லுங்கள்.

1) அர்ச்சுனனிடம் கேள்வி கேட்கிறார்? துணி தைக்கும் ஊசி உள்ளது அதில் உள்ள ஓட்டையில் யானை நுழைகிறது. ஆனால் அதன் வால் நுழைய முடியவில்லை ஏன்?

பதில் : அர்ச்சுனன் சிந்திக்கிறான், பீமன் மூலம் தர்மரிடம் விவரம் சொல்ல தர்மர் விடையளிக்கிறார். கலியுகத்தில் கெட்ட செய்தி காதுக்குள் சீக்கிரம் நுழைந்து சென்று விடும். நல்ல செய்தி காதுக்குள் செல்ல சிரமப்படும். கலியுகத்தில் நல்ல செய்தி ஏற்றுகொள்ள ஆகாது மதிக்கப்படவும் மாட்டார்கள்.

2)நகுலனிடம் கேள்வி? ஓரிடத்தில் ஒரு பக்கம் ஒரு கிணறு இருக்கிறது மறுபக்கம் 6 கிணறு இருக்கிறது ஒரு கிணற்று நீரை எடுத்து 6 கிணறுகளை நிரப்ப முடிகிறது. ஆனால் 6 கிணற்று நீரை எடுத்து 1 கிணற்றை நிரப்பமுடியவில்லை ஏன்? இவனும் சிந்திக்கிறான் என்று அறிந்து தர்மர் பதில் அளிக்கிறார், ஒரு கிணறு என்பது பெற்றோர்கள், ஆறு, கிணறு என்பது பிள்ளைகள், பெற்றோர் எத்தனை சிரமப்பட்டாலும் ஆறு குழந்தைகளையும் வருமையையும் மீறி தங்களால் இயன்றவரை குழந்தைகளை பராமரிப்பார்கள். ஆனால் வயதான காலத்தில் பெற்றோர்களை 6 பிள்ளைகளும் ஏன்? 10 பிள்ளைகள் இருந்தாலும் சரி தாயும் தந்தையும் தாங்கி பிடிக்க யாரும் முன் வருவதில்லை. அம்மா அண்ணன் வீட்டில் ஒரு மாதம் இருக்கட்டும் அப்பா தம்பி வீட்டில் ஒரு மாதம் இருக்கட்டும் என்று பாகபிரிவினை நடக்கும் காலம் வரும்.

3.கேள்வியை சகாதேவனிடம் கேட்கிறார் குதிரைகாரன். ஒரு வயலில் முற்றிய நிலையில் கதிர்கள் இருக்கின்றன. அவற்றை ஆடு, மாடுகள்

மேயாத வண்ணம் சுற்றிலும் வேலி அடைக்கப்பட்டு இருக்கிறது மறுநாள் வயலை பார்க்கும் போது வயல் முழுவதும் கதிர்களை மேய்ந்த வண்ணம் உள்ளது ஏன் ? சகாதேவனுக்கும் விடை தெரியவில்லை.

தர்மர் சொல்கிறார். இந்த வேலி என்பது ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் தான் ஆனால் வயலில் விளைந்து நிற்கும் கதிர்கள் மக்கள். "பழமொழி என்று உண்டு" "வேலியே பயிரை மேய்ந்த" கதை ஒன்று உள்ளது. அந்த பழமொழி மக்கள் கலைத்து இருக்கும் நேரத்தில் நெற்கதிர் விளைந்து நிற்கும் நேரத்தில் அதிகாரிகளாலும், ஆட்சியாளர்களாலும் மக்கள் சுரண்டபடுவார்கள் துன்பத்திற்கு உள்ளாக்குவார்கள்.

- Lion. இல. ராமசெல்வம்.

9750806991

பாடல் பெற்றத் தலங்கள் என்றால் என்ன?

தி. கபீர்தாஸ், சிதம்பரம். 9445473356

பாடல் பெற்றத் தலம் என்றால், ஞானசம்பந்தர், நாவுக்கரசர் (அப்பர்), சுந்தரர் இவர்களில் யாராவது ஒருவர் ஒரு ஊருக்குச் சென்று இறைவன் மீது பதிகம் பாடிய ஊர்தான் பாடல் பெற்றத்தலம். மற்ற அருளாளர்கள் எந்த ஊர் இறைவனைப் பற்றி பாடினாலும் அவ்வூர் பாடல் பெற்றத் தலம் ஆகாது.

ஒரு காலத்தில் இம் மூவரும் தனித்தனியே பல ஊர்களுக்குச் சென்று பதிகம் பாடி சைவ சமயத்தையும், தமிழ் மொழியையும் வளர்த்தார்கள். சம்பந்தரும், அப்பரும் சமகாலத்தவர்கள் இருவரும் சேர்ந்தே சில ஊர்களுக்குச் சென்று பதிகம் பாடியுள்ளார்கள். இவர்களது காலம் 7–ஆம் நூற்றாண்டு.

சிவனை வழிபடுபவர்கள் சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் வழிபடும் நூல் "பன்னிருதிருமுறை" இந்நூல் 12 தொகுதிகளாக தொகுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய மூவரும் பாடிய பாடலுக்கு "தேவாரம்" என்று பெயர். இது 795 பதிகங்களாகும்.

தேவாரம் முதல் ஏழு தொகுதிக்குள் அடங்கும். சம்பந்தர் தேவாரம் 1, 2, 3 தொகுதிகள் அப்பர் தேவாரம் 4, 5, 6 தொகுதிகள் சுந்தரர் தேவாரம் 7–ம் தொகுதி. இந்த 7 தொகுதிகளில் கூறப்பட்ட ஊர்களே பாடல் பெற்றத் தலங்கள்.

மூவரும் பாடியத் தலங்கள் எத்தனை என்று தெரியவில்லை. சோழ அரசன் ராஜராஜன் அதனைக் கண்டுபிடிக்க முயன்ற பொழுது பல சுவடிகள் செல் அறித்து அழிந்து போயிருந்தன. எஞ்சிய தலங்கள் 274, பிற்காலத்தில் 2 தலங்கள் கண்டுபிடிக்கப்பட்டது. ஆக மொத்தம் 276.

இந்த தலங்களை 10 தொகுதிகளாக பிரித்துள்ளனர். அவைகள் வருமாறு :

சோழ நாடு காவிரி தென்கரைத் தலங்கள் 127, சோழ நாடு காவிரி வடகரைத் தலங்கள் 63, தொண்டை நாடு 32, நடு நாடு 22, பாண்டிய நாடு 14, கொங்கு நாடு 7, வட நாடு 5, ஈழ நாடு 2, மலை நாடு 1, துளுவ நாடு 1, புதிய கண்டுபிடிப்பு 2

ஆக மொத்தம் 276. கிடைத்த பதிகங்கள் 795 ஆகும்.

இதை போலவே வைணவர்கள் 12 ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்த ஊர்கள் "108 திவ்விய தேசம்" எனக் கூறுகிறார்கள். இவர்கள் வழிபடும் நூல் "நாலாயிர திவ்விய பிரபந்தம்".

மேற்கண்ட செய்தியினை பலர் அறிந்திருப்பார்கள். சிலருக்கு புதியனவாய் இருக்கும். இது பற்றிய செய்திகளை அறிந்து கொள்ள பல பதிப்பகத்தார்கள் விளக்கமாகவும் சுருக்கமாகவும் பல விலைகளில் வெளியிட்டிருக்கிறார்கள். விளக்கமாக தெரிந்து கொள்ள வேண்டுமானால் வர்தமானன் பதிப்பக வெளியீடே சிறந்தது. அது சுமார் 400 பக்க அளவில் தல வரலாறு. இறைவன் இறைவியின் பெயர்கள், தீர்த்தம், தல மரம், எப்படி வழிபடுவது, அவ்வூர் எங்குள்ளது. எப்படி செல்வது, கோவில் தொலைபேசி எண் போன்ற பல விவரங்கள் அடங்கிய நூல்.

பாடல் பெற்ற தலங்களை நீங்கள் தரிசிக்க விரும்பினால், ஒரு சுற்றுலா மையம் மூலம் செல்வதே சிறந்தது. அதனால் நேரம், காலம், செலவு குறையும். அவர்களுக்கு அதே தொழில் திறம்பட திட்டமிட்டபடி காரியத்தை கச்சிதமாய் முடிப்பார்கள்.

இவர்களிடம் நீங்கள் பங்கு கொண்டால் இந்த 276 தலங்களை சில ஆண்டுகளில் கண்ணாரக் கண்டு இறையருள் பெற்று யாத்திரையை இனிது பூர்த்தி செய்வீர்கள். என்ன யோசனை, காரியத்தில் இறங்கலாமே ! இறையருள் பெறலாமே !!

ஆடுர் அமரர் **R. கனகசபை** பிள்ளையின் இளைய குமாரர்

கார்குலத்தின் ஆலமரம் அமரர் **R.K.S. பிள்ளை**யின்

ஆறாம் ஆண்டு நினைவு அஞ்சலி



அமரர் **R.K.S. சிவக்குமார் பிள்ளை**

கீ.ஆடுர் சிதம்பரம்

என்றும் தங்கள் நினைவில் வாழும்

குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள்

நண்பர்கள்

சிதம்பரம்



SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM
SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION

WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

CUT DOWN YOUR ELECTRICITY COST

MARUTHI POWER CONTROL SYSTEM

CALL US @ 9841828077

Email - senthil@maruthipower.com

www.maruthipower.com



S.SELVAKUMAR - C.E.O

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
15.03.1968

மறைவு
14.08.2018

தெய்வத்திரு. **வே. வெங்கடேஸ்வரன்,** M.E. (Civil)

(Senior Lecturer, A.V.C. Polytechnic College)

தண்ணீர் இல்லாத குளத்தில்
தத்தளிக்கும் மீன் போல என்
தந்தை இல்லாத உலகில்
தவிக்கிறேன் நான்

..... அன்புக்காக

பிரிவால் வாடும்

மனைவி – **ஏ. உமாஜோதி**

மகன் – **வெ. விஷ்ணுபிரசாத்**

மற்றும் **குடும்பத்தினர்**

மயிலாடுதுறை

செல் : 94 89 26 19 34

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்ந்தது
02.09.1960

உதிர்ந்தது
17.08.2020

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், T.நெடுஞ்சேரி
திருமிகு.S.வைத்திலிங்கம் பிள்ளை – தெய்வத்திருமதி சுப்புலெட்சுமி அம்மாள்
அவர்களின் இளையமகன்

தெய்வத்திரு. V. இராஜேந்திரன் B.Sc.,

ஆண்டுகள் மூன்று கடந்ததற்கே
அத்துனைப் பொழுதும் உன் நினைவுகளே!
அப்பா ! அருகில் இருந்திருந்தால்
எப்படி இருக்குமென்று எண்ணுகின்றோம் !
நினைத்து நினைத்து நெஞ்சம் கனக்கிறது !
நினைவலைகளில் மூழ்கி தவிக்கிறது !
என்றென்றும் உங்கள் வழியே....

என்றும் நீங்காத நினைவுகளோடு....

சகோதரர்.
V.நடராஜன் - தையல்நாயகி
உரம், நெல், அரிசி வணிகம்.
T.நெடுஞ்சேரி,
சிதம்பரம் வட்டம்.

பேத்தி :
R.மேக்னா

திருமதி. **R.தங்கமலர்** (மனைவி)
மகள் - மருமகன் :
R.அகல்யா B.E.,-**இராமலிங்கம்** B.Tech.,
R.அஞ்சனா B.E.,
R.அனிதா B.E.,

வருந்துகிறோம்



தோற்றம்
22–7–1957

மறைவு
18–6–2023

தெய்வதிரு. **இரா. முத்துக்குமரன் பிள்ளை** அவர்கள்
தலைமை ஆசிரியர் (ஓய்வு)

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோவில் வட்டம் நெய்வாசல் கிராமத்தை சேர்ந்த தெய்வத்திரு. மு. இராஜரத்தினம் பிள்ளை – சரஸ்வதி இவர்களின் இரண்டாவது குமாரரும் எங்களுடைய சகோதரரும் திருமதி. M. விஜயா அவர்களின் கணவரும் எங்களுடைய தந்தையார் **இரா. முத்துக்குமரன் பிள்ளை** அவர்கள் 18–6–2023 அன்று சிவலோக பதவி அடைந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தன்னலம் கருதாது! ஊருக்காக அயராது உழைத்து!
உறவுகளுக்குக்கெல்லாம் அடைகலமாய் திகழ்ந்து!
இனி நீங்கள் என்றும் தெய்வமாய் இருந்து ! எங்களை காத்தருள
வேண்டுகிறோம் தந்தையே

என்றும் உங்கள் நினைவோடு வாழும்

மனைவி **M. விஜயா**

மகன்: **மு. பிரதீப் இராஜரத்தினம்.** BE

மகள் : **மு. திவ்யலெட்சுமி,** BE
மருமகன் : **மு. பார்த்திபன்,** BE
பெயர்த்தி **பா. அனிகா**

சகோதரர்கள் :
நடனம் - R. **அகிலா, கனகசபை** - R. **விஜயா** , R. **பரணிதரன்.**

புகழஞ்சலி



தோற்றம்
20.01.1952

மறைவு
31.05.2023

திருநாங்கூர்,

திருமதி. சித்ரா நடராஜன் அவர்கள்

திருவிசநல்லூர் ஈன்றெடுத்த திருமகளே !
திருநாங்கூரின் நல்லதோர் மருமகளே !
உறவுகளை உயிரெனவே நினைத்திடுவாய் !
ஊரவரை உணர்வெனவே மதித்திடுவாய் !
அறச்செயலை என்றென்றும் செய்திடுவாய் !
ஆலயவழிபாட்டை ஆர்வமாய் புரிந்திடுவாய் !
இடைப்பொழுதில் எம்மைவிட்டு பிரிந்துவிட்டாய் !
இதயம் முழுவதும் சோகத்தை நிறைத்துவிட்டாய்

பிரிவால் வாடும் :

கு. நடராஜன் மண்டல மேலாளர்
ஜீவா போக்குவரத்துக்கழகம் பணி நிறைவு
ந. தியாகராஜன் (எ) சுரேஷ் மதுரை
அமுதா தியாகராஜன்
தி.சுவாதிகா

புகழஞ்சலி

மணிக்கிராமம் **M.S.ஜெயராமன் பிள்ளை**

கூட்டுறவு சார்பதிவாளர் (ஓய்வு)



மலர்ந்தது :
14.08.1931

உதிர்ந்தது:
03.07.2023

கடமையை கடவுளாய் நினைத்திட்டார்
கண்ணியமாய் வாழ்வை நடத்திட்டார்
கட்டுப்பாட்டுடன் என்றுமே வாழ்ந்திட்டார்
கனிவுடனே உறவுகளை மதித்திடுவார்
கருணையுடன் உழைப்பவருக்கு உதவிடுவார்
கண்தானம் அளித்திட்ட வள்ளல் இவர்
கூட்டுறவுத் துறையின் அங்கம் இவர்
நேர்மை தவறாத சிங்கம் இவர்
நிறைவாழ்வு வாழ்ந்திட்ட நெறியாளர்
நினைவெல்லாம் நிறைந்திட்ட நேர்மையாளர்
தலைமுறைகள் மூன்றினை கண்டவர்
தனித்துவமாய் மனதிலென்றும் நின்றவர்

பிரிவால் வாடும் ....

மகள்கள் :

J. மலர்கொடி - சம்பத்குமார்
J. விஜயா - செல்வகுமார்

மகன்கள் :

J. மனோகரன்- லதா
J. மோகன்- சித்ரா

பேரன்கள், பேத்திகள் மற்றும் கொள்ளு பேரன்கள், பேத்திகள்

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
01.05.1943

மறைவு
14.08.2022

C. சொக்கலிங்கம் பிள்ளை

கடலூர் மாவட்டம், சிதம்பரம் தாலுக்கா, எண்ணநகரம், தெய்வத்திரு. P. சிதம்பரம் பிள்ளை – அம்புஜம் அம்மாள் அவர்களின் மகனும், திருமதி. கஸ்தூரி அவர்களின் ஆருயிர் கணவரும், எங்களது அன்புத் தந்தையுமான ஸ்ரீமுஷ்ணம் மருங்குட கோத்திரம்

திரு. **C. சொக்கலிங்கம் பிள்ளை** (கீரமங்கலம்) அவர்களின்

முதலாம் ஆண்டு நினைவு நாளில் (14.08.2023) அன்புடன் நினைவு கூர்ந்து வழிபடுகிறோம்.

தங்கள் நினைவில் வாழும்

மனைவி : திருமதி. **கஸ்தூரி சொக்கலிங்கம்**

மகன்கள்
C. பாஸ்கர்
C. கண்ணன்

மகள்கள்
R. சரஸ்வதி
N. ஜெயந்தி

மருமகள்கள்
B. சந்திரவித்யா (லேட்)
K. இராதை

மருமகன்கள்
K. ராமநாதன்
M. நமசிவாயம்

பேரப்பிள்ளைகள்
R. காயத்ரி
B. அரவிந்த்
K. பிரியங்கா
K. பிரீத்திகா
N. ஷ்வேதா
N. சுப்ரியா

55, சன்னதி தெரு, ஸ்ரீமுஷ்ணம் 608 703. செல் : 99620 29952

Posted at Pathrikachanel, Egmore
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH(C) / 405 /2022 - 2024 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/22-24
Date of Publication : 15th of Every Month
15th / 16th August 2023

CHOZHA HOTELS

Hotel Kanakabhishegam
First Hotel From The Temple



Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

Published by : K. SHANMUGAM, on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**